திருவரங்கச் சிறப்பிதழ்



கல்கி

KALKI
15.3.87
ரு. 1.50



"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித்தர நான் முடிவுசெய்தது ஏனென்றால்."

அந்த நாட்கள் எனக்கு இன்றும் நினைவிருக்கு. அப்போது எனக்கு என் மகள் வயதிருக்கும். மாதத்தில் அந்த 5 நாட்களை எத்தனை கடினமாக கடந்தேன்... சங்கடம். தொல்லை. சிரமம். அதைவிட மோசம் என்னவென்றால் எங்கள் காலத்தில் வீட்டுத் தயாரிப்புகளையே உபயோகித்தோம். அது தர்மசங்கடமாயிருக்கும். அதைத் துவைத்து காயப் போட்டு போதும் போதும் என்றாகிவிடும். ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது.

நான் வாழ்ந்த காலம் வேறு. அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட காலத்தில் வாழ்கிறாள் என் மகள். இக்காலப் பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட மிகத் துடிப்போடு செயல்பட வேண்டியுள்ளது. எங்கள் காலத்தை விட இப்போது, மாறிவரும் உலகிற்கேற்ப பன்மடங்கு சுறுசுறுப்புடன் இயங்க வேண்டியுள்ளது. ஆகவேதான், என் மகளுக்கு நான் கேர்ஃப்ரீ தேர்ந்தெடுத்தேன். காரணம், நான் இளம் பெண்ணாக இருந்தபோது அனுபவப்பட்டதைப் போல், என் மகளும் சிரம்ப்படக் கூடாதல்லவா.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். நான் அந்தக் காலத்தில் செய்தது போல் என் மகள் துவைத்துக் காயப் போட்டு சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையானபோது ஒவ்வொரு முறையும் புத்தம் புதிய சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம். ஒரு தாயாகிய எனக்கு எது முக்கியம் என்றால், கேர்ஃப்ரீ மிகமிக சுகாதாரமானது என்பதுதான்.

உலர்வும் சுகமும்

அது, கனமில்லாமல் மெல்லியதாக அடக்கமாக இருந்தாலும் என் மகளுக்கு தேவையான பாதுகாப்பைத் தருகிறது. மாத விலக்கை நாப்கினுள் விரைவாக உறிஞ்சிக் கொள்ளக்கூடிய அது, நன்கு அதிகம் உறிஞ்சும் அடுக்குகள் கொண்டது. அது எப்போதுமே உலர்வான உணர்வோடும் வசதியாகவும் வைத்துக்கொள்வதாக என் மகளே கூறுகிறாள். அது மட்டுமா, கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜும் (கூடுதலான பெரிய நாப்கின்) உள்ளது.

நீண்ட, அகன்ற, துடிப்பான கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ், அவளுக்கு கூடுதல் பாதுகாப்பையும் பத்திரமான உணர்வையும் அளிக்கிறது— அந்த சங்கடமான நாட்களில் அல்லது அவளுக்கு



அது தேவைப்பட்டபோது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் வெளியில் சென்று சுற்றி வந்தாலும்கூட அவள் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் உணர்கிறாள்.

ஆகவேதான், எங்கள் காலத்தில் கிடைக்காத ஒன்றை என் மகளுக்குத் தர முடிவதை எண்ணி பூரிப்படைகிறேன்··· அதுதான் கேர்ஃப்ரீ வசதி...கேர்ஃப்ரீ பாதுகாப்பு. மாறிவரும் காலத்தோடு நாமும் மாற வேண்டாமா!

கேர்ஃப்ரீ சானிட்டரி நாப்கின் - இன்றைய மாறிவரும் உலகிற்கேற்ற முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு



10 உள்ள பேக்கிலும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கிடைக்கிறது

கேர்ஃப்ரீ. காரணம், காலம் மாறுவதற்கேற்ப அவளும் மாறுகிறாள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

OBM/9072/TAM


கல்கி
ஏப்ரல் 12
புத்தாண்டு
சிறப்பிதழில்
இலக்கியப்
பரிசு
பெற்ற
"இரும்புகுதிரைகள்"
மூலம்
வாசகர்களின்
இதயங்களைக்
கவர்ந்த
பாலகுமாரன்
எழுதும்
புதிய
தொடர்கதை
நிழல் யுத்தம்
ஆரம்பமாகிறது

மாமியாரை நினைவூட்டிய மெக்கானிக்!

* சாலையோர மெக்கானிக்குகள் பற்றிய கட்டுரையில் "ஸீனியர்,தான் மெக்கானிக்கிடம் வாங்கிய அடிகளை ஜூனியருக்கு ஒன்று விடாமல் அர்ப்பணிப்பான்" என்ற வரிகளைப் படித்ததும், பெண்கள் தங்கள் மாமியார்களிடம் பட்ட துன்பங்கள், அடிகள், ஏச்சு பேச்சுக்களை எல்லாம் ஒன்றுவிடாமல் தங்களுக்கு வாய்க்கும் மருமகளிடம் மறக்காமல் திருப்பிப் பிரயோகித்து வரும் சம்பவங்கள்தான் ஞாபகத்திற்கு வந்தன.

பெங்களூர் — 21. சூழ்க்கோமான்.

* ஸ்கூட்டர் சிறப்பிதழில் என்னை ரொம்பவும் கவர்ந்திழுத்தவை ஒவ்வொரு கட்டுரைக்கும் கொடுக்கப்பட்டிருந்த தலைப்புகள்தான். அனைத்தும் அம்சம்.

மதுரை. செ. ம. கு. மாலதிப்ரியன்.

* "பொன்னான நேரம் வீணாவதை யாரும் விரும்பவில்லை; அதனால் லஞ்சம் கொடுத்து காரியத்தைச் சீக்கிரம் சாதித்துக் கொள்கிறார்கள்" என்கிறார் ஆர். ஜே. ஆர்.

— லஞ்சம் கொடுத்தால் மட்டும் வேறு ஆளா வந்து வேலை செய்யப் போகிறார்? அங்கு பணிபுரிபவர் தானே (லஞ்சம் வாங்கிக் கொண்டு) துரிதமாகச் செயல்படுகிறார்?

குடியாத்தம். கே. பட்டாபிராமன்.

* 'அரசு அலுவலகமா மக்களைச் சுரண்டும் அலுவலகமா?' என்று கேட்கும் அளவுக்கு, இன்றைய அரசு அலுவலகங்கள் மாறி வருகின்றன. பொது மக்கள் தான் இதைப் பழக்குகிறார்கள் என்பதில் ஓரளவு உண்மை இருந்தாலும் பேரளவு உண்மை என்ன தெரியுமா? 'உன் வேலை ஆக வேண்டுமானால் இவ்வளவு கொடு. முடியா விட்டால் எங்கு வேண்டுமானாலும் போய்க் கொள். ஆனால் ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள். திரும்பி நீ என்னிடம்தான் வரணும்' என்று அலுவலர்கள் மிரட்டுகிறார்கள். பொது மக்கள் என்ன செய்ய முடியும்?

கத்திரிப்புலம். இராம. ஜோதிவேல்.

* இரண்டு சக்கர வாகனச் சிறப்பிதழ் வாசகர்கள் எல்லோருக்கும் பயன்பட்டது என்று சொல்ல முடியாது. என்றாலும் வாகனங்கள் பற்றியச் செய்திகளைப் பொதுவாகத் தெரிந்து கொள்ளப் பயன்பட்டது என்பது உண்மை.

பெங்களூர். ப. மூர்த்தி.

* ஸ்கூட்டரை மையமாக வைத்து எழுதப்பட்ட நகைச்சுவை நாடகம் பொருத்தமாகவும் ரசிக்கும் படியாகவும் அமைந்துவிட்டது.

தஞ்சாவூர் — 7. அ. சம்பத்.

* "வாங்குபவருக்கு என்ன வேதனை? விற்பவருக்கு என்ன பிரச்னை?" என்ற தலைப்பின் கீழ் வெளியான கலந்துரையாடலில் ஐந்து நபர்கள் மட்டும் கலந்துரையாட, புகைப்படத்தில் அறுவர் இருக்கிறார்களே! மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே?

கோடிக்கரை. எல். சாந்தினி.

* மறைந்த முன்னாள் முதல்வர் பக்தவத்சலத்தின் தனிச் சிறப்புகளோடு அன்னாரின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற தூய்மையான நிர்வாகம், தன்னலம் பாராது பொது நலத்தோடு தலைவர்கள் உழைத்த திறன் பற்றித் தலையங்கத்தில் சிறப்புற எழுதி ஒரு வித்தியாசமான முறையில் அஞ்சலி செலுத்தியிருக்கும் 'கல்கி'யின் பாணியே தனிதான்!

பண்ருட்டி. எல். தமீஜுதீன்.

* டூ வீலருக்கு எல்லாம் ஒரு சிறப்பிதழா! என்று அலட்சியமாகக் 'கல்கி'யைப் பிரித்தேன். அடேயப்பா! நீங்களும், உங்களது வாசகர்களும் சேர்ந்தே அசத்தி விட்டீர்கள். பாராட்டுக்கள்.

காரைக்கால். பி. தனபால்.

* வண்டிகளை வாங்க, விற்பனையாளரிடம் பதிவு செய்யும்பொழுது, முன்பணமாக ஐந்நூறு ரூபாய் செலுத்தச் சொல்கிறார்கள். எதிர்பாராதவிதமாக, வண்டியை ,வாங்க முடியாத சூழ்நிலை வந்துவிட்டால், இந்த முன்பணத் தொகையைத் திரும்பப் பெற படாதபாடு பட வேண்டியிருக்கிறது! தயாரிப்பு நிறுவனம் விற்பனையாளரைப் பார்க்கச் சொல்லுகிறது, விற்பனையாளர் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்கிறார்! என்னைப் போன்ற பலருக்கு இதே பிரச்னை!

துறையூர். எஸ். நீலகண்டன்.

* கல்கி 'டூ வீலர் ஸ்பெஷல்' பார்த்தேன். ஹெல்மெட்டை, டூ வீலர் ஓட்டுபவர்கள் வெறுப்பதற்கு முக்கியக் காரணம், அவர்கள் வண்டியை நிறுத்திவிட்டுக் கடை அல்லது காரியாலயத்துக்குச் செல்ல வேண்டியிருந்தால், ஹெல்மெட்டைக் கையோடு சுமந்து போக வேண்டியிருப்பதுதான். வண்டியில் வைத்துப் பூட்டிச் செல்ல இப்பொழுது இருக்கும் சாதனங்கள் ஹெல்மெட்டில் இருக்கும் 'வாரை' மாத்திரமே கொக்கி போட்டுப் பூட்டும் விதத்தில் அமைந்துள்ளன. இது பாதுகாப்பான ஏற்பாடு அல்ல. திருட்டுப் போவது எளிது. ஆனால் நான் தயாரித்துள்ள புது வகையான ஹெல்மெட் பூட்டு நூறு சதவிகிதம் பாதுகாப்பானது. இந்தப் பூட்டுடன் சேர்ந்தே, சைட் மிரரும் உண்டு. இதை ஹாண்டில் பாரில் பொருத்திவிட்டால், அதில் ஹெல்மெட்டை வைத்துப் பூட்டி விட்டு நீங்கள் தைரியமாக எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். உங்கள் ஹெல்மெட்டை யாருமே வெளியே எடுக்க முடியாது, நீங்கள் சாவி போட்டுத்திறந்தாலொழிய. இந்தப் பூட்டைப் பற்றி மேலும் விவரமறிய விரும்புகிறவர்கள், கீழ்க்கண்ட : என் முகவரிக்கு எழுதித் தொடர்பு கொள்ளலாம்.

வி. ரவீந்திரன்,
ஷீட்மெட்டல் பிராடக்ட்ஸ்,
2,ஏ, வடக்கு ஸ்டேஷன் சாலை,
பல்லாவரம், சென்னை—600 043.



• கலசங்கள்

ஆசியாவிலேயே உயரமான கோபுரம்!



• ராஜகோபுரம்

ஸ்ரீரங்கம் கோயில் கோபுரத்தைச் சிறப்பான முறையில் கட்டி முடித்த எம்.எஸ். சிவப்பிரகாச ஸ்தபதியாரின் அலுவலகத்தில் நுழைகிறோம். சாதாரண கீற்றுக் கூரை; சிமெண்ட் கூடப் போடாத செங்கல் பாவியதரை. "முதலில் கோபுரத்தைப் பார்த்துவிட்டு வாருங்களேன். பிறகு நாம் அது பற்றிப் பேச வசதியாக இருக்கும்" என்றார்.

அவருடைய உதவியாளர் உடன்வர, 'விஞ்ச்' மூலம் கோபுரத்தின் முதல் நிலையை அடைகிறோம். வாட்டசாட்டமான துவாரபாலகர்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்கள். ஸ்ரீரெங்கநாதர் சுதைச் சிற்பம், விமானத்துடன் கூடிய ஸ்ரீ ரெங்கநாயகித் தாயார் நம் மனத்தை மகிழ்விக்கிறார்கள். கருடாழ்வார், ஆஞ்சநேயர், கஜலட்சுமி மற்றும் பல திருவுருவங்கள் அற்புதமாய் அமைக்கப்பட்டுள்ளன. பல நிலைகளைக் கடந்து பதின்மூன்றாவது நிலையின் விமானத்தின் மேல் உள்ள பதின்மூன்று கலசங்களின் அருகில் போய் நின்று பார்த்தால், ஸ்ரீரங்கத்தின் அழகை வித்தியாசமான கோணத்தில் பார்க்க முடிகிறது. மலைக் கோட்டையைவிட அதிகமான உயரத்தில்— ஆசியாவிலேயே உயரமான கோபுரத்தின் உச்சியில் — நின்று கீழே பார்க்கும்போது இதயத் துடிப்பு அதிகமாகிறது. விமானத்தின் அழகான, அளவான, வண்ணப் பூச்சில் மனம் பரவசப்படுகிறது.

அரை மணி நேரத்தில் மீண்டும் ஸ்தபதியாரைச் சந்திக்கிறோம். "சிற்பக்கலை பேரரசு" என்று வாரியார் சுவாமியால் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ள வரும் நாற்பத்தைந்து வயதேயானவருமான சிவப்பிரகாச ஸ்தபதி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கோயில் கந்தன் குடி என்ற கிராமத்தில் பிறந்தவர். குடும்பச் சூழ்நிலை காரணமாக ஐந்தாம் வகுப்பு வரை தான் பள்ளியில் படித்தார். பிறகு கட்டட வேலை செய்வோரிடம் சித்தாளாக வேலை பார்த்தார். அப்போது இவருக்குத் தினக் கூலி இரண்டணா!



• சிவப்பிரகாச ஸ்தபதி

கேள்வி: ஸ்தபதியாக எப்போது



முதல் நிலையிலுள்ள சுதைச் சிற்பம்.

மாறினீர்கள்?

பதில்: இராமையா, வி.டி. இராஜன், கே. சின்னையா, முத்துவேல் ஆகிய என் வணக்கத்திற்குரிய ஸ்தபதியார்களிடம் சிற்ப வேலைகளைக் கற்றுக் கொண்டேன். இப்பணியில் எனக்கு 34 ஆண்டுகள் அனுபவம் உண்டு.

கேள்வி: ஸ்ரீரங்கம் கோபுரத்தைப் பற்றி...?

பதில்: 236 அடி உயரமும் கிழக்கு மேற்கில் 165 3/4 அடி அகலமும் தெற்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. எடை ஒரு லட்சத்து இருபதாயிரம் டன்கள். பதின்மூன்று நிலைகளில் எதிலும் வௌவால்கள் நுழைய முடியாதபடி கம்பிக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தில் உள்ள பதின்மூன்று செப்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் 10½ அடி உயரமும், 5½ அடி பருமனும் 135 கிலோ கிராம் எடையும் கொண்டது. மூன்று இடிதாங்கிகள் உள்ளன. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நாளும் சுமார் இரு நூறு கலைஞர்களும், தொழிலாளிகளும் இணைந்து உழைத்து, கோபுரத்தை நிர்மாணித்துள்ளார்கள்.

கேள்வி: இக்கோபுரம் கட்டும்போது உங்களை வியப்பில் ஆழ்த்தும்படி ஏதாவது நடந்ததுண்டா?

பதில்: எங்களுக்கு வேண்டிய தளவாடச் சாமான்களில் 99 சதம் திருச்சி மாவட்டத்திலேயே கிடைத்தன. ஆச்சர்யமான விஷயம் தான். இதற்கு முன்பு நான் ஏற்றுக்கொண்ட பணிகள் எதிலும் காணமுடியாத வசதி இது! இந்தப் பணியை ஒவ்வொரு நாளும் தொடங்கும் முன் நான் ஸ்ரீரெங்கநாதரைப் பிரார்த்தித்துக் கொள்வேன். ஸ்ரீரங்கத்தின் பிரதான வாயில் இது! ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் நடமாடும் இடம். செங்கல், மணல் போன்றவற்றைச் சேமித்து வைத்துக் கொள்ளத் தனியாக இடம் எதுவும் இல்லை. ஆயினும் ஒருநாள் கூடப் போக்குவரத்தை நிறுத்தி வைக்காமலும் பொது மக்களுக்கும் எங்கள் சிற்பக் கலைஞர்கள், தொழிலாளர்களுக்கும் சிறுபாதகம்கூட ஏற்படாமலும், இப்பணி நடந்து முடிந்திருக்கிறது. அதை இப்போது நினைத்துப் பார்த்தால் எனக்கு ஆச்சர்யமாகவே இருக்கிறது. ஆனால் திருப்பணி நடந்த காலத்தில், காரியம் விக்னமின்றி நடக்க வேண்டுமே என்ற பயவுணர்வு இருந்து கொண்டே இருந்தது.

கேள்வி: கோபுரத்தில் சுதை வேலைப்பாடுகள் அதிகமில்லையே?


பதில்: சுதைச் சிற்பங்கள் சுமார் இரு நூறு உள்ளன. இவை சிற்ப சாஸ்திர முறைப்படி அமைந்தவை. ஆனால் இந்தக் கோபுரத்தின் உயரத்தை நோக்க, இது குறைந்த எண்ணிக்கைதான்! இதற்கு நேரமின்மையும் நிதி வசதி இன்மையுமே காரணங்கள். ஆனால் ஒன்று. கோபுரத்தை அதிகமான சுதைச் சிற்ப உருவங்கள் இன்றி நுணுக்கமான கலை வேலைப்பாடுகளுடன் அமைப்பதிலும் ஓர் அழகுண்டு!

கேள்வி: கடைசியாக ஒன்று. கோபுரத்தில் விரிசல் காணப்படுவதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே....?

பதில்: ஒரு நல்ல காரியம் நடக்கும்போது இந்தச் செய்தி படிப்பவர்களைப் புருவம் உயர்த்தச் செய்தது. ஒரு நிபுணர் குழு ஆராய்ந்து, ''இதனால் பொதுமக்களுக்கோ, கோபுரத்திற்கோ ஆபத்து ஏதுமில்லை'' என்றது. தேவையில்லாமல் ஒரு பரபரப்பு ஏற்பட்டதுதான் மிச்சம்.


பேட்டி: வி.எஸ். ஆர்.

அவர்: ஜெயிச்சு எம்.எல்.ஏ. ஆகி நாலு வருஷமாகுதே தொகுதிப் பக்கம் கொஞ்சம் எட்டிப் பார்க்கக் கூடாதா?



எம்.எல்.ஏ.: அதுக்கு நான் என்னய்யா பண்ணட்டும்? திடீர்னு அந்த ஏரியாவுல குடிக்கத்தண்ணி இருக்கா? திடீர்னு உடம்புக்கு முடியலேன்னு ஒரு ஆஸ்பத்திரி இருக்கா? ஒரு ஊருக்காவது என் கார் போகக் கூடிய விதத்தில் ஒழுங்கான ரோடு உண்டா...? முதல்ல இதையெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டு அப்புறமா வந்து கூப்பிடுங்க, வர்றேன்!

— சுரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



daCunha/GCM/135/86 TAM


அகாலிதளம் (லோங்கோவால் பிரிவு) நீக்கிய மதத்தின் உண்மையான தத்துவங்களைப் பிரச்சாரம் செய்யப் போகிறது!
அகாலி தளம்
மதபீடம்
பயங்கரவாதிகள்
மத்திய அரசு பட்ஜெட்
டம்ளர் தான் பெரிசு!... சொட்டுத் தண்ணி இல்லே!
குடி நீர்த் திட்டங்கள்




கல்கி

1987 மார்ச் 15

மலர் 45 இதழ் 33

அக்ஷய பங்குனி 1



ராஜதந்திரம் தேவை; ராணுவ பலம் அல்ல!

'டிசம்பர் — 19 சமரசத் திட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா அரசு திசைமாறிவிட்டது' என்பது இந்திய அரசின் குற்றச்சாட்டு.

டிசம்பர் — 19 அறிக்கையின் அடிப்படையிலேயே பேச்சு வார்த்தைகளைத் தொடரலாம்; ஆனால் அதற்கு முன்னால் ஈழப் போராளிகள் ஆயுதங்களைத் துறக்க வேண்டும். போராட்டத்தை நிறுத்த வேண்டும்' என்பது ஈழ அரசின் நிபந்தனை.

ஈழப் போராளிகளோ, 'நாங்கள் எப்போது ஆயுதங்களைக் கீழே இறக்குவோம் என்று காத்திருந்து ஈழ அரசு வஞ்சகமாக ராணுவத்தை ஏவி எங்களை மட்டுமின்றி தமிழினத்தையும் அழிக்க முயல்கிறது. எங்களைச் சிறுமைப்படுத்துகிற இந்த நிபந்தனைகளை ஏற்க முடியாது' என்கின்றனர்.

இதற்கிடையில், தமிழ் ஈழப் பகுதிகளில் முற்றுகை தொடர்கிறது; பெட்ரோலியப் பொருள்கள் தமிழர்களுக்கு மறுக்கப்படுகிறது; போரில் இருதரப்பு ராணுவ வீரர்கள் மட்டுமின்றி அப்பாவி மக்களும் செத்து மடிகிறார்கள். அமிர்தலிங்கம் போன்ற,ஜனநாயக முறையில் ஈழத் தமிழர்களுக்குப் போராட எண்ணுகிற தலைவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், அல்லது பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

தி. மு. க. மட்டுமின்றி அ. தி. மு. க. வும் இணை சேர்ந்து நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்துள்ளது. பிரதமரோ 'நடவடிக்கை எடுப்போம்' என்று கூறியுள்ளாரே தவிர, அது என்ன நடவடிக்கை என்பதை வெளியிட மறுத்துவிட்டார்.

இவை நிலவரம் என்றால் எதிர்பார்ப்பு என்ன? ஈழப் போராளிகளும் தி.மு.க. தலைவர்களும், பங்களாதேச விடுதலைப் போர்ப் பாணியில் இந்தியா, இலங்கை மீது படையெடுத்துத் தமிழ் ஈழத்தை விடுவித்து, சுதந்திர தேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இது நடக்காது எனில், வியட்நாமில் வியட்காங்குக்குச் சீனா உதவியது போல், இந்தியா மறைமுகமாக ஈழப் போராளிகளுக்கு உதவி வந்தால் போதும்; போராளிகளே தமிழ் ஈழம் நிறுவுவதில் வெற்றி பெற்று விடுவார்கள் என்ற மற்றொரு விதமான எதிர்பார்ப்பும் உள்ளது.

மூன்றாவது வழி, ஜெயவர்த்தனவுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடர, போராளிகளையும் அமிர்தலிங்கம் கோஷ்டியினரையும் நிர்ப்பந்திப்பது.

இம்மூன்று வழிகளில் எது சிறந்தது? பங்களாதேசத்தில் (கிழக்குப் பாகிஸ்தானில்) இந்திய ராணுவம் புகுந்த போது, இந்தியாவில் இருந்த நிலைக்கும் இன்றைய இந்தியச் சூழலுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ஒருபக்கம் காலிஸ்தான் கோரும் பஞ்சாப் பயங்கரவாதிகள்; இன்னொரு பக்கம், கூர்க்காலாந்து தேசிய விடுதலை முன்னணி. சுயாட்சி மட்டுமின்றி, சுதந்திரக் கோரிக்கைகளும், பயங்கரவாதமும் ஆங்காங்கே தலைதூக்கியுள்ளன. மேலும் கிழக்குப் பாகிஸ்தானில் அன்றைய சூழ்நிலைக்கும் இன்றைய ஸ்ரீலங்கா சூழ்நிலைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.

வியட்காங்குக்குச் சீனா உதவியதுபோல, ஈழப் போராளிகளுக்கு இந்தியா உதவப் போனால், பஞ்சாப் பயங்கரவாதிகளுக்குப் பாகிஸ்தான் உதவுவதைக் கண்டிக்கிற தார்மீக உரிமையை இந்தியா இழந்துவிடும். இது ஆபத்தை விலைகொடுத்து வாங்கியதாக முடியும்.

எனவே, மூன்றாவது வழியாகிய பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதே சிலாக்கியமானது. இதற்குப் பிரதமர் என்ன செய்ய வேண்டும்? எம். ஜி. ஆரை மட்டும் அவ்வப்போது கலந்தாலோசித்தால் போதாது. ஈழப் போராளிகளிடம் செல்வாக்கு உள்ள கருணாநிதி, நெடுமாறன் போன்றவர்களையும் அழைத்து, அவர்கள் மூலம் ஈழப் போராளிகளை ஓரளவு விட்டுக் கொடுக்கத் தூண்ட வேண்டும். அதேசமயம், ஜெயவர்த்தனவையும் கொஞ்சம் மறைமுகமாக,மிரட்டி, வழிக்கு வரச் செய்ய வேண்டும். அமிர்தலிங்கம் போன்றவர்களை ஒதுக்கிவிடாமல், ஜனநாயக முறைகளில் நம்பிக்கை கொண்டிருக்கும் அவர்களுக்கும் நியாயம் கிட்டச் செய்ய வேண்டும். உலக நாடுகளிடையே அபிப்பிராயத்தை உருவாக்கி, ஜெயவர்த்தன மீது அவர்கள் தார்மீகச் செல்வாக்கைப் பிரயோகிக்கச் செய்ய வேண்டும்.

ஈழப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ராஜதந்திரத்தில்தான் இருக்கிறது; ராணுவ பலத்தில் அல்ல.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

சுஜாதா

ராயகோபுரம்

ஜீயர் சுவாமிகளின் விடாமுயற்சியால் இன்று இந்தியாவிலேயே மிக உயரமாக எழுந்திருக்கும் ராயகோபுரத்தைச் சுற்றிலும் என்னுடைய இளமை நினைவுகள் அனேகம் உள்ளன. அப்போதெல்லாம் அதற்கு மொட்டைக் கோபுரம் என்று பெயர். விஜயநகர ராயர்க்ளின் ஆட்சிக் காலத்தின் விளிம்பில் கட்டப்பட்டதாலோ, என்னவோ, ராஜா . இனிமேல் காசில்லை, தீர்ந்து போய் விட்டது என்று சொன்னதால், முற்றுப் பெருமல் விட்டுப் போன கோபுரத்தை முடித்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று சின்ன வயசில் வீதிப் பயல்களிடம் கதை அளந்திருக்கிறேன். மேகத்தைத் துளைத்துக் கொண்டு ஓர் எவ்வு எவ்விளுல் சந்திரன் மேல் அடியெடுத்து வைக்கலாம் என்று நான் சொன்னதை அப்பொழுதே பலர் நம்பவில்லை. மொட்டைக் கோபுரத்தை பஸ் ஸ்டாண்டிலிருந்து அணுகும்போது வலப் பக்கத்தில் இருந்த மூலைக் கடையில்தான் என் முதன்முதல் சிகரெட் முயற்சி.

ராத்திரி வேளையாகப் பார்த்துச் சிம்னி விளக்கு வெளிச்சம் உள்ள கடையாகத் தேர்ந்தெடுத்து, முகத்துக்குக் குறுக்காகக் கைத்துண்டு போட்டு மூடிக் கொண்டு, இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நோக்கி வாயின் இடது ஓரமாக 'ஒரு சிகரெட்டு' என்றேன்.

''என்ன சிகரெட்டு? எத்தனையோ சிகரெட்டு இருக்குது?''


''எ...எ...எ... ஏதாவது!''

''கோதை அம்மா பேரன் தானே நீ? எதுக்காக மூஞ்சில சவுக்கம் போட்டிருக்கே?''

பைசா கொடுத்ததையும் பாராமல் ஓடி வந்துவிட்டேன்.

ராயகோபுரத்தின் முழு அழகையும்மறைக்கும்வகையில் ஒரு முன்மண்டபம் இருக்கும். ஒருமாதிரி அசௌகரிய முக்கோணமாக, கூர்ச்சையாக முடியும் அந்த இடத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் கொஞ்சம் குரோட்டன்ஸ் வளர்த்து, நடுவே காந்தி சிலைவைத்தார்கள். இந்தியாவிலேயே சிரிக்கும் காந்தி சிலை அந்த ஊர் இடத்தில் தான் உள்ளது.









சிலைக்கு முன் பக்கத்தில் மண்டபத்தை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் தட்டி போட்டுத் தடுத்து, கோலா, சோடா, பத்திரிகைபோன்றவற்றை விற்பார்கள். அவற்றில் 'சிடரெட்' என்ற பானத்தில் கொஞ்சம் அதிகப்படியாக ஆல்கஹால் இருக்கிறது என்று யாரோ புரளி கிளப்பிவிட, வைத்தி நெற்றியில் கைக்குட்டை கட்டிக் கொண்டு, பாட்டில் பாட்டிலாக 'சிடரெட்'

பானம் அருந்துவான். அப்போதெல்லாம் மதுவிலக்கு அமுலிலிருந்ததால் 'கிக்' வேண்டுமென்றால் தெற்கு வாசல் மெடிக்கல் ஷாப்பில் ஜிஞ்சர்பரிஸை நாட வேண்டும். அதைச் சாப்பிட அசாத்தியத் திறமையும் கான்க்ரீட் வேய்ந்த வயிறும் வேண்டும்.

ராயகோபுரத்தை, வெள்ளைக்காரன் வரைந்த 'டாகரோடைப்' என்ற சென்றநூற்றாண்டுச் சித்திரத்தில் மேற்சொன்ன மண்டபம் இல்லை. முகப்பில் வைக்கோல் போரும் மாட்டு வண்டியுமாகப் பின்னணியில் ராயகோபுரம் தெரியும். இந்தச் சித்திரம் ஏ.கே. செட்டியாரின் 'தமிழ்நாடு பயணக் கட்டுரைகள்' என்ற புத்தகத்தில் இருக்கிறது. அந்தப் புத்தகத்தை என்னிடமிருந்து இரவல் வாங்கிச் சென்று இதுவரை திருப்பித் தராத நண்பரே! ஐயா! தயவு செய்து திருப்பிவிடும்!

ராயகோபுரத்தையொட்டிய உள்பக்கத்திலிருந்து தெற்கு வாசல் என்னும் பிரதான கடைத் தெரு துவங்கிக் கோயில் வாசல் வரை செல்லும். கோபுரத்தோடு ஒட்டிய பகுதியில், எதிர் எதிராக இரண்டு ஓட்டல்கள், எப்போதும் போட்டியாக ஒன்றை ஒன்று லவுட் ஸ்பீக்கர் சங்கீதத்தால் இட்டிக் கொண்டிருக்கும். இரண்டில் ஓர் ஓட்டல் மட்டும் எப்போதும் மூடியைத் திறந்தால் ரோஸ்மில்க், மாடியைத் திறந்தால் லாட்ஜிங் என்று கொழிக்க, மற்றது எப்போதுமே அழுது வடியும். இது ஏன் என்று எனக்குப் புரிந்ததே இல்லை. இரண்டு ஓட்டல்களிலும் விசேஷம், உள்ளே போய் டிபன் சாப்பிடும்போது, பச்சை பெயிண்ட் அடித்த சுவரை உற்றுப் பார்த்தால் கிருஷ்ணதேவராயர் காலத்துச் சிற்பங்கள் தெரியும். 'இன்றைய ஸ்பெஷல்' போர்டு மாட்டிய சரித்திரம்!

ராயகோபுரத்தைக் கடக்கும்போது ஆர்க்கியாலஜிக்காரர்களின் நீல போர்டு ஒன்று இருந்ததாக ஞாபகம். அதோடு டவாலிச் சேவகர்







ஒருத்தரும் நின்று கொண்டிருப்பார். அவரை ஒரு முறை உங்களுக்கு என்ன வேலை என்று கேட்டதில் அவர், 'போடாங்க....' என்று கெட்ட வார்த்தை பிரயோகித்தார். எதிர் எதிரே, கோபுர வாசலின் உள் பகுதியில் இருந்த படிகளில், அப்போது யாரும் ஏறிச் சென்றதாக நினைவில்லை. படிகள் இருந்தனவா என்ன? கண்டா முண்டாச் சாமான்கள் நிறைய இருந்தன. கொஞ்சம் நோண்டிப் பார்த்தால் கிருஷ்ணதேவராயர் காலத்துச் செருப்பு ஏதாவது அகப்படலாம்.

கோபுரத்திலிருந்து தெற்கு வாசலில் நடந்து செல்கையில் வெற்றுக்கு ஒரு நாலு கால் மண்டபம் இருக்கும். இதைக் கடந்தவுடன் வலது பக்கம் சாத்தார வீதி. இடது பக்கம் தெற்கு அடையவளைஞ்சான். ஸ்ரீரங்கத்தில் அத்தனை வருஷங்கள் இருந்திருக்கிறேன், தெற்கு அடையவளைஞ்சான் தெருவுக்கு ஒரே ஒரு முறை தான் போயிருக்கிறேன். சித்திரை வீதிக்காரர்கள் மற்ற வீதிகளுக்கு லேசில் போக மாட்டோம். சாத்தார வீதி அப்படியில்லை. அது கொஞ்சம் கலகலப்பாக இருக்கும். பூ விற்பார்கள். ஸ்ரீஜயந்திக்குச் சப்பரம் கட்டுவதற்கு இங்குதான் வருவோம். சுவாமிக்குப் பூப்பல்லக்கு இங்குதான் செய்வார்கள். பெட்ரமாக்ஸ், வாழைமரம், சித்திரத்தை போன்ற நாட்டு மருந்துகள் எல்லாம் இங்கேதான் கிடைக்கும். சாத்தார வீதி மூலையில்தான் கலைஞர் கருணாநிதி, தந்தை பெரியார் போன்றவர்கள் எல்லாம் பேசுவார்கள். லவுட் ஸ்பீக்கர் வைத்து சப்தத்தைத் தெற்கு வாசல் வரை கொண்டு விடுவார்கள்! மூலையில் நின்று கொண்டு கேட்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருப்போம். பெரியார் ஸ்ரீரங்கநாதரிடம் ரொம்ப எக்கச்சக்கமான கேள்விகள் எல்லாம் கேட்பார். 'உறையூருக்கு எதற்குப் போறே நீ?

வாலியை ஏண்டா மறைஞ்சு கொன்னே நீ?' என்றெல்லாம்! 'பாம்பையும் பார்ப்பானையும் பார்த்தால் பார்ப்பானை முதலில் அடி' என்பார். அந்தக் கூட்டங்களில் கறுப்புச் சட்டை போட்டுக் கொண்டு தலைமை தாங்கிய கருப்பண்ணக் கோனார்தான் எங்கள் தெருவில் பால் டிப்போ வைத்திருந்தார். எங்கள் குடும்பத்துக்கு ரொம்ப சிநேகிதர். பார்ப்பனரை வெறுக்கிறதையும் பால் வியாபாரத்தையும் அவர் கலக்கவே மாட்டார்!

சாத்தாரத் தெரு முனையிலிருந்து சற்று முன்னே போனால், கடைத் தெருவில் ஜவ்வாது, புனுகு, சந்தனம் எல்லாம் விற்பார்கள். கடைக்காரனின் வீட்டுக்கு அடியில் ஒரு கூண்டு வைத்து புனுகு பூனை சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருக்கும். நான் பார்த்த முதல் 'ரோபாட்', இந்தக் கடையில் கையில் வாசனாதி திரவியங்களை வைத்துக்கொண்டு தலையைச் சதா லேசாக ஆட்டிக் கொண்டிருந்த நாமம் போட்ட, விளம்பரச் செட்டியார் பொம்மை.

அந்தக் கடைக்கு அருகில், எதிரில் மண்டபத்தின் தூணருகில் தரை மட்டத்துக்கு இரண்டடி கீழே முகம் முழுவதும் வெண்ணெய் அணிந்து கொண்டு அடுத்த கிருஷ்ண ஜெயந்திக்குக் காத்திருக்கும் பாதாள கிருஷ்ணன். சந்நிதியின் முன் நடக்கும் உறியடி உற்சவம் எங்கள் கீழவாசல் உறியடியைப் போல அத்தனை விஸ்தாரமாக இருக்காது. முதுகு பூரா நாமம் போட்டுக் கொண்டு ஓர் ஆள் வந்து அலங்கார ஜகடை மூலமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் குட்டிக் குட்டித் தயிர்ச் சட்டிகள் வைத்த பிரேமை, ஒரே வீசு வீசி; உடைப்பதைப் பெருமாள் பார்த்திருந்துவிட்டு அவசரமாகப் புறப்பட்டுப் போய்விடுவார்.



ராயகோபுரத்தை ஒட்டியிருந்த சந்துகளில் ஒரு மாதிரி சொத சொதவென்று கறுப்புப் பன்றிகளும், முனிஸிபல் ஆயுதங்களுமாக இருக்கும். ஒரு தடவை டவுன் பஸ்ஸில் கோட்டை மெயின்கார்டு கேட்டுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, ஒரு திருடன் அந்தச் சந்தில் ஓடி மறைவதைப் பார்த்தேன். ராயகோபுரத்துக்கு வெளியே, ஆர்ச்சு வளைவாக ஒருவாசல் இருக்குமே அதனுள் ஒரு காலனி; ஒட்டு வீடுகளாக உண்டு. அந்தக் காலனியையெல்லாம் நாங்கள் ஸ்ரீரங்கமாகவே கருதமாட்டோம். திருடன் அந்தக் காலனியிலிருந்து வெளிப்பட்டு, ராயகோபுரத்தை ஒட்டிய சந்தில் மறைந்தான். அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தவர்களில் ஒன்றிரண்டு பேர் உள்ளே போய் நாற்றம் சகிக்கவில்லையென்று திரும்பி வந்துவிட்டார்கள். மதிலெல்லாம் ஏற முடியாது; இங்கேதான் திரும்ப வந்தாக வேண்டும் என்று திருடனுக்காகக் காத்திருந்தார்கள். பேருக்குப் பேர், கம்பு, கொடிக்குச்சி, புளிய மிலாறு என்று வைத்திருந்தார்கள். எனக்குத் திருடன் வெளியே வராமல் இருக்க வேண்டுமே என்று கவலையாக இருந்தது! சந்தின் அந்தப் பக்கம் மடக்க ஒரு கோஷ்டி போயிருந்தது.

அந்தத் திருடன் பொறுமையிழந்து அல்லது நாற்றம் சகிக்காமல் வெளியே வந்து வசமாக மாட்டிக் கொண்டான். அவர்கள் அவனைப் பந்தல் காலில் கட்டித் தர்ம அடி அடித்தார்கள். ஒரு குட்டிப் பையன் கூட இடைவெளி வழியாக அவனை எட்டி உதைத்தான். 'திருடுவியா, திருடுவியா' என்று திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். அவன் பதிலே சொல்லாமல் ஒவ்வொரு அடித்தவரையும் புதியவரைப் போலப் பார்த்துக் கொண்டே இருந்தான். வாயோரத்தில் ரத்தம் தெரிந்தாலும் அழவே இல்லை.

நான் ஓரத்திலிருந்து அவன் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு அடியும் என்மேல் விழுவது போலத் தோன்றியது. என்ன ஸார் திருடிட்டான்? என்றதற்கு, 'லக்ஷ்மணராவ் வீட்டில் திருட வந்ததாகவும் 'எடுத்துக்கட்டி'யிலிருந்து எட்டிப் பார்த்ததாகவும் ராயர் பெண் வீட்டுக்கு விலக்கானதால் மாடியிலிருந்து கூச்சல் போட, தாவிக் குதித்து ஓடிப் போய்விட்டான் என்றும் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் வந்து 'திருடனை அடிக்காதீங்க. ஸ்டேஷன்லே நாங்க பார்த்துக்கிறோம். அடிக்காதீங்க' என்று விடுவித்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற பிறகு, அந்தத் திருடனை என் வாழ்நாளில் மறுபடி பார்ப்பேன் என்று நினைக்கவே இல்லை.

விதியின் சின்ன விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும். நான் போனவாரம் பம்பாய் கம்ப்யூட்டர் மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது க்ராஸ் மைதானத்தில் எக்ஸிபிஷனில் ஹாலுக்கு ஹால் நடந்து அலுத்துப் போய் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தபோது, ஓர் ஆள் என் அருகில் வந்து: ''நீங்கதானே...'' என்று தயங்க, ''ஆமாம் நான்தான்'' என்றேன்.

''நீங்க ஸ்ரீரங்கம்னு கேள்விப்பட்டேன். போட்டோவில் பார்த்திருக்கேன்....''

''சந்தோஷம். நீங்களும் கம்ப்யூட்டரா...''

''ஆமாம். நானும் 'உங்களைப் போலவே ஸ்ரீரங்கம், கம்ப்யூட்டர்....''

''ஸ்ரீரங்கத்தில் எங்கே?''

''அம்மா மண்டபத்தில் இருந்தேன். ஸ்ரீரங்கத்தில் மறக்க முடியாதது ராய கோபுரம். அந்தக் கோபுரத்துக்கு முன்னால் ஒரு தடவை என்னைக் கம்பத்தில் கட்டி உதை உதைன்னு உதைச்சிருக்காங்க!''

''அப்படியா! எந்த வருஷம்?''

''1949!''

''வாட் எ சர்ப்ரைஸ்! அந்தச் சம்பவத்தை நான் பார்த்திருக்கேன். பந்தல் கால்ல கட்டி வெச்சு... நீங்கதானா அந்தத் திருடன்! இப்ப என்ன பண்றீங்க?''

''கலிபோர்னியாவில் கம்ப்யூட்டர் சயன்டிஸ்ட்டா இருக்கேன். நீங்ககூட என்னை அடிச்சீங்களா அன்னைக்கு?''

''சேச்சே! உங்களைப் போலீஸ்காரர் நல்ல வேளை அழைச்சுட்டுப் போயிட்டார்! ஆச்சரியம் ஆச்சரியம்! ஸ்ரீரங்கத்தில் திருட்டிலிருந்து, கலிபோர்னியாவில் கம்ப்யூட்டர் சயன்ஸா?''

''திருடவும் இல்லே ஒண்ணும் இல்லே ஸார்!''

''அப்படியா? பின்னே எதுக்கு உங்களைத் துரத்தி வந்து அடிச்சாங்க?''

''இதைச் சொன்னால் கதை பண்ணிடுவீங்க... அன்னிக்கு நான் லக்ஷ்மணராவ் பொண்ணை, மாலினி மாலினின்னு வாட்டசாட்டமா இருப்பா தெரியுமா?''

''தெரியாது'' என்றேன் அவசரமாக.

''அவளைப் பார்க்கத்தான் மாடிக்குப் போயிருந்தேன். மாட்டிக்கிட்டேன்! ஓடி வந்துட்டேன்! அந்தப் பொண்ணும் சமயோசிதமா திருடன் திருடன்னு கத்திருச்சு! நான் திருடன் இல்லே, அந்த மாலினியைப் பார்க்கத்தான் வந்தேன்னு சொல்லியிருந்தால் அவளை நிமித்தியிருப்பாரு அவங்கப்பா!''

''யூ மீன் அந்த அடியெல்லாம் ஒரு பொண்ணைக் காட்டிக் கொடுக்காமல் இருக்கறதுக்காக வாங்கிக்கிட்டீங்களா?''

''ஆமாம். ஐ வாஸ் ஸோ ரொமான்டிக் அட் தட் டைம்! அந்த மாலினி எங்க இருக்கா இப்பன்னு கூடத் தெரியாது!''

ராய கோபுரத்தைச் சுற்றிப் பல நினைவுகள். இப்போது மொட்டைக் கோபுரத்தைப் பூர்த்தி செய்துவிட்டார்கள். கும்பாபிஷேகம், கும்பல், மந்திரிகள், கலசங்கள்.... இவைகளுக்கெல்லாம் மத்தியில், எனக்கு ஓர் இழப்பு இருக்கிறது. முற்றுப் பெறுததை முற்றுப் பெறுமலே வைத்திருப்பதில் இருக்கும் அழகையும் கவிதையையும் இழந்து விட்டிருக்கிறோம். வீனஸ்–டி–மிலோவின் கரங்களை யாரும் புதிதாகச் செய்து ஒட்ட வைக்க முயற்சி செய்யவில்லை. ரோம் நகரத்தின் கொலீஸியம் போன்றவைகளையும் கிரேக்க நாகரிகத்தின் தூண்களையும் ஏன் விஜய நகரத்தையுமே யாரும் கான்க்ரீட் சிமெண்டு போட்டு முடித்திருக்கிறார்களா? அபத்தம்!

பொன்மொழிப் போட்டி-1 முடிவு

சரியான விடை:

1. நீதி வழங்குவதாக நடிப்பதுதான் மிகப் பெரிய அநீதி. — பிளேட்டோ

2. மனிதன் தாராளமாகச் செலவு செய்ய வேண்டியதில் இன்சொல் முதலாவதாகும். — ஆப்ரஹாம் லிங்கன்

3. ஆண்டவனை மனமார நேசிக்க வேண்டும்; ஆண்டவனுக்காக ஏங்க வேண்டும். அவனிடத்தில் ஆழ்ந்த அன்பு இருந்தால் போதும். அப்போது தான் யார் என்பதை அவனே உணர்த்துவான். — ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

4. உழைப்பு என்பது மொட்டு போன்றது. மொட்டைப் பாதுகாத்தால் மலரும். அந்த மலர் மெல்ல மெல்லக் காயாகிக் கனிந்து பழமாகும். — சத்ய சாயி பாபா

5. நோயாளியைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல்லுங்கள்; இரண்டு பேரிடையே சமாதானம் செய்ய இரண்டு மைல் செல்லுங்கள்; நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல்லுங்கள். — நபிகள் நாயகம்

சரியான விடையைப் பின்வரும் வாசகர்கள் எழுதி, ரூ. 200 பரிசைச் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்:

1. ஜி. முத்துக்கிருஷ்ணன், சென்னை – 10, 2. எஸ். வி. ராஜசேகர், சென்னை – 5, 3. எம். ஷீலா, செகந்திராபாத் – 26, 4. ஜே. ஆர். சுப்பிரமணியன், மதுரை – 1. 5. பா. நவநீதகிருஷ்ணன், திருச்சி – 8, 6. ஜி. ராசேந்திரன், கடலூர் – 2, 7. கே. சௌந்தரவல்லி, சென்னை – 21. 8. கே. கீதா, சேலம் – 7. 9. பி.வி. ராஜமாணிக்கம், கிருஷ்ணகிரி, 10. க. விசுவநாதன், திருத்தணி – 9, 11. கே. மீனாக்ஷி, குப்பம்பாளையம் – 636 212. 12. வனிதா வைத்தியநாதன், சென்னை – 4. 13. பி. என். எஸ். மணியன், ஜபல்பூர் – 1. 14. எஸ். ராமமூர்த்தி, பாளையங்கோட்டை – 2.

ஓவியன்



''ஏன் தாத்தா! இந்தப் படத்துக்கா பத்து ரூபாய் குடுத்தீங்க! வேறே யாராயிருந்தா ஒம் இதுக்கு சல்லிக் காசு கூடத் தர மாட்டாங்க!''


''சார்... சார்.... நான் ரொம்ப ஃபைனா டிராயிங் பண்ணுவேன் சார்... பத்து நிமிஷத்திலே உங்களை அப்படியே வரைஞ்சுடுவேன் சார்....'' என்று ஒரு பத்து வயதுச் சிறுவன் சாமிநாதப் பிள்ளையை நச்சரித்தான்.

அவனை அன்புடன் நோக்கினார் பிள்ளை.

''சார்... நாளைக்கு எக்ஸாம் பீஸ் கட்டணும் சார்'' ஒரே ஒரு படம் வரைஞ்சு தர்றேன்... அஞ்சு ரூபா கொடுத்தாப் போதும் சார்....''

அழுக்கு டிராயர் பையன் தாத்தாவைத் தொந்தரவு செய்வதைக் கண்ட மாதுரியும், ஜெகனும், ''வாங்க தாத்தா.... ஷோவுக்கு இப்பவே டயமாச்சு'' என்று அவசரப்படுத்தினர்.

''தோ பார் மாதுரி... இன்னும்





பிரபல பிரெஞ்சு நடிகரும் நாடகாசிரியருமான ஸச்சா கைட்ரி என்பவருக்கு ஏற்கெனவே ஐந்து மனைவிகள் இறந்துபோய்விட்டார்கள். ஆறுவது மனைவியிடம் அவர் இப்படிச் சொன்னார்:

''என் கண்ணே! அந்த ஐந்து பேரும் எனக்கு வெறும் மனைவிகளாகத்தான் இருந்தார்கள். நீ மட்டுமே என் விதவையாகப் போகிறாய்!''

ஆதாரம்: மேதைகள் தமாஷ்!

—உ. வெங்கடேசன்.

நெறைய டயமிருக்கு..... நீங்க கொஞ்சம் கார்ல வெயிட் பண்ணுங்க... நான் ஒரே ஒரு படம் வரைஞ்சுக் கிட்டு வந்திடறேன்...'' என்றார் சாமிநாதப் பிள்ளை.

அழுக்கு டிராயர் 'கிட்டு'விற்கு ஒரே குஷி. வேகவேகமாகப் பேப்பரையும் பென்சிலையும் ரெடி செய்து கொண்டு, ஒரு கையால் தலைமுடியை 'ஸ்டைலாக' ஒதுக்கிவிட்டபடி அவரை 'ஆங்கிள்' பார்த்தான்.

மாதுரிக்கும், ஜெகனுக்கும் ரொம்பத் தர்ம சங்கடமாகிவிட்டது. நடு ரோட்ல, அதுவும் பெரிய ஹோட்டல் முன்னாடி, இந்தத் தாத்தா இப்படிப் பண்றாரே என்று இருவரும் வாய்க்குள்ளேயே முனகிக் கொண்டனர். இருந்தாலும், தாத்தாவை எதிர்த்துப் பேச முடியாது என்பதால் காருக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டனர்.

''நான் ரெடி.... நீ ரெடியா?'' என்று பிள்ளை, சின்னப் பிள்ளையைப் போல் காரின் முகத்துப் பகுதியில் சாய்ந்தபடி கிட்டுவிடம் கேட்டார்.

''ஓகே சார்... அப்படியே கொஞ்சம் 'லெப்ட்'ல சாஞ்ச மாதிரி நில்லுங்க போதும். அ... அ... ரைட்....''

''ரைட்டா? நல்லா ஜம்முனு வரையணும்.... என்ன... தெரிஞ்சுதா?''

கடிகாரத்தைப் பார்த்த மாதுரி, ''ஐயய்யோ... இந்நேரம் டைட்டில் ஓடுமே...'' என்று துடித்தாள்.

சாலையில் போவோர் வருவோரெல்லாம் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள். சற்றைக்கெல்லாம் அங்கு ஒரு 'மினி' கூட்டமே கூடிவிட்டது.

அவ்வளவுதான், மாதுரிக்கும் ஜெகனுக்கும் பெருத்த சங்கடமாகிவிட்டது. ''இப்படி அநியாயமா மாட்டிக்கிட்டோமே... என்று 'சீட்டில்' கைவைத்து, குப்புறப் படுத்துக் கொண்டனர்.

ஒருவழியாகக் கிட்டு படத்தை வரைந்து, இமாலயத் திருப்தியுடன் பிள்ளையிடம் நீட்ட, அதை அவர் ஆர்வமாக வாங்கி, ''பலே... பலே.... ரொம்ப அற்புதமா வரைஞ்சிருக்கியே....'' என்றபடி அவனைத் தட்டிக் கொடுத்தார். ஜிப்பா, பைக்குள் கைவிட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டை உருவி, கிட்டுவின் கைக்குள் திணித்தபடி, ''இந்தா வைச்சுக்க... உன்னோட திறமைக்கு இன்னும் நிறையவே கொடுக்கலாம்'' என்றார்.

கிட்டுவுக்கு இனம் புரியாமல் சந்தோஷமும், அழுகையும் சேர்ந்து வந்தன.

காருக்குள் உட்கார்ந்திருந்த மாதுரியையும், ஜெகனையும் பார்த்து, ''என்ன போகலாமா...?'' என்று பிள்ளை கேட்டதும்,

''ம்.... போகலாம்... வீட்டுக்கு'' என்றனர் கோரஸாக.

''சரி, சரி... நல்லதுதான். இந்தாங்க.... இந்தப் படத்தைப் பார்த்தீங்களா'' என்றபடி கிட்டு வரைந்திருந்த படத்தை நீட்டினார்.

அரை மனத்துடன் அவர்கள் அந்தப் படத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, அடுத்த விநாடி, சினிமா போகாத கோபமெல்லாம் மறந்து சிரித்தனர்.

''என் தாத்தா.... இந்தப் படத்துக்கா பத்து ரூபா...? வேறே யாராயிருந்தாலும் இதுக்கு சல்லிக் காசு கூடத் தரமாட்டாங்க.'' என்றாள் மாதுரி.

''இல்லே மாதுரியக்கா.... அவன் நம்ம தாத்தாவை 'மாடர்ன் ஆர்ட்'ல வரைஞ்சிருக்கான். அதான் வேறே ஒண்ணுமில்லே.'' இருவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர்.

''என் தாத்தா! நீங்க பெரிய கலை ரசிகர்; பத்திரிகைல எல்லாம் விமர்சனம் எழுதறவர். வீணா ஏன் அவனை அரை மணி நேரம் வாட்டி, ஓர் உருப்படாத படத்தை வரைய வைச்சு, எங்களையும் சினிமாவுக்குப் போக விடாம நோகடிச்சீங்க... அவனுக்கு முதல்லேயே பத்து ரூபாய் பணத்தைக் கொடுத்து அனுப்ப வேண்டியதுதானே?'' என்றாள் மாதுரி.

''நான் அப்படிச் செய்திருந்தால் ஒருத்தரோட உருவத்தை வரைய முடியும்ங்கற நம்பிக்கையோடும் கலை உணர்வோடும் ஒரு செயல்ல ஈடுபடற இளம் கலைஞனை அவமானப்படுத்தினதாகும். அவனை முன்னேற விடாம செய்யறதுக்கு வேறே எதுவுமே வேண்டாம். அவனிடம் இருந்தது துளி திறமைதான். ஆனால் அதோடு, கடலளவு ஆர்வமும், உழைச்சுச் சம்பாதிக்கணுங்கற நோக்கமும் இருந்தன. பின்னதை ஊக்குவிச்சா திறமை தானா வளரும்ங்கறதனாலதான் நான் அப்படிச் செய்தேன்'' என்றார் பிள்ளை..

மாதுரியும், ஜெகனும் புரிந்து கொண்டார்களோ இல்லையோ என்பதைப் பற்றி பிள்ளை கவலைப்படவில்லை. அவருக்கு மட்டும் அன்று நிறைய ஆத்ம திருப்தி கிடைத்தது.

— திருவள்ளுவன்



அழகிய சிங்கர்

பெரும்பூதூர் யதிராசன்
  பேரருளால் பாரெல்லாம்
இரும்பூதெய் திடவேதான்
  இவ்வடிவை ஏற்றனனோ!
திருமணியாய்த் தோன்றியநல்
  தேசிகனே தலைகூர்ந்து
குருமணியாய் மறுபடியும்
  கொலுவிருக்க வந்தனனோ!

கட்செவிமே லுட்கார்ந்தே
  கதியருளும் பதியெனவாழ்
ரட்சகனைப் பற்றியுயர்
  ரகசியங்கள் எடுத்தோதி
உட்கடராய் எமக்குள்ளே
  ஊடுருவி ஊழ்வினையாம்
முட்செடியைக் களைந்தருளும்
  முனிவன்சீர் சொலப்போமோ?

சடகோபன் மறுபடியும்
  சகத்தினிலே சனித்தானோ?
அடடாவோ! அடியாரை
  ஆட்கொளவே நினைத்தானோ?
வடகலையார், வைணவத்தார்
  வழிபடவும் வளமுறவும்
உடலெடுத்துத் திருவீதி
  உலவுவதற் கிசைந்தானோ?

'இரணியனைத் தொடைசேர்த்து
  இருகூறுய்க் கிழித்தவனைச்
சரணடைவீர்!' என்றெம்மைச்
  சந்ததமுந் தன்வழியே
கருணையுடன் வரச்சொல்லிக்
  கைகாட்டும் மெய்விளக்கை,
மரணமிலாப் பெருவாழ்வை
  மாமுனியாய் நான் கண்டேன்!

விசிட்டாத் வைதத்தின்
  விரிவுரையை; அறநெறியில்
வசிட்டன் எனவிளங்கும்
  வரமுனியை; வைணவத்தான்
நசிக்கா திருக்குமாறு
  நீர்பாய்ச்சும் அருள்மழையை,
வசிக்கும் இடஞ்சென்று,
  வணங்கிடுவோம்! வா! மனமே!

செந்நிற வேட்டிகட்டிச்
  செங்கோலைக் கையில் ஏந்தி
பன்னிரு திருமண்பூசிப்
  பொன்னிற மேனிமின்ன
மன்னவன் அழகியசிங்கன்
  மலரடி மேவிநிற்கும்
நன்னகர் திருவரங்கம்
  நமக்கெல்லாம் ஸ்ரீவைகுந்தம்!

மொட்டையாய் வளர்ச்சியின்றி
  மெலிந்ததோர் கோபுரத்தை
நெட்டையாய் நிமிரச்செய்தான்;
  நீள்புவி மன்னரெல்லாம்
விட்டதோர் பணியை இந்த
  வித்தகன் முடித்துவைத்தான்;
தொட்டவன் பாதம் போற்றித்
  தோத்திரம் செய்க நெஞ்சே!

பழமறைப் பொருளே! எம்மைப்
  பாலிக்கும் எம்பிரானே!
பழகிய அரவணைமேல்
  பள்ளிகொள் அரங்கத்தம்மா!
அழகிய சிங்கர்; எங்கள்
  அகோபில ஜீயர் இன்னும்
ஆயிரம் ஆண்டு வாழ
  அடிமலர் ஏத்தினேனே!

வாலி



ஹாஜா ஷெரீஃப்

அழுததற்குக் கிடைத்த பாராட்டு!

மேக்கப் ரூம் கதவைத் திறந்து கொண்டு சிவாஜி வெளியே வரும்போது தைரியமாக அவரைப் பின்தொடர்ந்த சிறுவன், ''ஐயா, எனக்கு உங்க பிள்ளையா படத்திலே நடிக்கணும்னு ஆசை'' என்றான்.

சிவாஜி, ''அப்படியா, நடிக்கலாமே'' என்று அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு, செட்டுக்குப் போய்விட்டார்.

அன்று அவர் கூறியது பத்தாண்டுகளுக்குப் பின்தான் நிறைவேறியது.

'லட்சுமி வந்தாச்சு' படத்தில் சிவாஜி—பத்மினி ஜோடியின் நாலாவது பிள்ளையாக நடித்தான் ஹாஜா ஷெரீஃப்.

'புதிய வார்ப்பு'களில் அறிமுகமாகி, நூற்றுக்கணக்கான படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ள ஹாஜா ஷெரீஃபுக்கு இப்போது வயது பதினேழு. இதுவரை அரை டிராயருடன் நடித்து வந்த ஷெரீஃப் இப்போது பாண்ட் சட்டை போட்டுப் படங்களில் அமர்க்களம் செய்கிறான்.

'சிறை' படம் பார்த்துவிட்டு லட்சுமி அக்காவைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தேன். வாய்ப்புக் கிடைக்கலே. 'சம்சாரம் அது மின்சாரம்' படப்பிடிப்பில் அக்கா என்னுடன் சேர்ந்து நடிச்சுது. ஆனா அவருகிட்டே பேசப் போகும்போதெல்லாம் அவர் என்னை 'அவாய்ட்' பண்ணுவது போல ரிசர்வ்டாக இருந்தார். எனக்கும் தயக்கமாப் போச்சு. படத்தில் வரும் அழுகிற சீன் ரஷ்ஷைப் பார்த்ததும், நான் சற்றும் எதிர்பாராதவிதமாக லட்சுமியே என்னிடம் வந்து ''ஷெரீஃப் வெல்டன் கை கொடு'' என்று பாராட்டினார். அசந்து போய் விட்டேன்'' என்கிறார் ஹாஜா.

சிவாஜி, ஹாஜாவைப் பார்க்கும்போது முன்பு, 'வாங்க பெரியண்ணே...' என்பார் கிண்டலாக. இப்போதோ, 'சலாமாலேகும் வாங்க பாய்' என்று கூப்பிட்டுத் தமாஷ் செய்கிறார்.

கமல் சார் சில மாதங்களுக்கு முன் என்னை நிறைய ஆங்கிலப் படங்களைப் பார்க்கச் சொன்னார். 'இங்கிலீஷ் நமக்குப் புரியாதே. என்ன செய்வது?' என்று பேசாமல் இருந்துவிட்டேன். மீண்டும் ஒரு முறை கமல் சாரை ஸ்டுடியோவில் சந்தித்த போது, 'எவ்வளவு ஆங்கிலப் படம் பார்த்தாய்?' என்று கேட்டார். 'இங்கிலீஷ் புரியாதே சார்' என்றேன். 'நடிப்பு புரியுமே — அது போதாதா?' என்றார். இப்போது ஆங்கிலப் படங்களை வீடியோவில் அவ்வப்போது பார்க்கிறேன். எனக்கு அவை பாடமாக அமைகின்றன'' என்றார் ஹாஜா ஷெரீஃப்.

சென்ற ஓர் ஆண்டில் மட்டும் பன்னிரண்டு ஷீல்டுகள் வாங்கியிருப்பதைத் தமது வீட்டு வரவேற்பறையில் பெருமையுடன் நமக்குக் காட்டிய ஹாஜா ஷெரீஃப் முன்பு ஸ்டுடியோக்களுக்கு நடந்து போவார்; இப்போது மோட்டார் சைக்கிள்! நாளை எப்படியோ?

— மன்னை சௌரிராஜன்


ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.
பொருத்தமளிக்க உமக்கென்றே 3 வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.
நேச்சுரல் —மாநிற மேனியருக்கு
லைட் —சிகப்பு மேனியருக்கு
கோல்டு —கருவண்ண மேனியருக்கு
Lakmé Calamine Natural
Lakmé Calamine Light
Lakmé Calamine Gold
லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய சேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரீட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக
லக்மே
காலமைன்
சரும வண்ணம் எவ்வண்ணம்
சாயலுண்டு அவ் வண்ணம்.
Tm

குலம் தரும்...

விளையாட்டுப்போல ஆறு வருடங்கள்! இரண்டாயிரம் நாட்கள்!

காலக் கணக்கை விட்டுத் தள்ளுங்கள், ஒரு மாபெரும் கனவல்லவா நனவாகிவிட்டிருக்கிறது!

மணவாளனுக்கு அந்தக் கோபுரத்தைப் பார்க்கிற போது, அதன் நீள, அகல பௌதிகப் பரிமாணங்களை எல்லாம் தாண்டி, மகாபலிக்கு முன்னாலே திரிவிக்கிரமனாக நெடிதுயர நின்ற நெடுமாலே நினைவுக்கு வருவார். இருநூற்று முப்பத்தாறடி உயரத்தில் பதின்மூன்று அடுக்குக் கோபுரம்! ஊரில் உள்ள இருபத்தொரு கோபுரங்களில், இது மட்டும் சிகரப் பகுதியின்றி இதுநாள் வரை மொட்டையாய் நின்றது. இன்று ராஜ கோபுரமாய் விண்ணைத் தொட்டு நிற்கிறது!

ஒரு சின்னதிலிருந்து ஒரு பெரிசு! விதைக்குள்ளிருந்து விகசித்துக் கொண்டு விருட்சம் வெளிப்படுகிறதே, அதுபோல.

மனிதனுக்கு லட்சியம் என்று ஒன்று இருக்கணும். அந்த லட்சியம் — இலக்கு — உன்னதமாக இருக்க வேண்டும். இருந்து விட்டால் அது நிறைவேறியே தீரும்.

அதற்குச் சாட்சி, இந்தக் கோபுரம்!

மணவாளன் பெருமூச்சு விடுகிறான். அவனுக்குக் கூட ஓர் ஆசை — ஒரு கனவு — ஒரு லட்சியம் — இருக்கிறது. ரொம்பக் காலமாக இருக்கிறது. அதை வாய்விட்டு யாரிடமும் அவனால் சொல்ல இயலவில்லை. சொல்லி என்ன பயன்? ஏழை கனவு காணக் கூடாது. அவனுக்கு அந்த உரிமை இல்லை.

அவன் அப்பா காலத்தில் குடும்பம் ரொம்பச் செழிப்பாகத்தான் இருந்தது. அந்தப் பரம்பரையில் வந்த தோஷம் — ஒரு வேளை அதுவே வியாதியாகிப் போயிற்றோ! — மணவாளனுக்கு இன்னமும் எட்டுக் கல் விட்டெறிகிற நினைப்பு.

"மணவாளா! கோபுரத் திருப்பணிக்கு ஒரு சீட்டு வாங்கிக்கறியா?" கேட்டவர் இளையாழ்வார். தபாலாபீசில் வேலை பார்த்து, சமீபத்தில் ரிடையர் ஆனவர். எந்த நேரமும் அவர் கையில் நன்கொடை ரசீதுடன் ஊரில் வளைய வந்து கொண்டிருப்பார்.

"வாங்கணும் சாமி, கட்டாயம் வாங்கணும்" என்றான் மணவாளன்.

"பத்து ரூபாதான், கிழிக்கட்டுமா?"

"இப்ப வேண்டாம் சாமி, கையிலே பணமில்லே... ஒரு சீட்டு என்ன சாமி, நூறு சீட்டு வாங்கறதா நேர்ந்துக்கிட்டிருக்கேன்."

இளையாழ்வார் அவனைப் பார்த்து 'கபக்' என்று சிரித்து விட்டார்.

"நூறு சீட்டுன்னா, ஆயிரம் ரூபாயாச்சேப்பா, அந்தப் பணம் எப்பச் சேர்ந்து, எப்ப நீ திருப்பணிக்குச் செலுத்தறது? நான் சொல்றதைக் கேளு. உன்னாலே முடிஞ்சதைக் கொடு... போறும்... என்ன, கிழிக்கட்டுமா?" என்றார்.

மணவாளன் நெஞ்சை நிமிர்த்தினான். "சாமீ! ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பைசாக் குறைவா நான் செலுத்தப் போறதில்லே...



வைராக்கியம் வெச்சிட்டேன்... எப்படி யாவது பணம் சேர்த்துடுவேன்...'' என்றான்.

இளையாழ்வார் தபாலாபீஸில் சேமிப்புக் கணக்கு, இன்ஷூரன்ஸ் எல்லாம் வரவு செலவு செய்தவர். இப்போது பென்ஷன் வருகிறது. ஓராயிரம் ரூபாயாவது. இந்த ஜன்மத்தில் சேர்கிறதாவது!

'அப்பன் பாட்டன் காலத்திலே வகையா வாழ்ந்துட்டாங்க இல்லே... அந்த நினைப்பு விடல்லே....பாவம் மணவாளன்!' அவர் வேறு ஆள் பார்க்க நகர்ந்து விட்டார்.

அன்றைக்குச் சொல்லியாயிற்று இளையாழ்வாரிடம். ஏண்டா அப்படிச் சொன்னோம் என்று மணவாளனுக்குத் தோன்றவே இல்லை. 'ஆயிரம் ரூபாய் என்பது பெரிய தொகையா? பெரிய பெருமாள் மனசு வைச்சா, தாயார் கடைக்கண் பார்த்தா ஆயிரமென்ன லட்ச ரூபாய்க் கூட தீயினில் தூசாகும்!

திருமங்கை மன்னர் ஒரு ராத்திரியிலேயே மதில் கட்டினாராம்.

அம்மாடியோவ்! அவங்கல்லாம் மனுஷங்க இல்லே, தெய்வம்! மணவாளன் பெருமூச்சு விடுகிறான்.

''அப்போவ்!''

கனவு கலைகிறது.

எதிரே மகள். பெயர் நப்பின்னை. இதிலெல்லாம் குறைச்சலில்லை. வாய்த்த பெண்டாட்டியின் பெயர் நாச்சியார். மகன் நம்பி — தாத்தாவின் பெயர். கடைக்குட்டி வகுளாபரணன்.

இந்த நம்பிப் பயல் ஸ்டேட் பர்ஸ்ட் வருவான் என்று மணவாளன் கனவு கண்டான். கடைசியில் என்னவென்றால் அவன் நம்பரே பேப்பரில் வரவில்லை. ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை... ஊஹூம்... அவன் நம்பர் வரவே இல்லை.

கடைசியில் நம்பி, டூரிஸ்ட் பஸ் ஏதாவது வராதா, யாராவது வடநாட்டுக்காரன் — அதிர்ஷ்டவசமாய் வெளிநாட்டு ஆசாமி — கிடைக்க மாட்டானா என்று அலைகிற டூரிஸ்ட் கைடாக — யாரும் ஏதும் சொல்லித் தரவில்லை. தானாகக் கைவந்த கலை — கேட்டுக் கேட்டுப் பழகிய பழம்பெருமைகளை புது மெருகுடன், உடைசல் ஆங்கிலம், தெலுங்கு, இந்தியுடன் சமயத்திற்குத் தக்கவாறு எடுத்துச் சொல்லி, ஒரு நாளில் அதிக பட்சம் பத்து ரூபாய் — சம்பாதிப்பதில் காலத்தைக் கழித்து வருகிறான்.

''அப்போவ்!'' மறுபடி கூவினாள் நப்பின்னை.

''என்னம்மா?''

''ஸ்கூல்பீஸ் கட்டணும். பிக்னிக் போறாங்களாம்... அதுக்கு இருபத்தி அஞ்சு ரூவா வேணும்... நாளைக்குக் கட்டாட்டி பேர் அடிச்சுடுவாங்களாம்...''

மணவாளன் அவளை நிமிர்ந்து பார்த்தான். நப்பின்னையின் கண்கள் — அழகாய், பெரிதாய், காதளவு நீண்ட கண்கள் — அவளைப் போலவே அவளும் கனவு காண்கிறாள் என்பதை நினைவூட்டின.

''நாளைக்குத்தானே கட்டணும்? கட்டிட்டாப் போச்சி...''

''போங்கப்பா நீங்க இப்படித்தான் சொல்லுவீங்க, ஆனா கட்ட மாட்டீங்க...'' என்று சிணுங்கியபடியே நப்பின்னை போய் விட்டாள்.

'இந்தப் பெண் கூட என்னை எவ்வளவு நன்றாக எடை போட்டு வைத்திருக்கிறாள்!

நம்பி அவசர அவசரமாக வந்தான்.

''அப்பா! ஒரு அஞ்சு ரூவா குறையுது.





பொங்கலும் தங்கலும்!

அவன்: பொங்கலுக்கு வந்த உங்க மருமகனும் பெண்ணும் இன்னும் இங்கேயே இருக்கிறார்களா? நீங்கள் பொறுமைசாலிதான்!

இவன்: பொறுமைசாலி நான் இல்லே; என் மாமனார்தான். நானே அவர் வீட்டில்தானே எனது தலைப் பொங்கல் முதலாகத் தங்கியிருக்கிறேன்.

— எஸ். வேலு

உங்ககிட்ட இருக்குமா?'' என்று கேட்டான்.

''இல்லேயேப்பா, என்ன விஷயம்?''

நம்பி பதில் சொல்வதற்குள், ''நமஸ்காரண்டி!'' என்றபடியே தலைநிறையத் தலைப்பாகையுடன் ஓர் ஆந்திராவாடு உள்ளே நுழைந்து கைகூப்பி நின்றார்.

''பாவம்ப்பா... வந்த இடத்திலே இவர் பைய எவனோ திருடிட்டான். சாப்பிட்டே இரண்டு நாளாச்சாம். என் கையிலே பத்து ரூவா இருக்கு. பதினைஞ்சிரூவா கொடுத்தா ஊர் போய்ச் சேர்ந்ததும் அனுப்பறேங்கறாரு.''

மணவாளன் பெருமூச்சு விட்டான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! அடேய், என்னைப் போலவே நீயும் பைத்தியக்காரனாய் இருக்கியேடா! அவனவன் ஆள் அகப்பட்டால் தேட்டை போடறான். நீ என்னடான்னா கைக்காசை எடுத்துத் தானம் கொடுக்கறேங்கிறே. வம்சாவளிடா, வம்சாவளி.'

கடைசியில் ஆந்திராவாடு பத்து ரூபாயோடு புறப்பட்டுப் போனார்.

கும்பாபிஷேகத்திற்கு நாள் கூட வைத்து விட்டார்கள். இப்போது மணவாளன், அந்த ஆயிரம் ரூபாயைக் கோபுரத் திருப்பணிக்கு எப்படியாவது செலுத்தி விடுவதற்குப் பரபரக்க ஆரம்பித்தான். திண்ணையில் படுத்தபடியே ஆகாயத்தைப் பார்த்தவனுக்கு ஒரு வழியும் புலனாகவில்லை. இந்தத் திருப்பணிக்கு எங்க வம்சத்துக் காணிக்கை எப்படியாவது போய்ச் சேரணும்... பணம் செலுத்தறதா நேர்ந்துட்டிருக்கக் கூடாது... நேர்ந்துகிட்ட பிற்பாடு செலுத்தாம இருந்தா, அது பேரன் பேத்திகளைக் கூட தொடர்ந்திட்டிருக்கும்... அழகிய மணவாளா, நம்பெருமாளே உன் திருவுள்ளம் என்னவோ!'

பெருமூச்சு மெல்ல மெல்ல விம்மலாகி, அது மெல்ல மெல்ல அழுகையாக நெஞ்சைப் பிளந்து கொண்டு வெளிப்படலாயிற்று. அந்த அழுகை மெல்ல மெல்ல அவனை ஆழ்துயிலில் அமிழ்த்திற்று.

எவ்வளவு நேரம் ஆயிற்றோ, யாரோ வந்து தன்னை உலுக்குவது உணர்ந்து விழித்தான்.

''ஏய், என்ன தூக்கம் இன்னமும்?'' குரல் மிக அருகாமையில், அவனைக் கிட்டத்தட்ட அணைத்துக் கொண்டு, ரொம்பவும் அந்நியோன்யமாய் வினவிற்று.

மணவாளன் அந்தக் குரலைத் துழாவிப் பார்த்தான். எங்கோ கேட்ட குரல்! மிகவும் அணுக்கமான குரல்! அந்தக் குரலுக்குள் பழைமை நெடி வீசிற்று. 'யாரிவன்?'

''ஏய், என்னைத் தெரியலையா? என்ன முழிக்கிறே?''

மணவாளன் எழுந்து உட்கார்ந்தான். இப்போது அவனுக்குத் தெரிந்து போயிற்று.

''அட! நீ குலசேகரன் இல்லே... ஏய், நாச்சி இங்கே வா... இது யார் தெரியுமில்லே, குலேசு! ஏய், நீ இன்னமும் குலேசு தானடா? நாச்சீ... நானும் இவனும் அந்த நாளில் அடிச்சிருக்கிற கொட்டம் கணக்கு வழக்கில்லே... ஏய் குலேசு, நீ பம்பாய்க்கில்லே போனே... எப்ப வந்தே? புள்ளை குட்டி எப்படி இருக்காங்க?''

''உன்னை இவ்வளவு நாள் கழிச்சிப் பார்க்கிற போது எத்தனை சந்தோஷமாய் இருக்கு தெரியுமா? பழைய ஸ்ரீரங்கமாடா இது? எல்லாமே மாறிப் போயிருக்கு. ஆனா நீ மட்டும் மாறலே...'' என்றான்.

மணவாளன் மெல்லச் சிரித்தான்.

''சரி, கிளம்பு'' என்றபடியே எழுந்தான் குலசேகரன்.

''எங்கே?'' என்று கேட்டான் மணவாளன்.

''முதலிலே கொள்ளிடத்திலே குளிக்கணும்... பெரிய கோயிலில் சேவை பண்ணிக்கணும்... அப்புறமா கோபுரத் திருப்பணிக்காக ஒரு சின்னத் தொகை கொண்டு வந்திருக்கேன், அதைச் செலுத்தணும்...''

''ஓ... புறப்படலாமே... நாச்சீ! மத்தியான சாப்பாடெல்லாம் தயார் பண்ணி வை...'' என்றவன் ஏதோ நினைவு வந்தவனாய் உட்புறம் சென்று சமையற்கட்டுக்குள் நாச்சியார் அம்மாளிடம், ''வராதவன் வந்திருக்கான்... ஒரு பாயசம் படைச்சாத்தான் மரியாதை!'' என்று நெளிந்தான்.

நாச்சியார் அம்மாள் தலையை அசைத்தாள். ஆனால் அவள் எப்படிப் பாயசம் வைப்பாள் என்று மணவாளனுக்குப் புரியாத புதிராக இருந்தது. பிள்ளையாண்டானோ, கிடைத்த பத்து ரூபாயை அந்த ஆந்திராக் காரருக்குத் தானம் வார்த்து விட்டான். செப்பிடு வித்தை செய்தால் ஒழிய, அடுப்பில் பால் பொங்கிப் பாயசம் தலைகாட்டாது. ஆயினும் நாச்சியார் தலையசைத்ததில் மணவாளனுக்குத் தன் தலையிலிருந்து ஒரு பாரம் இறங்கிய நிம்மதி.

நண்பர்கள் கொள்ளிடத்தை நோக்கிப்

** மனிதனிடம் மிருகத் தன்மையும் உண்டு; தெய்வத்தன்மையும் உண்டு. கலையின் இலட்சியம் மிருகத் தன்மையை அடக்கி தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதாகவே இருக்க வேண்டும்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

பரிசு ரூ. 200/-

பொன்மொழிப் போட்டி — 10

இந்த இதழின் உள்பக்க மார்ஜின்களில் உள்ள ஐந்து பொன்மொழிகள் யாரால் உதிர்க்கப் பட்டவை? கீழே உள்ள ஐந்து பெயர்கள் அருகே வெற்றிடத்தில் பொருத்தம் பார்த்துப் பொன் மொழியைப் பிழையின்றி முழுமையாக எழுதவும். விலாசத்தைப் பூர்த்தி செய்து இந்த அரைப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்பவும். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். உறையின்மேல் "பொன்மொழிப் போட்டி — 10" என்று குறிப்பிடவும்.



சத்யசாயி பாபா:

பெர்னார்ட்ஷா:

கல்கி:

தியாகையர்:

நியூட்டன்:

முடிவு தேதி: 25.3.87

என் பெயர்: ....

விலாசம்: ....

....

புறப்பட்டார்கள். வழி நெடுகப் பழைய கதை களை எல்லாம் குலசேகரன் விவரித்தான். பம்பாயில் சொந்த வீடு, ஒரு கார், ஒரு மகன் அமெரிக்காவில் படிக்கிறானாம். கேட்கக் கேட்க மணவாளனுக்குப் பெருமையாக இருந்தது. ஒரு காலத்தில் கோபுரமாக இருந்த தன்னுடைய வம்சம் இப்போது குப்பை மேடாகிவிட்டதையும், ஒருகாலத்தில் குப்பை மேடாக இருந்த குலசேகரனின் வம்சம், இப்போது கோபுரமாகி விட்டதையும் எண்ணிப் பார்க்கிறபோது, அந்த வியப்பு பெரிய வினாக்குறியாக மாறிற்று.

"ஒரு பத்தாயிரம் ரூபாய், கோபுரத் திருப் பணிக்குக் கொடுக்கலாம்னு இருக்கேன். ஆனாலும் பாருடா! உன்னைப் பார்த்தா எனக் குப் பெருமையாவும் கொஞ்சம் பொறாமை யாவும் கூட இருக்கு. என்னால் தர முடிஞ்சது பத்தாயிரம் ரூபாய்தான். ஆனால் நீ உன் உழைப்பை — ரத்தத்தை, வியர்வையை, மூச்சை எல்லாம் ஆத்மார்த்தமா பெருமா ளுக்குச் செலுத்தியிருக்கியேடா!"

மணவாளனுக்கு இந்தப் பேச்சு சற்று சமாதானமாக இருந்தாலும் நேர்ந்துக்கிட் டதை தன்னால் ஒரு நாளும் நிறைவேற்ற முடி யாது என்பதால் ஏற்பட்ட ஏக்கம் பெருமூச் சாக வெளிப்பட்டது.

"மணவாளா! இந்தப் பத்தாயிரம் என் னாலே கொடுக்க முடியுதுன்னு சொன்னா அதுக்கு யார் காரணம் தெரியுமா?" வினவி னான் குலசேகரன்.

மணவாளன் விழித்தான்.

"நீதான் காரணம். உங்க குடும்பம் கார ணம். நீங்க ஏத்தி வச்ச விளக்கு இப்போ கார்த்திகை தீபமாய் எரியுது."

"குலேசு, நீ என்ன சொல்றே?"

"ஏண்டா, மறந்துட்டியா அதெல்லாம்? நான் பம்பாய் போற போது, உங்கப்பா என்னை ஆசிர்வாதம் செஞ்சி பணம் கொடுத் தாரே ஞாபகம் இல்லே?"

"அப்படியா? இருக்கலாம்... அவர் காலத் தில் செயலாய் இருந்தாரு... கொடுத் தாரு..."

"அந்தப் பணத்திலேதாண்டா என் வாழ்க் கையே உன்னதமான நிலைமைக்கு வந்தது. அட, பணத்தை விட்டுத் தள்ளு... உங்கப்பா வின் ஆசிர்வாதத்துலேதாண்டா நான் இந்த நிலைமைக்கு வந்திருக்கேன்... உங்க குடும்பத் துக்குப்பட்ட கடனை எப்படி அடைக்கப் போறேனோ தெரியலே... மணவாளா! இப்ப நான் சொல்லப் போறதை நீ மறுக்காம ஏத் துக்கணும்... உங்க குடும்பத்துக்குப் பட்ட கடனை நான் செலுத்தப்போறேன். என்னாலே தர முடிஞ்சதெல்லாம் பணம்தான்..."

மணவாளனுக்குக் கண்களில் நீர் சுரந் தது. பெரியபெருமாள், திருப்பணிக்கு அவன் நேர்ந்து கொண்டதை எவ்வளவு அழகாய் வசூல் செய்து கொள்ளத் திட்டமிட்டு விட் டார்!

எதிரே குலசேகரன், கோபுரமாய், தன்னு டைய கனவின் நனவாய், ஆதர்சமாய், நிற்கக் கண்டான்.

உங்களுக்காகவே



அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குணு

கூந்தல் தைலம்

தலை மயிர் உதிர்தல், செம்பட்டை நிறம்,
பருவத்திற்கு முன்பு ஏற்படும் பித்த நரைகள் மாறும்,
தினசரி தலைகுளித் தடவி வந்தால் தலை மயிர்
நீண்டு கறுத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு
பொடுகு, மண்டையில் சொறிந்தால் செதில் உதிதல்
குணமாகும். பெண்கள் ஆண்கள் அனைவரும்
விரும்பி உபயோகிக்கின்றனர்
1 பாட்டில் விலை ரூ 16-25 V.P.P. உண்டு
தபால் செலவு இல்லை.

தேவைக்கு எழுதவும் **நவசக்தி வைத்தியசாலை**
தபால் பெட்டி எண் 7 சேலம் 636 001

இப்பொழுது கவர்ச்சியான புதிய பேக்கிங்கில் கிடைக்கிறது

எமது தைலம் கிடைக்குமிடங்கள் : 1. சேலம் — ரோக மெடிக்கல்ஸ் 2. ஆத்தூர் — முத்து மெடிக்கல்ஸ். 3. நாமக்கல் — கஸ்தூரிபா மெடிக்கல்ஸ். 4. ராசிபுரம் — ராசி மெடிக்கல் ஸ்டோர்ஸ். 5. மேட்டூர் — ஜெயலக்ஷ்மி மெடிக்கல்ஸ். 6. திருச்செங்கோடு — சீனிவாசா மெடிக்கல்ஸ். 7. தர்மபுரி — விஜயலக்ஷ்மி மெடிக்கல்ஸ். 8. கிருஷ்ணகிரி — கோபாலகிருஷ்ணா மெடிக்கல்ஸ். 9. ஒசூர் — மூர்த்தி மெடிக்கல்ஸ். 10. பெங்களூர் — பிரசாத் ஸ்டோர்ஸ் K.G. சர்க்கிள். 11. சென்னை-3 — ஹேமா மெடிக்கல்ஸ். 12. அமிஞ்சிகரை — வேலவன் மெடிக்கல்ஸ். 13. குடியாத்தம் — திருமகள் மெடிக்கல்ஸ். 14. காஞ்சிபுரம் — லக்ஷ்மி மெடிக்கல்ஸ். 15. அரக்கோணம் — அகிலாம்பிகை மெடிக்கல்ஸ் 16. ஆரணி — பாக்கியம் அண்ட் கோ., மருந்துகடை. 17. திருவண்ணாமலை — அன்னை மெடிக்கல்ஸ். 18. வேலூர் (N.A.) — பாரத் மெடிக்கல்ஸ். 19. திருப்பத்தூர் (N.A.) — லக்ஷ்மி மெடிக்கல்ஸ். 20. விழுப்புரம் — அன்பு மெடிக்கல்ஸ். 21. கள்ளக்குறிச்சி — A. ராஜீ நாட்டு மருந்துக்கடை 22. கும்பகோணம் — செல்வம் மெடிக்கல்ஸ். 23. தஞ்சாவூர் — சிட்டி மெடிக்கல்ஸ். 24. திருச்சி — சண்முகா மெடிக்கல் ஹால். 25. திண்டுக்கல் — தமிழ்நாடு சித்த மருந்துக்கடை. 26. பெரியகுளம் — N. லக்ஷ்மணன் மருந்துக்கடை. 27. தேனி — ஆண்டாள் மெடிக்கல்ஸ் 28. மதுரை — குமார் மெடிக்கல்ஸ். 29. மதுரை ஸ்டேட் மெடிக்கல் கார்பரேசன் (24 மணி நேர கடை). 30. ராமநாதபுரம் — பாத்மா மெடிக்கல்ஸ். 31. காரைக்குடி — மலேசியா ஜெனரல் ஸ்டோர்ஸ். 32 விருதுநகர் — S.S.K. மெடிக்கல்ஸ். 33. தூத்துக்குடி — அன்பு மெடிக்கல்ஸ். 34. திருநெல்வேலி — கோமதி மெடிக்கல்ஸ். 35. பாளையங்கோட்டை — ஒலிவா இந்தியன் மெடிக்கல்ஸ். 36. நாகர்கோவில் — S. நல்ல பெருமாள் மருந்துக்கடை 37. தென்காசி — M.R. மெடிக்கல்ஸ். 38. ராஜபாளையம் — அரவிந்த் மெடிக்கல்ஸ். 39. விழுப்புரம் — விசாலம் மெடிக்கல்ஸ். 40. கோவில்பட்டி — சாந்தி மெடிக்கல்ஸ். 41. ஸ்ரீ வில்லிபுத்தூர் — பாலாஜி மெடிக்கல்ஸ். 42. உடுமலை — ஜாம் ஜாம் மெடிக்கல்ஸ். 43. பொள்ளாச்சி — ராமநாதன் மெடிக்கல்ஸ். 44. கோவை — காசிநாத் அண்ட் கோ., 45. கோவை — திருமலை மெடிக்கல்ஸ், காந்திபுரம். 46. திருப்பூர் — கீதா மெடிக்கல்ஸ். 47. சிவகங்கை குணு & கோ (கெமிஸ்ட்). 48. கோபி — வாணி பார்மஸி. 49. ஈரோடு — ஸ்ரீ ராகவேந்திரசாமி மெடிக்கல்ஸ். 50. திருச்சி ஜங் — சுபஸ்ரீ மெடிக்கல்ஸ். 51. புதுக்கோட்டை — மீனு பார்மஸி. 52. திருவாரூர் — அன்னபூர்ணா மெடிக்கல்ஸ். 53. மாயவரம் — ஸ்வாமி மெடிக்கல்ஸ். 54. சிதம்பரம் — ராஜா பார்மஸி. 55. விருத்தாசலம் — ஜெயா பார்மஸி. 56. சேலம் செவ்வாய்பேட்டை — பிரபாத் மெடிக்கல்ஸ். 57. திருவண்ணாமலை — ஸ்ரீ அண்ணாமலையார் மெடிக்கல்ஸ். 58. கிருஷ்ணகிரி — பி. கே. பி. எம். ஜி. மெடிக்கல்ஸ். 59. கரூர் — அண்ணாமலை மெடிக்கல்ஸ். 60. நாமக்கல் — சரஸ்வதி மெடிக்கல் ஹால். 61. காரைக்குடி — சரோஜா ட்ரக்ஸ் ஸ்டோர்ஸ். 62. பாண்டிச்சேரி — ராஜா மெடிக்கல்ஸ். 63. திருவனந்தபுரம் — தாஜு & கோ., 64. மதுரை — 1 பிரவீன் மெடிக்கல்ஸ். 65. நாகை — ரங்கா ஸ்டோர்ஸ். 66. மைலாப்பூர் — R.R. பார்மஸி. 67. தி. நகர் — சுந்தரம் ஸ்டோர்ஸ் (கெமிஸ்ட்) 68. சேலம் — சாமுண்டி சூப்பர் மார்க்கெட். 69. கடலூர் — சிவா மெடிக்கல்ஸ். 70. ஊட்டி — நீலகிரிஸ் டிரக் ஸ்டோர்ஸ் & பார்மஸி. 71. தஞ்சாவூர் — 1 சிங்காரம் மெடிக்கல்ஸ் மார்ட். 72. மதுரை — 1 தனலட்சுமி ஏஜன்சீஸ்

இப்பொழுது எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது

எமது நவரத்ன கல்ப லேகியம் சக்திக்கும் வலிமைக்கும் அனைவரும் சாப்பிடத்தக்க சிறந்த டானிக்.
1 டப்பி ரூ 30/– **V.P.P.** உண்டு. தபால் செலவு இல்லை. எமது ஏஜன்ட்களிடமும் கிடைக்கும்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

இருபதாம் அத்தியாயம்

"முதற் பகைவன்"

தக்க சமயத்தில் ஆந்தை செய்த உதவியை ஆழ்வார்க்கடியான் மனத்திற்குள் பெரிதும் பாராட்டினான். ஏனெனில், காட்டின் மத்தியில் கூடியிருந்த சதிகாரர்கள், சிறகடித்துக் கொண்டு உறுமிய ஆந்தையைப் பார்த்து அதனால் ஏற்பட்ட சத்தந்தான் என்று எண்ணிக் கொண்டார்கள். "அடே! இந்தக் கோட்டான் நம்மைப் பயப்படுத்திவிட்டது! வெட்டுடா அதை!" என்றான் ஒருவன். "வேண்டாம்! உங்கள் கத்திகளை வேறு முக்கியமான காரியங்களுக்குப் பத்திரப்படுத்தி வையுங்கள். நம் பகைவர்களைப் பூண்டோடு ஒழிப்பதற்குக் கூராக்கி வையுங்கள்! ஆந்தையும் கோட்டானும் நம் பகைவர்கள் அல்ல; அவை நம் சினேகிதர்கள்! மனிதர்கள் சாதாரணமாய் உறங்கும் சமயங்களில் நாம் கண் விழித்திருக்கிறோம். நம்மோடு ஆந்தைகளும் கூகைகளும் கண் விழித்திருக்கின்றன!" என்றான் ரவிதாஸன் என்பவன். அவனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டே மெள்ள மெள்ள அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்து திருமலையப்பன் ஒரு பெரிய மருத மரத்தின் சமீபத்தை அடைந்தான். நூறு வயதான அந்த மரத்தின் பெரிய வேர்கள் நாலாபுறத்திலும் ஓடியிருந்தன. ஓர் ஆணி வேருக்கும் இன்னோர் ஆணி வேருக்கும் மத்தியில் தரையிலும் இடைவெளியிருந்தது; மரத்தின் அடிப்பக்கத்திலும் நல்ல குழிவு இருந்தது. அத்தகைய குழிவு ஒன்றில் மரத்தோடு மரமாகச் சாய்ந்து கொண்டு ஆழ்வார்க்கடியான் நின்றான்.

"தஞ்சாவூர் இராஜ்யத்தின் பொக்கிஷம் இருக்கும் வரையில் நமக்கு வேண்டிய பொருளுக்குக் குறைவு இல்லை. எடுத்த காரியத்தை முடிக்க வேண்டிய நெஞ்சுத் துணிவு வேண்டும். காரியம் முடிகிற வரையில் வெளியில் தெரியாதபடி இரகசியத்தைப் பேணும் சக்தி வேண்டும்! நமக்குள் இரண்டு பிரிவாகப் பிரிந்து கொள்ள வேண்டும். ஒரு பிரிவினர் உடனே இலங்கைக்குப் போக வேண்டும். இன்னொரு பிரிவினர் தொண்டை மண்டலம் சென்று காரியசித்திக்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருக்க வேண்டும். ஏறக்குறைய இரண்டு காரியங்களும் ஒரே சமயத்தில் முடிய வேண்டும். ஒரு பகைவனை முடித்த பிறகு அவகாசம் கொடுத்தால் இன்னொரு பகைவன் ஜாக்கிரதையாகிவிடுவான்! அதற்கு இடமே கொடுக்கக் கூடாது. தெரிகிறதா? உங்களில் இலங்கைக்குப் போக யார் யார் ஆயத்த

மாயிருக்கிறீர்கள்?'' என்றான் ரவிதாஸன்.

''நான் போகிறேன்!'' ''நான்தான் போவேன்!'' என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் கேட்டன.

''யார் போகிறது என்பதை அடுத்த முறை பாண்டிய நாட்டில் கூடித் தீர்மானிக்கலாம்! அதுவரைக்கும் இங்கே செய்ய வேண்டிய ஏற்பாடுகள் இன்னும் சில இருக்கின்றன!'' என்றான் ரவிதாஸன்.


''ஈழத்துக்கு எந்த வழி போவது நல்லது?'' என்று ஒருவன் கேட்டான்.

''கோடிக்கரை வழியாகப் போகலாம். கடலைக் கடப்பதற்கு அது நல்ல வழி. ஆனால் இங்கிருந்து கோடிக்கரை வரையில் செல்வது கடினம். நெடுகிலும் பகைவர்கள். ஆங்காங்கே ஒற்றர்கள். ஆகையால், சேதுவுக்குச் சென்று அங்கே கடலைத் தாண்டி மாதோட்டத்துக்கருகில் இறங்குவதுதான் நல்லது. இலங்கை போகிறவர்கள் சமயத்தில் படகு வலிக்கவும், கட்டு மரம் தள்ளவும், கடலில் நீந்தவும் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். இங்கே யாருக்கு நீந்தத் தெரியும்?''

''எனக்குத் தெரியும்'' ''எனக்கும் தெரியும்'' என்ற குரல்கள் எழுந்தன.

''முதலில், இலங்கை மன்னன் மகிந்தனைக் கண்டு பேசிவிட்டுப் பிறகு காரியத்தில் இறங்க வேண்டும். ஆகையால் ஈழத்துக்குப் போகிறவர்களில் ஒருவருக்காவது சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும். ஆ! நமது சோமன் சாம்பவன் இன்னும் வந்து சேரவில்லையே? யாராவது அவனை இன்றைக்குப் பார்த்தீர்களா?''

''இதோ, வந்து கொண்டிருக்கிறேன்!'' என்று ஆழ்வார்க்கடியானுக்கு மிக்க சமீபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. அடியான் மேலும் மரத்தோடு மரமாக ஒட்டிக் கொண்டான். அடாடா! இந்தப் பாழும் உடம்பு இப்படிப் பெருத்துவிட்டது எவ்வளவு சங்கடமாயிருக்கிறது!



புதிதாக இரண்டு பேர் அக்கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

ஆழ்வார்க்கடியான் தன் முகத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் மரத்துக்கு வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான். புதிதாக வந்தவர்கள் இருவரும் கொள்ளிடக் கரையில் அரச மரத்தடியில் சந்தித்துப் பேசியவர்கள்தான் என்று தெரிந்து கொண்டான்.

புது மனிதர்களைக் கண்டதும் ரவிதாஸன் ''வாருங்கள்! வாருங்கள்! ஒருவேளை ஏதாவது உங்களுக்கு ஆபத்து வந்துவிட்டதோ, வராமலே இருந்துவிடுவீர்களோ என்று பயந்தேன். எங்கிருந்து எந்த வழியாக வந்தீர்கள்?'' என்றான்.

''கொள்ளிடக் கரையோடு வந்தோம். வழியில் ஒரு கூட்டம் நரிகள் வளைத்துக் கொண்டன. நரிகளினிடம் சிக்காமல் தப்பித்து வருவதற்கு நேரம் ஆகிவிட்டது!'' என்றான் சோமன் சாம்பவன்.

''புலிக்கும், சிங்கத்துக்கும் பயப்பட்டால் பொருள் உண்டு. நரிக்குப் பயப்படுகிறவர்களால் என்ன காரியத்தைச் சாதித்துவிட முடியும்?'' என்றான் அந்தக் கூட்டத்துக்கு முன்னமே வந்திருந்தவர்களில் ஒருவன்.

''அப்படிச் சொல்லாதே, அப்பனே! சிங்கம், புலியைக் காட்டிலும் நரி பொல்லாதது! ஏனெனில், சிங்கமும் புலியும் தனித்தனியே பாய்ந்து வரும் விரோதிகள். அவற்றோடு சண்டையிட்டுச் சமாளிக்கலாம். ஆனால் நரிகளோ கூட்டங்கூட்டமாக வருகின்றன. ஆகையால், அவற்றுக்குப் பலம் அதிகம். சோழநாட்டு நரிகள் பெருங்கூட்டமாக வந்ததினால் தானே நம் ஒப்பற்ற மன்னாதி மன்னன் தோற்கவும் உயிர் துறக்கவும் நேர்ந்தது.

இல்லாவிட்டால் அவ்விதம் நேர்ந்திருக்குமா?''

''அந்த நரிக் குலத்தை அடியோடு அழிப்போம்! பூண்டோடு நாசம் செய்வோம்!'' என்றுஆங்காரத்துடன் கூவினான் சோமன் சாம்பவன்.

''இதோ அதற்கு வேண்டிய உபகரணங்கள்!'' என்று ரவிதாஸன் பொன் நாணயங்களின் குவியலைச் சுட்டிக் காட்டினான்.

சோமன் சாம்பவன் நாணயங்கள் சிலவற்றைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு, ''ஆ! ஒரு பக்கம் புலி; இன்னொரு பக்கம் பனை!'' என்று சொன்னான்.

''சோழனுடைய பொன்; பழுவேட்டரையனுடைய முத்திரை. நான் சொன்னது சொன்னபடி நிறைவேற்றிவிட்டேன். உங்களுடைய செய்தி என்ன? நமது இடும்பன்காரி ஏதாவது செய்தி கொண்டு வந்திருக்க வேண்டுமே?'' என்றான் ரவிதாஸன்.

''ஆம்; கொண்டு வந்திருக்கிறார். கேளுங்கள்! அவரே சொல்லுவார்!''

இடும்பன்காரி சொல்லத் தொடங்கினான்: ''தங்கள் கட்டளைப்படியே சம்புவரையர் மாளிகையில் பணியாளாக நான் அமர்ந்து வேலை பார்த்து வருகிறேன். அதனுடைய பலன் நேற்றிரவுதான் சித்தித்தது. நேற்று சம்புவரையர் மாளிகையில் ஒரு பெரிய விருந்து நடந்தது. பெரிய பழுவேட்டரையர், வணங்காமுடி முனையரையர், மழபாடி மழுவரையர் முதலிய பலர் வந்திருந்தார்கள். குரவைக் கூத்தும் வேலனாட்டமும் நடைபெற்றன. வேலனாட்டம் ஆடிய தேவராளனுக்குச் சந்நதம் வந்து குறி சொன்னான். அவன் சொன்னது நம்முடைய நோக்கத்துக்கு அனுசரணையாகவே இருந்தது. பழுவேட்டரையருடன் வந்த மூடு பல்லக்கில் அவருடைய இளைய ராணி வந்திருப்பதாக எல்லாரும் எண்ணியிருந்தார்கள். சுந்தர சோழ மகாராஜாவுக்கு உடல் நலம் சரியாயில்லையென்றும் அதிக நாள் உயிரோடிருக்கமாட்டாரென்றும் பழுவேட்டரையர் தெரிவித்தார். எல்லாருமாகச் சேர்ந்து அடுத்தபடி பட்டத்துக்குவரவேண்டியவர் ஆதித்த கரிகாலர் அல்ல, மதுராந்தக தேவர் என்று முடிவு செய்தார்கள். ஆனால் மதுராந்தக தேவர் இதற்குச் சம்மதிப்பாரா என்று சிலர் கேட்டார்கள். 'அவர் வாயினாலேயே அதற்கு மறுமொழி கூறச் செய்கிறேன்' என்று சொல்லிப் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் திரையைத்திறந்தார். அதற்குள்ளிருந்து மதுராந்தக தேவர் வெளி வந்தார்! பட்டம் கட்டிக் கொள்ளத் தமக்குச் சம்மதம் என்று அவர் தெரிவித்தார்....''

''இப்படிப் பெண் வேஷம் போடும் பராக்கிரமசாலிக்கு முடி சூட்டப் போகிறார்களாம்! நன்றாய் சூட்டட்டும்! எல்லாம் நாம் எதிர்பார்த்தபடியேதான் நடந்து வருகிறது. இம்மாதிரி சோழ நாட்டிலேயே ஒரு குழப்பம் ஏற்படுவது நம்முடைய நோக்கத்துக்கு மிக உகந்தது. எது நேர்ந்தாலும், என்ன நடந்தாலும், நம்மை யாரும் சந்தேகிக்கமாட்டார்கள் அல்லவா? இடும்பன்காரி! மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர். ஆனால் இதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்? இதற்குச் சந்தர்ப்பம் எப்படிவாய்த்தது?'' என்றுகேட்டான் ரவிதாஸன்.

''நடு ராத்திரியில் அவர்கள் சபை கூடியபோது வேறு யாரும் அருகில் வராதபடி பார்த்துக் கொள்ள என்னைக் காவலுக்கு அமர்த்தியிருந்தார்கள். காவல் புரிந்து கொண்டே என் காதுகளையும் கண்களையும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தேன்.''

''அப்படி உபயோகப்படுத்தியதில் வேறு ஏதாவது தெரிந்ததா?''

''தெரிந்தது. அந்த நள்ளிரவுக் கூட்டத்தில் நடந்ததையெல்லாம் இன்னொரு வேற்று மனிதன் கோட்டை மதிள் சுவர் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்!''

''ஆஹா! அவன் யார்?''

''முன் குடுமி வைத்திருந்த ஒரு வைஷ்ணவன்....''

''ஆகா! அவன்தானா? அப்படி நான் நினைத்தேன். அவனை நீர் என்ன செய்தீர்? சம்புவரையரிடம் பிடித்துக்

கொடுக்கவில்லையா?''

''இல்லை, ஒருவேளை அவன் நம்மவனுயிருக்கலாம் என்று நினைத்துவிட்டேன். நீங்களே அனுப்பி வைத்தீர்களோ என்றும் எண்ணினேன்.''

''பெரிய பிசகு செய்துவிட்டீர். அவன் நம்மவன் அல்ல. கட்டையாய்க் குட்டையாய் இருப்பான். சண்டைக்காரன். பெயர் திருமலையப்பன். 'ஆழ்வார்க்கடியான்' என்று சொல்லிக் கொள்வான்.''

''அவனேதான். நான் செய்த பிசகை இன்று மத்தியானம் நானே உணர்ந்து கொண்டேன். அவன் நம் ஆள் அல்லவென்று தெரிந்தது.''

''அதை எப்படி அறிந்தீர்?''

''நேற்று இரவு கந்தமாறனின் பாலிய நண்பன் ஒருவனும் கடம்பூர் மாளிகைக்கு வந்திருந்தான். அவனுக்கும் பழுவேட்டரையர் கூட்டத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென்று தெரிந்தது. அவன் எங்கேயோ மூலையில் படுத்து நிம்மதியாகத் தூங்கினுன். இன்று காலையில் சின்ன எஜமானர் தம் சிநேகிதனைக் கொண்டு விடக் கொள்ளிடக் கரை வரையில் வந்தார். அவர் வரப்போவதை அறிந்து அவர் முன்னுல் அடிக்கடி நான் போய் நின்றேன். என்னையும் வரச் சொன்னுர். அவர் கொள்ளிடத்தின் வட கரையோடு திரும்விட்டார். என்னைத் தென் கரைக்கு வந்து அவ்வாலிபனுக்கு ஒரு குதிரை சம்பாதித்துக் கொடுத்து விட்டுத் திரும்பும்படி சொன்னுர். அங்கிருந்து குடந்தைக்குப் போய் என் அத்தையைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். அதனுல்தான் சந்தேகத்துக்கு இடமின்றி இங்கே வரமுடிந்தது.''

''சரிதான், சரிதான்! அந்த வீர வைஷ்ணவனைப் பற்றி எவ்விதம் தெரிந்து கொண்டீர்?''

''கொள்ளிடத்தில் படகு புறப்படும் சமயத்துக்கு அந்த வீர வைஷ்ணவன் வந்து படகில் ஏறிக் கொண்டான். அவன் கந்தமாறனின் சிநேகிதனுடு பேசிய சில காரமான வார்த்தைகளிலிருந்து எனக்குச் சிறிது சந்தேகம் உதித்தது; அவனும் நம்மைச் சேர்ந்தவனே என்று. மேலும் கொள்ளிடத்தின் தென்கரையில் அவன் எனக்காகக் காத்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. நம்முடைய அந்தரங்க சமிக்ஞையைச் செய்து காட்டினேன். ஆனுல் அவன் புரிந்து கொள்ளவில்லை. அதன்பேரில் அவன் நம்மவன் அல்ல என்று தீர்மானித்தேன்...''

''நீர் செய்தது பெரும் பிசகு! முன் பின் தெரியாதவர்களிடம் நம் சமிக்ஞையைச் செய்து காட்டக் கூடாது. நண்பர்களே! இதைக் கேளுங்கள். நம்முடைய காரியம் காஞ்சீபுரத்தில் இருக்கிறது! இலங்கையிலும் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் நம்முடைய பரம விரோதிகள் இருக்கிருர்கள். ஆனுல் அவர்கள் இரண்டு பேரையும் காட்டிலும் நம்முடைய கொடிய விரோதி, முதன்மையான விரோதி, ஆழ்வார்க்கடியான் என்று பொய்ப் பெயர் பூண்டு திரியும் திருமலையப்பன்தான். அவன் நம்மையும் நம் நோக்கத்தையும் அடியோடு நாசம் செய்யக் கூடியவன். நமக்கெல்லாம் இணையில்லாத் தலைவியாக உள்ள தேவியை அவன் கொண்டு போகப் பார்க்கிறவன். அடுத்தபடியாக அவனை உங்களில் யாராவது எங்கே கண்டாலும், எந்த நிலைமையில் சந்தித்தாலும் கைகளில் உள்ள ஆயுதத்தை உடனே அவன் மார்பில் பாய்ச்சிக் கொன்றுவிடுங்கள். ஆயுதம் ஒன்றுமில்லாவிட்டால் கையினுல் அவனுடைய மென்னியைத் திருகிக் கொல்லுங்கள். அல்லது சூழ்ச்சியால் விஷத்தைக் கொடுத்துக் கொல்லுங்கள்; அல்லது வெள்ளத்தில் தள்ளி முதலைப் பசிக்கு இரையாக்குங்கள். அல்லது ஏதாவது சாக்குச் சொல்லிப் பாறை உச்சிக்கு அழைத்துப் போய் அங்கிருந்து பிடித்துத் தள்ளிக் கொன்று விடுங்கள். தேள், நட்டுவாக்களி, பாம்பு முதலியவற்றைக் கண்டால் எப்படி இரக்கம் காட்டாமல் கொல்லுவீர்களோ, அப்படிக் கொன்று விடுங்கள்! துர்க்கா தேவிக்கோ, கண்ணகியம்மனுக்கோ பலி கொடுத்துவிட்டால் இன்னும் விசேஷம். எப்படியும் அவன் உயிரோடிருக்கும் வரையில் நம்முடைய நோக்கத்துக்கு இடையூருகவே இருப்பான்....!''

"ரவிதாஸரே! நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்வதற்கு அவன் பெரிய கைகாரனாயிருக்க வேண்டும். அப்படிப்பட்டவன் யார்?"

"யாரா? அவன் பயங்கர ஆற்றல் படைத்த ஒற்றன்!"

"யாருடைய ஒற்றன்?"

"எனக்கே அது வெகு காலம் சந்தேகமாகத்தானிருந்தது. சுந்தர சோழரின் ஒற்றனோ, ஆதித்த கரிகாலனின் ஒற்றனோ என்று சந்தேகப்பட்டேன். இல்லையென்று கண்டேன். பழையாறையில் இருக்கிறாளே, ஒரு கிழப் பாதகி, அந்தப் பெரிய பிராட்டியின் ஒற்றனாயிருக்கலாம் என்று இப்போது சந்தேகிக்கிறேன்."

"ஆகா! அப்படியா? சிவபக்தியில் மூழ்கி, ஆலயத் திருப்பணி செய்து வரும் அந்தச் செம்பியன் தேவிக்கு ஒற்றன் எதற்கு?"


"அதெல்லாம் பொய். இந்த முன் குடுமிக்காரனின் வீர வைஷ்ணவம் எப்படி வெளி வேஷமோ, அப்படித்தான் அந்த முதிய ராணியின் சிவ பக்தியும். பெற்ற பிள்ளைக்கே பெரும் சத்துருவாயிருக்கும் பிசாசு அல்லவா? அதனால்தானே, அவளுடைய சொந்தச் சகோதரனாகிய மழவரையன் கூட அவளுடன் சண்டை பிடித்துக் கொண்டு, பழுவேட்டரையன் கட்சியில் சேர்ந்திருக்கிறான்?"

"ரவிதாஸரே! அந்த முன் குடுமி வைஷ்ணவனைப் போல் இன்னும் யாராவது உண்டோ?"

"குடந்தையில் ஒரு ஜோசியன் இருக்கிறான். அவன் பேரிலும் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. வருகிறவர் போகிறவர்களுக்கு ஜோசியம் சொல்லுவதுபோல் சொல்லி வாயைப் பிடுங்கிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறான். அவனிடம் நீங்கள் யாரும் போகவே கூடாது. போனால் எப்படியும் நிச்சயமாக ஏமாந்து போவீர்கள்."

"அவன் யாருடைய ஒற்றன் என்று நினைக்கிறீர்கள்?"

"இன்னும் அதை நான் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒருவேளை தற்போது இலங்கையில் இருக்கும் போலி இளவரசனுடைய ஒற்றனாக இருக்கலாம். ஆனால் ஜோசியனைப் பற்றி அவ்வளவு கவலை எனக்குக் கிடையாது. அவனால் பெரிய தீங்கு எதுவும் நேர்ந்துவிடாது. வைஷ்ணவன் விஷயத்திலேதான் எனக்குப் பயம்! அவனைக் கண்ட இடத்திலே தேள், நட்டுவாக்களி, பாம்பை அடித்துக் கொல்வதுபோல் இரக்கமின்றிக் கொன்றுவிட வேண்டும்!"



இதையெல்லாம் மருத மரத்தின் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுக்கு மெய் நடுங்கியது; உடம்பெல்லாம் வியர்த்தது. அந்த மரத்தடியிலிருந்து உயிரோடு தப்பித்துப் போகப் போகிறோமா என்றே அவனுக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது.

போதும் போதாதற்கு அந்தச் சமயம் பார்த்து அவனுக்குத் தும்மல் வந்தது. எவ்வளவோ அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியவில்லை. துணியை வாயில் வைத்து அடைத்துக் கொண்டு நச்சென்று தும்மினான்.

அந்தச் சமயம் மேலக் காற்று நின்றிருந்தது. காட்டு மரங்களின் மர் மர சத்தமும் நின்று போயிருந்தது.

ஆகையால் திருமலையப்பனின் அடக்கிய தும்மல் சத்தம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த சதிகாரர்களுக்குச் சிறிது கேட்டுவிட்டது.

"அந்த மருத மரத்துக்குப் பின்னால் ஏதோ சத்தம் கேட்கிறது. சுளுந்தைக் கொண்டு போய் என்னவென்று பார்!" என்றான் ரவிதாஸன்.


சுளுந்து பிடித்தவன் மரத்தை நாடி வந்தான். அவன் அருகில் வரவர, வெளிச்சம் அதிகமாகி வந்தது. ஆச்சு! இதோ மரத்தின் முடுக்கில் அவன் திரும்பப் போகிறான். திரும்பிய உடனே சுளுந்து வெளிச்சம் தன் மேல் நன்றாய் விழப் போகிறது. அப்புறம் என்ன நடக்கும்? தப்பிப் பிழைத்தால் புனர் ஜன்மந்தான்!

திருமலையப்பனின் மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது. தப்பு வதற்கு வழி உண்டா என்று சுற்று



முற்றும்பார்த்தான். வழிகாணவில்லை. அண்ணாந்து பார்த்தான். அங்கே மரத்திலிருந்து பிரிந்து சென்ற மரக்கிளையில் ஒரு ராட்சத வெளவால் தலை கீழாகத் தொங்கித் தவம் செய்து கொண்டிருந்தது! உடனே ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று கைகளை உயர நீட்டி, அந்த வெளவாலைப் பிடித்துக் கையில் ஆயத்தமாக வைத்துக் கொண்டான்.

சுளுந்துக்காரன் மரத்தைத் தாண்டி வந்ததும், வெளவாலை அவன் முகத்



தின் மீது எறிந்தான்.

சுளுந்து கீழே விழுந்து வெளிச்சம் மங்கியது. வௌவாலின் இறக்கையால் முகத்தில் அடிபட்டவன், "ஏ! ஏ! என்ன? என்ன?" என்று உளறினான். பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. ஆழ்வார்க்கடியானும் ஓட்டம் பிடித்தான். அடுத்த கணம் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து மறைந்தான்.

பலர் சேர்ந்து, "என்ன? என்ன?" என்று கூச்சலிட்டார்கள். சுளுந்து ஏந்திய ஆள் வௌவால் தன்னைத் தாக்கியது பற்றி விவரம் கூறத் தொடங்கினான். இதெல்லாம் திருமலையப்பனின் காதில் கொஞ்ச தூரம் வரையில் கேட்டுக் கொண்டிருந்தது.

இருபத்தோராம் அத்தியாயம்

திரை சலசலத்தது!

ஒரே சமயத்தில் ஒருவனுக்குள்ளே இரண்டு மனங்கள் இயங்க முடியுமா? முடியும் என்று அன்றைக்கு வந்தியத்தேவனுடைய அநுபவத்திலிருந்து தெரிய வந்தது.

சோழ வள நாட்டிற்குள்ளேயே வளம் மிகுந்த பிரதேசத்தின் வழியாக அவன் போய்க் கொண்டிருந்தான். நதிகளில் புதுப்புனல் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த காலம். கணவாய்கள், மதகுகள், மடைகளின் வழியாக வாய்க்கால்களிலும் வயல்களிலும் குபுகுபுவென்று ஜலம் பாய்ந்து கொண்டிருந்தது. 'எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயமாயிருந்தது. சோழ தேசத்தை வளநாடு என்றும், சோழ மன்னனை வளவன் என்றும் கூறுவது எவ்வளவு பொருத்தமானது? — இப்படி எண்ணியவுடனே சோழ நாட்டுக்கும் சோழ மன்னனுக்கும் ஏற்பட்டிருந்த அபாயங்கள் அவன் நினைவுக்கு வந்தன. இந்த நிலைமையில் தன்னுடைய கடமை என்ன? இளவரசர் கரிகாலர் கொடுத்த ஓலையை மட்டும் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பித்து விட்டுத் தன் கடமை தீர்ந்தது என்று இருந்து விடுவதா? இந்த இராஜகுலத் தாயாதிக் காய்ச்சலிலும் பூசலிலும் நாம் எதற்காகத் தலையிட்டுக் கொள்ள வேண்டும்? சோழநாட்டுச் சிம்மாசனத்துக்கு யார் வந்தால் தான் நமக்கு என்ன? பார்க்கப் போனால் நம்முடைய குலத்தின் பூர்வீகப் பகைவர்கள்தானே இவர்கள்? சோழர்களும் கங்கர்களும் வைதும்பர்களும் சேர்ந்து கொண்டுதானே வாண கோப்பாடி ராஜ்யமே இல்லாதபடி செய்துவிட்டார்கள்? இன்றைக்கு ஆதித்த கரிகாலர் நம்மிடம் அன்பாக இருந்ததினால் அந்த அநீதியெல்லாம் மறைந்து போய்விடுமா? — சேச்சே! அந்தப் பழைய சம்பவங்களை அநீதியென்றுதான் எப்படிச் சொல்ல முடியும்? அரசர்கள் என்றால், ஒருவருக்கொருவர் சண்டையிடுவது இயற்கை. அதுபோலவே வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருவதும் இயற்கை. வென்றவர்கள் மீது தோற்றவர்கள் கோபங் கொள்வதில் என்ன பயன்? நம்முடைய மூதாதைகள் நல்லநிலைமையில் இருந்தபோது அவர்களும் மற்ற அரசர்களைக் கதிகலங்கத்தானே அடித்தார்கள்? அடியோடு 'அழித்துவிடத்தானே பார்த்தார்கள்? ஆ! அது என்ன பாடல்? — இதோ ஞாபகம் வந்து விட்டது!

"சேனைதழையாக்கிச் செங்குருதி
நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில் —
மானபரன்
பாவேந்தர் தம்வேந்தன் வாணன்
பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி!"

இப்படியெல்லாம் போர்க்களத்தில் கொடூரமான காரியங்களை நம்



கோத்ரெஜ்
புதிய
மேகா
ஏ ஓ எஸ்* கொண்ட
நீல டிடர்ஜென்ட் கட்டி
என்ன அருமையான சலவை!
போராடும் இந்தியாவின் நட்சத்திரம் ரஜனி
இப்போது மேகா மட்டுமே உபயோகிக்கிறார்.
MEGA
Mudra: B:GS 4223 TAM
*ஏ ஓ எஸ், அதிக நுரையையும் அதிக சலவைத் திறனையும் தரும் அற்புதமான மூலப்பொருள்.



அஞ்சலி கிருஷ்ணனின் அரங்கேற்றம்.
அஞ்சலி கிருஷ்ணன் 6 வயதிலிருந்தே பரத நாட்டியம் கற்றுக் கொண்டாள். நாளை அவளுக்கு அரங்கேற்றம்.
என் செல்லப் பொண்ணு, நல்லா ஆடுறாள். ம்ம்! நாளைக்கு ஒரே பரபரப்பா இருக்கும். இப்பவே நான் ட்ரிங்கா தயார் பண்றேன்.
அது ரொம்ப சுலபம்! 6 கிளாஸ் (1200 மி.லி.) தண்ணீரில் 11/4 கிலோ சர்க்கரை சேர்க்கவும். அதில் 150 மில்லி லிட்டர் ட்ரிங்கா ஸாஃப்ட் ட்ரிங்க் கான்ஸென்ட்ரேட் சேர்த்து நன்கு கலக்கவும்.
இது 3 பெரிய பாட்டில்கள் ஸிரப் தருகிறது. அதிலிருந்து 50 கிளாஸ்கள் ஒவ்வொன்றும் (200 மி.லி.) சுவைமிக்க கோல்டு ட்ரிங்க் தயாரிக்கலாம். இப்போது அது மிகவும் சிக்கனம்!
பயப்படாதேம்மா. சும்மா மேடைக்குப் போ..
அம்மா, எனக்கு நடுக்கமாயிருக்கு!
மேடையிலே போயி திறமையைக் காட்டேன்


அஞ்சலிக்கு இது வாழ்க்கையின் முக்கிய கட்டம். மேடையிலே ஏறியதும் பயமெல்லாம் பறந்துவிட்டது. சுற்றிச் சுழன்று ஆடினாள். ஆட்டம் பிரமாதம்.
"எக்ஸெலெண்ட்!
ஏ ஒன்!
ஆட்டம் அபாரம்!
வீடு திரும்பினார்கள். வீட்டிலே மகிழ்ச்சி வெள்ளம்.
விருந்தினரை வரவேற்க இது சிறந்தது. ட்ரிங்கா மட்டும் இல்லேன்னா என்ன ஆகி இருக்கும்!
அஞ்சலி, உன் ஆட்டம் பிரமாதம்டி!
அஞ்சலி, இன்னும் ஒரு கிளாஸ் ட்ரிங்கா சாப்பிடு?
ட்ரிங்கா-விருந்தாளிக்கு நல்வரவு
THE WELCOME DRINK
Trinka
Trinka



ஆயுள் காப்பு செய்து கொள்ளும் பொழுது சரியான விவரங்களைத் தெரிவியுங்கள்.

உரிய தொகையை துரிதமாக அளிக்க எங்களுக்கு உதவும்.

நீங்கள் ஆயுள்காப்பு பாலிசி எடுக்கும் பொழுது எல்ஐசி ஏஜண்ட் உங்களுககு எல்லாவிதத்திலும் உதவுவார்; சரியான அறிவுரைகள் வழங்குவார்.

பரிபூரண நன் நம்பிக்கை

ஆயுள் காப்பு பரிபூர்ண நன்நம்பிக்கை ஒப்பந்தம். (உள்ளதை உள்ளபடி தெளிவாக அறிவித்தல்) ஆதலால் உஙகளின் சரியான வயது, தேகநிலை விவரம், குடும்ப விவரம் மற்றைய விவரங்களெல்லாம் விண்ணப்ப தாட்களை பூர்த்தி செய்யும்பொழுது நீங்கள் சரியாகக் குறிப்பிட வேண்டும். இந்த விவரங்களை வைத்தே உங்களின் பிரேரணை பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

அனுகூலமானது

வியாதியால் பீடிக்கப்பட்டதையோ அல்லது இப்பொழுது பீடிக்கப்படுவதையோ குறிப்பிட்டு எழுதினால் ஆயுள் காப்பு கிடைககாது என்று எண்ணுவது தவறு. உண்மை தேகநிலையை வெளியிட்ட ஆயிரக்கணக்கான பாலிசி தாரர்களில் பெரும்பாலானவர்கள் வழககமான விகிதத்திலும் சிலர் சிறிது அதிக விகிதத்திலும் ஆயுள் காப்பு பெற்றுள்ளார்கள்.

நினைவிலிருத்துங்கள்

துரிதமாக ஆயுள் காப்பு தொகையைப் பெற, பாலிஸி எடுக்கும்பொழுதே முழு விவரங்களையும் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

30 ஆண்டுகள் மக்கள் சேவையில்

LIC/CO/1-87

முன்னோர்களும் செய்திருக்கிறார்கள். போர்க்களத்தில் தோற்றவர்களின் கதி எப்போதும் அதோகதிதான். இராமரைப் போலவும் தர்மபுத்திரரைப் போலவும் எல்லா அரசர்களும் கருணை வள்ளல்களாக இருந்துவிட முடியுமா? அப்படி அவர்கள் இருந்த படியினால் தான் காட்டுக்குப் போய்த் திண்டாடினார்கள்! அவர்கள் வீர புருஷர்களாயிருந்தும், வீரர்களின் துணையிருந்தும், வெகுவாகக் கஷ்டப்பட்டார்கள். இராஜரீகத்தில் கருணை என்பதே கூடாது. பார்க்கப் போனால் சோழ குலத்தவர்கள் சிறிது கருணையுள்ளவர்கள் என்றே சொல்ல வேண்டும். எதிரிகளையும் முடியுமானால் நண்பர்களாக்கிக் கொள்ளவே பார்க்கிறார்கள். அதற்காகக் குலம் விட்டுக் குலம் கலியாண சம்பந்தமும் செய்து கொள்கிறார்கள்! சுந்தர சோழரின் தந்தை அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளைத் திருமணம் செய்து கொள்ளவில்லையா? அழகுக்குப் பெயர்போன அந்தக் கலியாணியின் மகனாயிருப்பதினால்தானே சுந்தர சோழரும் அவருடைய மக்களும்கூட சௌந்தரியத்தில் சிறந்து விளங்குகிறார்கள்....? ஆ! அழகி என்றதும், அந்தக் குடந்தை நகரத்து மங்கை — அரிசிலாற்றங்கரைப் பெண்மணியின் நினைவு வருகிறது. நினைவு புதிதாக எங்கிருந்தோ வந்துவிடவில்லை. அவனுடைய உள்ளத்துக்குள்ளேயே கனிந்து கொண்டிருந்த நினைவுதான்.



வந்தியத்தேவனுடைய வெளிமனம் சோழ நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றியும் இராஜரீகக் குழப்பங்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருக்கையில் அவனுடைய உள் மனம் அந்த மங்கையினிடத்திலேயே ஈடுபட்டிருந்தது. இப்போது உள் மனம், வெளி மனம் இரண்டும் ஒத்து அம்மங்கையைக் குறித்துப் பட்டவர்த்தனமாகச் சிந்திக்கத் தொடங்கின. பிறகு, வெளியில் எந்த அழகான இயற்கைப் பொருளைப் பார்த்தாலும் அந்த மங்கையின் அவயவங்களுடன் ஒப்பிடத் தோன்றின. வழுவழுப்பான மூங்கிலைப் பார்த்ததும் அவளுடைய தோள்கள் நினைவு வந்தன. ஓடைகளில் மண்டிக் கிடந்த குவளை மலர்கள் அவளுடைய கண்களுக்கு உவமையாயின. பங்கஜ மலர்கள் அவளுடைய தங்க முகத்துக்கு இணைதானா என்ற ஐயம் தோன்றியது. நதியோர மரங்களில் குலுங்கிக் கொண்டிருந்த மலர்களில் வண்டுகள் செய்த ரீங்காரத்தை அவள் குரலின் ஒலிக்கு உவமை சொல்வது சரியாகுமா? இப்படியெல்லாம் கவிகள் கற்பித்திருக்கிறார்களே தவிர, உண்மையில் இவையெல்லாம் எங்கே? அந்த மங்கையின் சௌந்தரியம் எங்கே? அவளுடைய திருமுகத்தைப் பார்த்தபோது மெய் சிலிர்த்ததே? இப்போது நினைத்துப் பார்க்கும் போதுங்கூட நெஞ்சு விம்முகிறதே! இந்தப் பூக்களையும் வண்டுகளையும் பார்த்தால் அத்தகைய மெய்சிலிர்ப்பு உண்டாகவில்லையே.....? சேச்சே! முதியோர்கள் நமக்குச் செய்த உபதேசத்தையெல்லாம் மறந்துவிட்டோம்! பெண்களின் மோகத்தைப் போல் உலக வாழ்க்கையில் பொல்லாத மாயை வேறொன்றுமில்லை. வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோன் பெண்களின் மோகவலையில் விழவே கூடாது. விழுந்தால் அவன் ஒழிந்தான்! கோவலன் கதைதான் அந்த விஷயத்தை அபூர்வமாய் எடுத்துச் சொல்கிறதே! — கோவலன் மட்டும் என்ன? இந்த நாளில் வீராதி வீரரும் சோழ நாட்டிலே இணையற்ற

செல்வாக்கு உள்ளவருமான பெரிய பழுவேட்டரையரைப் பற்றி மக்கள் பரிகாசம் பேசுங் காரணமும் அதுதானே? — ஆனால் மக்கள் உண்மை அறியாதவர்கள். மூடு பல்லக்கிலே வைத்துப் பழுவேட்டரையர் யாரைக் கொண்டு வருகிறார் என்று மக்களுக்குத் தெரியாது! ஆகையால் மூடத்தனமாகப் பேசுகிறார்கள். ஆனாலும், அந்த மதுராந்தகத் தேவர் தம்மை அவ்வளவு கேவலப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. சிச்சீ! மூடுபல்லக்கில்உட்கார்ந்துகொண்டு, பழுவேட்டரையரின் ராணியின் ஸ்தானத்தில் மறைந்து கொண்டு ஊர் ஊராய்ப் போவதா? இதுதான் ஆண்மைக்கு அழகா? இப்படியாவது இராஜ்யம் சம்பாதிக்க வேண்டுமா? இப்படிச் சம்பாதித்த இராஜ்யத்தைத்தான் அவரால் காப்பாற்றிக் கொள்ள முடியுமா? பழுவேட்டரையர் முதலியோரை நம்பி அவர்களுக்கு உட்பட்டுத்தானே இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும்? இந்த விஷயத்தில் சுந்தர சோழ சக்கரவர்த்தி செய்து வருவதே அவ்வளவு சிலாக்கியமில்லைதான்! பழுவேட்டரையர் போன்றவர்களுக்கு இவ்வளவு அதிகாரமும் செல்வாக்கும் அவர் அளித்திருக்கக் கூடாது. அதிலும் மணி மணியாக இரண்டு அருமைப் புதல்வர்கள் இருக்கும்போது? — நாடெல்லாம் அதிசயிக்கும் அறிவும் திறனும் உடைய புதல்வி ஒருத்தி இருக்கும்போது....? அந்த மங்கை, ஜோதிடர் வீட்டில் பார்த்தவள், ஆற்றங் கரையில் பேசியவள், — அவள் முகம் யாருடைய ஜாடையாயிருக்கிறது....? அப்படியும் இருக்கலாமோ? — பைத்தியக்காரத்தனம்! ஒருநாளும் அப்படியிருக்க முடியாது! — ஏன் இருக்க முடியாது? ஒருவேளை அவ்விதம் இருந்தால், நம்மைப் போன்ற அறிவீனன் வேறு யாரும் இல்லை! நம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலியும் இல்லை! இலங்கை முதல் விந்தியபர்வதம் வரையில் எந்தப் பெண்ணரசியின் புகழ் பரந்து விரிந்து பரவியிருக்கிறதோ, அவளிடம் நாம் எப்பேர்ப்பட்ட காட்டுமிராண்டியைப் போல் நடந்து கொண்டோம்! — அப்படி இருக்கவே இருக்காது! நாளைக்கு அவளிடம் எப்படி இளவரசரின் ஓலையுடனே சென்று முகத்தைக் காட்ட முடியும்?



இப்படியாக என்னவெல்லாமோ வானத்தையும் பூமியையும் சேர்த்து எண்ணமிட்டுக் கொண்டு வந்தியத்தேவன் காவேரிக் கரையோடு வந்து திருவையாற்றை அடைந்தான். இவன் காவேரியின் தென் கரையில் நிற்க, திருவையாறு வட கரையில் இருந்தது. அந்த ஊரின் வளமும் அழகும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அது திருவையாறுதானா என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். அந்த அற்புத க்ஷேத்திரத்தின் மகிமையைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்ததெல்லாம் உண்மைக்குக் கொஞ்சம் குறைவாகவே தோன்றியது. ஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ள வர்ணனை இங்கே அப்படியே தத்ரூபமாய்க் காண்கிறது. முந்நூறு ஆண்டு காலத்தில் மாறுதல் ஒன்றுமேயில்லை. அதோ காவேரியின் கரையில் உள்ள மரங்கள் என்ன செழிப்பாய் வளர்ந்திருக்கின்றன! பலா மரங்களில் எவ்வளவு பெரிய பெரிய பலாக் காய்கள் தொங்குகின்றன! இந்த மாதிரி தொண்டை மண்டலத்தில் எங்கும் பார்க்கவே முடியாதுதான்! ஆகா! வளமான இடங்களுக்கென்று குரங்குகள் எங்கிருந்தோ வந்துவிடுகின்றன. அவை கிளைக்குக் கிளை தாவுவது எவ்வளவு அழகாயிருக்கிறது? சம்பந்தப் பெருமான்

அறுபது ஆண்டுகளாய் மக்களை மகிழ்ச்சியூட்டும் நரசுஸ் காபி !



காலம் மாறிவிட்டது, ஆனால் நரசுஸ் காபி மாறவில்லை.
அதே குணம்! அதே மணம்! அதே சுவை!
அன்றும், இன்றும், என்றும் நிறைவுதரும் காபி!

வைர விழா கண்ட ஒரே காபி!

நரசுஸ் காபி



ஜீவனுள்ள ஒரே காபி

நரசுஸ் காபி

நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.

ADWAVE NCC 3277




மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine

என்ன சொல்லியிருக்கிருர்? இதோ ஞாபகம் வருகிறது! திருவையாற்று வீதி முனை அரங்கங்களில் பெண்கள் நடனம் ஆடுகிருர்கள். அந்த ஆடலுக் கேற்ற பாடலோடு மத்தளச் சத்தமும் முழங்குகிறது. அந்த முழக்கத்தைக் கேட்ட குரங்குகள் மேகங்களின் கர்ஜனை என்று எண்ணி உயர்ந்த மரங் களின் உச்சாணிக் கிளைகளில் ஏறி மழை வருமா என்று வானத்தைப் பார்க்கின்றன! அடாடா! இன்றைக் கும் எவ்வளவு பொருத்தமாயிருக் கிறது! உயர்ந்த மரங்களில் உச்சாணிக் கிளைகளில் குரங்குகள் ஏறுகின்றன! அது மட்டுமா? ஆடல் பாடல்களுக் குரிய இனிய சத்தங்களும் ஊருக்குள் ளிருந்து வருகின்றன. 'யாழ், குழல், முழவு, தண்ணுமை முதலிய கருவி களின் ஒலியுடன் சதங்கைச் சத்தமும் சேர்ந்து ஒலிக்கின்றன. இங்கே ஆடு கிறவர்கள் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஆடியவர்களைப் போல் குரவைக் கூத்தர்கள் அல்ல. ஆகா! இங்கே கேட்பது பண்பட்ட இனிய கானம். கலைச் சிறப்பு வாய்ந்த பரத நாட்டியம் ஆடுவோரின் சதங்கை ஒலி. அதோ, ஆட்டி வைக்கும் நடன ஆசிரியர்கள் கையில் பிடித்த கோலின் சத்தம் கூடச் சேர்ந்து வருகிறதே!


"கோலோடக் கோல்வளையார்
கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலை யாடச் சேயிழை
யார் நடமாடுந் திருவையாறே!"

ஆகா! சம்பந்த ஸ்வாமிகள் சிறந்த சிவ பக்தர்; அதைக் காட்டிலும் சிறந்த ரஸிகர்! அவர் அன்றைக்கு வர்ணனை செய்தபடியே இன்றைக்கும் இந்தத் திருவையாறு விளங்குகிறதே! இப்படிப்பட்ட ஊரில் ஒரு நாள் தங்கி ஆடல் பாடல் விநோதங்களைப் பார்த்துவிட்டு, ஐயாறப்பரையும் அறம் வளர்த்த நாயகி அம்மனையும் தரிசித்துவிட்டுத்தான் போக வேண் டும்! அடாடா! காவேரியின் கரையில் எத்தனை பக்தர்கள் உட்கார்ந்து அனுஷ் டானம் செய்கிருர்கள்? பட்டை பட்டையாக அவர்கள் திருநீறு அணிந் திருப்பது எவ்வளவு கனையாயிருக் கிறது? சிலசமயம் ஆடல்பாடல் ஒலி



களை அமுக்கிக் கொண்டு 'நமசிவாய மந்திரத்தின் ஒலி கேட்கிறதே! ஏன்? அதோ சம்பந்தரின் தேவாரத்தையே யாரோ இனிய குரலில் அருமையாகப் பாடுகிருர்களே! இசைக்கும் கலைக்கும் என்றே இறைவன் பணித்த ஊர் இந்தத் திருவையாறு போலும்! இந்த ஊரில் கட்டாயம் ஒரு நாள் தங்கிப் பார்த்துவிட்டுத்தான் போக வேண் டும்! தஞ்சாவூருக்கு அவசரமாகப் போய்த்தான் என்ன பயன்? கோட் டைக்குள் பிரவேசிக்க முடிகிறதோ என்னமோ? அப்படிப் பிரவேசித்தா லும் மகாராஜாவின் பேட்டி கிடைக் குமா? மகாராஜாவைத்தான் இரண்டு பழுவேட்டரையர்களுமாகச் சேர்ந்து சிறையில் வைத்திருப்பது போல் வைத் திருக்கிருர்களாமே....? காவேரியின் வட கரைக்குப் போக வேண்டியது தான்!

இந்த முடிவுக்கு வந்தியத்தேவன் வந்துவிட்ட தருணத்தில் ஒரு சம்பவம் நடந்தது. மேற்குத் திசையிலிருந்துகாவேரிக் கரையோடு ஒரு பல்லக்கு வந்தது. பல் லக்குக்கு முன்னும் பின்னும் சில காவல் வீரர்களும் வந்தார்கள். வந்தியத் தேவனுக்கு ஏதோ ஒரு சந் தேகம் தோன்றியது. பல்லக்கு அருகில் வருகிற வரையில் அங்கேயே நின்று காத்துக் கொண்டிருந்தான். அவன் நினைத்தபடியே இருந்தது. பல்லக்கை மூடியிருந்த வெளித் திரையில் பனை மரத்தின் இலச்சினைச் சித்திரம் காணப்



பட்டது! ஆஹா! கடம்பூரிலிருந்து வருகிற பல்லக்குத்தான் இது! நாம் குடந்தை வழியாக வர, இவர்கள் வேறொரு வழியில் வந்திருக்கிறார்கள்! ஆனால் பழுவேட்டரையரைக் காணோம்! அவர் வேறு எங்கேயாவது வழியில் தங்கி விட்டார் போலும்!

பல்லக்கு தஞ்சாவூர் இருந்த தென் திசை நோக்கித் திரும்பியது. அவ்வளவுதான். வந்தியத்தேவன் திருவையாற்றில் தங்கும் எண்ணத்தை விட்டு விட்டான். அந்தப் பல்லக்கைப் பின் தொடர்ந்து செல்லத் தீர்மானித்தான். என்ன நோக்கத்துடன் அப்படித் தீர்மானித்தான் என்றால், அது அச்சமயம் அவனுக்கே தெரிந்திருக்கவில்லை. பல்லக்கில் வீற்றிருப்பது மதுராந்தகத் தேவர் என்று மட்டும் அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது. அவர் மேல் ஏற்பட்டிருந்த அருவருப்பு மேலும் சிறிது வளர்ந்தது. ஆனாலும் பல்லக்கைத் தொடர்ந்து கொஞ்சம் போனால், ஏதாவது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்படலாம். பல்லக்கைச் சுமப்பவர்கள் அதைக் கீழே வைக்கலாம். ஏதேனும் ஒரு காரணத்துக்காக இளவரசர் மதுராந்தகர் வெளிப்பட்டு வரலாம். அச்சமயம் அவருடன் பழக்கம் செய்து கொள்ளலாம். அது தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசிக்கவும், சக்கரவர்த்தியைப் பார்க்கவும் பயன்படலாம் அதற்குத் தகுந்தபடி ஏதாவது கொஞ்சம் பேசி வேஷம் போட்டால் போகிறது. தந்திர மந்திரங்களைக் கையாளாவிட்டால் எடுத்த காரியம் கைகூடாதல்லவா? அதிலும் இராஜாங்க காரியங்களில்?

எனவே, பல்லக்கையும் பரிவாரங்களையும் முன்னால் போகவிட்டுச் சற்றுப் பின்னாலேயே வந்தியத்தேவன் போய்க் கொண்டிருந்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் ஒன்றும் கிட்டவில்லை. காவேரிக்கும் தஞ்சாவூருக்கும் மத்தியிலிருந்த மற்ற நாலு நதிகளைக் கடந்தாகிவிட்டது. அப்படியும் பல்லக்கு கீழே வைக்கப்படவில்லை. ஒரே மூச்சாகப் போய்க் கொண்டிருந்தது. அதோ சற்றுத் தூரத்தில் தஞ்சாவூர்க் கோட்டை மதிலும் வாசலும் தெரியத் தொடங்கிவிட்டன. கோட்டைக்குள் பல்லக்குப் போய் விட்டால், அப்புறம் அவன் எண்ணம் கைகூடப் போவதில்லை. அதற்குள் தைரியமாகவும் துணிச்சலாகவும் ஏதேனும் ஒன்று செய்தாக வேண்டும். என்னதான் வந்து விடும்? தலையா போய்விடும்? அப்படிப் போனால்தான் போகிறதே?— எடுத்த காரியத்தை முடிக்காமல் உயிரோடு திரும்பிப் போவதில் என்ன லாபம்? இதற்கெல்லாம் அடிப்படையில் மதுராந்தகத்தேவர் பேரில் வந்தியத்தேவனுக்குக் கோபம் வேறே இருந்தது. பல்லக்கின் மூடுதிரையைக் கிழித்தெறிந்து உள்ளேயிருப்பது பெண்ணல்ல, மீசை முளைத்த ஆண் பிள்ளை என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் கை ஊறியது; அவன் உள்ளம் துடிதுடித்தது.

அதற்கு என்ன வழி என்று அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கையில் பல்லக்கோடு சென்ற பரிவாரங்களில் ஒருவன், சற்றுப் பின் தங்கி வந்தியத்தேவனை உற்று நோக்கினான்.

"நீ யார் அப்பா! திருவையாற்றிலிருந்து எங்களை ஏன் தொடர்ந்து வருகிறாய்?" என்று கேட்டான்.

"நான் உங்களைத் தொடர்ந்து வரவில்லை ஐயா! தஞ்சாவூருக்குப் போகிறேன்! இந்தச் சாலைதானே தஞ்சாவூர் போகிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தச் சாலை தஞ்சாவூருக்குத்தான் போகிறது. ஆனால் இதில் முக்கியமானவர்கள் மட்டுமே போகலாம். மற்றவர்களுக்கு வேறு சாலை இருக்கிறது!" என்றான் வீரன்.

"அப்படியா? ஆனால் நானும் ரொம்ப ரொம்ப முக்கியமான மனுஷன்தான்!" என்றான் வந்தியத்தேவன்.

அதைக் கேட்ட அவ்வீரன் புன்னகை செய்துவிட்டு, "தஞ்சைக்கு எதற்காகப் போகிறாய்!" என்றான்.

"என் சித்தப்பா தஞ்சையில் இருக்கிறார். அவருக்கு நோய் என்றறிந்து பார்க்கப் போகிறேன்" என்று கூறினான் வந்தியத்தேவன்.

"உன் சித்தப்பா தஞ்சையில் என்ன செய்கிறார்? அரண்மனையில் உத்தியோகம் பார்க்கிறாரா?"

"இல்லை, இல்லை; சத்திரத்தில் மணியக்காரராயிருக்கிறார்!"

"ஓகோ! அப்படியா! சரி, எங்களுக்கு முன்னால் நீ போவதுதானே? ஏன் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறாய்?"

"குதிரை களைத்துப் போயிருக்கிறது, ஐயா! அதனாலேதான்! இல்லாவிடில் உங்கள் முதுகைப் பார்த்துக் கொண்டே வருவதில் எனக்கு என்ன திருப்தி?"

இப்படிப் பேசிக் கொண்டே வந்தியத்தேவன் பல்லக்கின் அருகில் வந்துவிட்டான். உடனே, அவன் மூளையைவிரட்டிக்கண்டுபிடிக்கமுயற்சித்த உபாயமும் புலப்பட்டு விட்டது. குதிரையைக் கால்களால் அமுக்கி, முகக்கயிற்றை இழுத்து, பல்லக்கின் பின் தண்டைத் தூக்கியவர்களின் பேரில் விட்டடித்தான். அவர்கள் பயத்துடன் திரும்பிப் பார்த்தார்கள். வந்தியத்தேவன் உடனே, "மகாராஜா! மகாராஜா! பல்லக்குத் தூக்கும் ஆள்கள் என் குதிரையை இடிக்கிறார்கள்! ஐயோ! ஐயோ!" என்று கத்தினான். பல்லக்கை மூடியிருந்த திரை சலசலத்தது.

(தொடரும்)


அருள் வாக்கு

மனஸ் நல்லபடியாக இருப்பது என்றால் என்ன? எப்போது பார்த்தாலும், 'அது வேண்டும், இது வேண்டும்; இப்போது இருக்கிற ஸௌகர்யங்கள் போதாது; பொருள், பதவி, பேர் வேண்டும்' என்று ஓயாமல் எதற்காவது மனஸ் ஆசைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதாவது எப்போதும் அதிருப்தியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. வேண்டியது கிடைத்து விட்டது என்றாலும் திருப்தியாக நிறைந்திருக்க அதற்குத் தெரிகிறதோ? இல்லை. இன்னும் ஏதாவது தேவையை ஸ்ருஷ்டி பண்ணிக் கொண்டு அதற்காக அலையத்தான் செய்கிறது. இப்படியில்லாமல் மனஸ் திருப்தியாக, நிறைந்து இருந்து விட்டால், அப்போது தான் ஸரியாக இருக்கிறது என்று அர்த்தம். ஆசை, அதனால் வருகிற அதிருப்தி, * த்வேஷம், போட்டி, பொறாமை, துக்கம், இவை உள்ளவரை எத்தனை கோடீச்வரனானாலும் மஹா பண்டிதனானாலும் ஒருத்தனுக்கு சாந்தியும் இல்லை, ஸௌக்யமும் இல்லை. 'சாந்தமுலேக ஸௌக்யமுலேது' என்று தியாகையர்வாளும் 'அசாந்தஸ்ய குத: ஸுகம்' என்று கிருஷ்ண பரமாத்மாவும் சொன்ன மாதிரிதான். கிருஷ்ணர் சொன்னதை நினைத்துக் கொண்டேதான் தியாகையர்வாள் இப்படிப் பாடியிருக்கிறார் என்று தோன்றுகிறது. மனநிறைவினால் ஏற்படும் நிம்மதியில்லாமல் நிஜமான ஸௌக்யம் என்பது இல்லவே இல்லை என்று அந்த இரண்டு பேரும் சொல்கிறார்கள்.


வெளியிலே பார்ப்பதற்கு ஒரு குடம் அழகாக இருக்கிறது. ஆனாலும் அதற்கு அடியிலே நாலு சின்ன ஓட்டை இருந்து விட்டால், உள்ளே அம்ருதத்தைப் பிடித்து வைத்திருந்தால் கூட எல்லாம் ஒழுகித் தானே போகும்! அந்த மாதிரிதான், வெளிப் பார்வைக்கு நாம் ரொம்ப ஸரியாக இருக்கிற மாதிரி தோன்றலாம். பணம், படிப்பு, மற்ற லௌகிகமான ஸந்தோஷங்கள் நமக்கு யதேஷ்டமாக இருக்கலாம். ஆனாலும் அதிருப்தி, கோபம், பொறாமை, அழுகை மாதிரியான நாலு பொத்தல் நமக்குள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்து விட்டால் ஆனந்தம் என்கிற அம்ருதத்தை நமக்குள் பிடித்து வைத்துக் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.





பூலோக வைகுண்டம்





தமிழ் வளர்த்த தலங்களில் மதுரைக்கு எவ்வளவு சிறப்பிடம் உண்டோ அவ்வளவு சிறப்பு ஸ்ரீரங்கத்துக்கும் உண்டு. ஸ்ரீரங்க நாதர் மேல் காதல் கொண்ட பக்தர்கள் தீந் தமிழில் அரங்கனின் அழகையும் அருளையும் பாடினார்கள். காவேரி, கொள்ளிடம் இரண்டும் சூட்டுகின்ற தெண்ணீர் மாலை, ஆழ்வார்கள் சூட்டுகின்ற பாமாலை, கோதை நாச்சியாரின் பூமாலைஎல்லாவற்றையும் சூடி மகிழ்பவர் ரங்கநாதர்.

காதல் என்னும் மிக நுட்பமான உணர்வு பக்தியின் மிகுதியால் பாக்களாக வெளிப்படும்பொழுது அது நமது உள்ளத்தை உருக்கும் அற்புத வடிவம் பெற்று விடுகிறது. தலைவியின் உள்ளத்தை அழகு மயமாக நாம் பார்த்து அனுபவிக்கிறோம்.

எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத்
இன்னமுதர்,
குழலழகர், வாயழகர், கண்ணழகர்,
கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார்,
என்னுடைய
கழல் வளையைத் தாமும் கழல்வளையே
யாக்கினரே!

ழகரம் திரும்பத் திரும்ப ஒலிக்கும் அழகைச் சொல்லிச் சொல்லித்தான் அனுப வித்து மகிழ வேண்டும். அரங்கனின் எழி

ஜனந்தி


* ஆண்டாள்: பக்தி மிகுதியால் எழுந்த பாக்கள்.

லார்ந்த கோலத்தையும் கடைசி அடியில் தனது காதலையும் அப்படியே கண்முன் நிறுத்துகிறார் கோதை நாச்சியார்.

அதிகாலை நேரம். சிலுசிலுவென்ற காற்று காவிரியில் தவழ்ந்து வந்து நம்மைப் புனிதப்படுத்துகின்றது. வானத்தில் சுடர் மணிகள் சற்று வெளிறி மின்னுகின்றன. கோயில் என்றாலே வைஷ்ணவர்களுக்கு நெஞ்சம் புளகிக்க எந்தக் கோயில் நினைவுக்கு வருமோ அந்தக் கோபுர வாசல். இன்னும் கதவு திறக்கவில்லை.

> கந்தங் கமழும் குழலி! கடைதிறவாய்
> ......
> செந்தாமரைக் கையால் சீரார்
> வளையொலிப்ப
> வந்து திறவாய் மகிழ்ந்தேலோ
> ரெம்பாவாய்!

என்ற திருப்பாவை வரிகள் நினைவுக்கு வர நாம் எங்கிருக்கிறோம் என்ற நினைவே அகன்று நந்தகோபன் அரண்மனை வாயிலில் நிற்பதாகவே தோன்றி விடுகிறது.



* ஸ்ரீரங்கம் கோவில் தூண்களின் எழில்.

கதவு திறந்துவிட்டது. அகில புவனங்களுக்கும் அரசனான ஸ்ரீ ரங்கநாதனைத் துயிலெழுப்புகின்ற காட்சியைக் காண ஆர்வத்தோடு விரைகிறோம்.

திருமண் தரித்த யானையைக் கண்டு இன்புறும்போதே லக்ஷ்மீகரமாகப் பசு வந்து ஸந்நிதி எதிரே நிற்கிறது. வீணையின் இனிய நாதம் ஒலிக்கத் தொடங்குகிறது. கருவறையைத் திறந்தாகி விட்டது. இன்னும் அரங்கத்தம்மான் பள்ளிகொண்ட கோலம் புலனாகவில்லை. நமது மனத்தை மறைக்கும் மாயத்திரை ஒன்று அங்கேயும் தொங்குகிறது! திருப்பள்ளி எழுச்சி பாடியதும் திரை திடீரென விலகித் தீபாராதனை நடக்கிறது. யோக நித்திரையில் ஆழ்ந்து அரவணை துயிலும்எம்பெருமான் கண்மலர்ந்துபசுவின் பின்புறத்தையும் யானையின் முகத்தையும் பார்த்துவிட்டு அடியார்களான நம்மீதும் திருக்கண் பார்வை சாத்தியருளுகிறார்.

திருவரங்கப் பெருமானுக்குத் தந்தசுத்தி கரசுத்தி, பாதசுத்தி முதலிய சடங்குகளும் செய்வார்களாம். அடியார்களில் ஒருவனாக, பக்த ஸுலபனாக விளங்கும் பெருமானைத் தோழமை உணர்வோடு கொண்டாடுகிறார்கள் பட்டர்கள்.

புராணத்தைப்பார்த்தால்ஸ்ரீரங்கவிமானத்தின் மகிமை விளங்குகிறது. பிரும்ம தேவர் அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபம் செய்து வந்தபோது ஸ்ரீரங்க விமானம் திருப்பாற்கடலில் உதித்தது. வைகுண்டமாகவே ஒளிர்ந்தது. ஸநந்தனர் என்ற முனிவர் பிரும்மாவிடம், "உன் தவ வலிமையால் 'ஓம்' என்ற பிரணவத்தின் பொருளான ஸ்ரீ ரங்கநாதன் தோன்றினார். இந்த விமானத்தைப் பார்த்தாலே முக்தி" என்று கூறினார்.

சூரியகுலத் தோன்றலான இக்ஷ்வாகு மன்னருக்கு ஸ்ரீரங்க விமானம் பூவுலகிற்கு எப்படியாவது வந்துவிட வேண்டும் என்று தோன்றியது. இக்ஷ்வாகு மன்னனின் தவச்சிறப்பினால் பகவான் மகிழ்ந்து அயோத்தி மாநகருக்கு எழுந்தருளினார். சூரிய வம்சத்து மன்னர்கள் மிகவும் பக்தியோடு ஸ்ரீரங்கநாதரை வழிபட்டு வந்தார்கள். அந்தப் புண்ணியத்தினாலேயே இக்ஷ்வாகு வம்சத்தில் ராமபிரானாக அவதாரம் செய்தார் பகவான்.

தசரத சக்கரவர்த்தி அசுவமேத யாகமும் புத்திர காமேஷ்டி யாகமும் செய்த காலத்தில் பாரத நாட்டிலுள்ள ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் அயோத்திக்கு வந்தார்கள். சோழ தேசத்தில் அரசாண்ட தர்மவர்மா என்ற மன்னர் வேள்வியைக் காண வந்த இடத்தில் ஸ்ரீரங்க விமானத்தில் குடிகொண்ட ரங்கநாதப் பெருமானைத் தரிசனம் செய்தார். 'கரியவனைக் காணாத கண் என்ன கண்?' என்று தோன்றிவிட்டது. சோழ நாட்டுக்குத் திரும்பிய போது மனஏக்கம் மிகுந்தது. ஸ்ரீரங்கநாதரை விமானத்துடன் காவிரி சூழ்ந்த தம் நாட்டில் எழுந்தருளப் பண்ண வேண்டும் என்ற ஆசையோடு தவம் செய்தார். அத்தவத்துக்குப் பலன் இருக்கும் என்று முனிவர்கள் அருளினார்கள்.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் பட்டாபிஷேகம் முடிந்த பிறகு விபீஷணன் இலங்கை செல்லவிடைகேட்டார். அப்போதுஸ்ரீராமர் தங்களுடைய குலதனமான ஸ்ரீரங்க விமானத்தை விபீஷணனுக்கு அளித்தார். விபீஷணன் வழியில் காவேரி நதி தீரத்தில் வரும் போது உச்சி காலப் பூஜைக்கு நேரமாகி விட்டது. அதனால் சந்திர வாவிக் கரையில் விமானத்தை வைத்துப் பூஜித்தார். காத்திருந்த தர்மவர்ம மன்னனும் மற்ற எல்லோரும் தரிசித்து மகிழ்ந்தார்கள். அங்கேயே பிரும்மோத்ஸவத்தையும் நடத்தினார்கள். விபீஷணனால் விமானத்தை அசைக்கவே முடியவில்லை., பெருமான் விபீஷணனிடம், "நான் இலங்கையையே பார்த்துக் கொண்டிருப்பேன்" என்று வரம் கொடுத்தார். காவிரி நதி தீரத்தில் தங்க ஆசைப்பட்டு

இருந்து விட்டார்.

வரலாற்றுப்படி பார்த்தால் சிலப்பதிகார காலத்திலும், சங்ககாலத்திலும் அரங்கம் புகழ் பெற்றிருந்திருக்கிறது. ஆனால் திருவரங்கம் வைணவ சித்தாந்தத்தின் அரணாக விளங்கிய பொற்காலம் உடையவரான ஸ்ரீராமானுஜர் காலத்தில்தான் என்று சொல்லலாம். எதிராஜர் ரங்கராஜனுக்குச் செய்த பணிகளில் தலையாய பணி 'அரங்கருடைய செல்வங்களைத் திருத்தி அமைத்தது.' கோயில் நிர்வாகத்தைச் சீர் செய்தார். ஓர் அரசாங்கமாகவே கோயில் நடைமுறைகள் இருந்து வந்திருக்கின்றன.

திருவரங்கனின் செல்வங்கள் கணக்கிட முடியாமல் இருந்திருக்கிறது. சோழ மன்னர்கள் அணிகளையும் பொருளையும் சொரிந்தார்கள். சடாவர்மன் சுந்தரபாண்டியன் என்ற மதுரை மன்னன் இரண்டாவது பிராகாரத்துக்குப் பொன் கூரை வேய்ந்தான். பொன்னால் வாகனங்கள் செய்து வைத்தான். பச்சைமா மலைபோல் மேனியில் திகழ மரகத மாலைகளை அணிவித்தான்.

செல்வம் கொழித்த அரங்கத்தை மாலிக்காபூர் கொள்ளையடித்தான். அப்பொழுதே சிலைத் திருட்டையும் ஆரம்பித்து வைத்தான். விஜயநகர மன்னர்களின் காலத்தில் மீண்டும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. அச்சுதப்ப நாயக்க மன்னர் காலத்தில் கோவில் உன்னத நிலையை அடைந்தது. ஆங்கிலேயர் — பிரெஞ்சுக்காரர் சண்டையிட்ட காலத்தில் சந்தாசாகிபு தம் படைகளுடன் ஸ்ரீரங்கம் கோயில் பிராகாரத்தில் ஒளிந்து கொண்டு சண்டையிட்டதாக வரலாறு கூறுகிறது.

கம்பர் ராமாயணம் பாடி அரங்கேற்றிய இடத்தைக் கண்ணால் கண்டு தலையால் வணங்கவேண்டாமா? ஸ்ரீரங்கநாயகியாரின் கோயிலுக்கெதிரே பிராகாரத்தில் உள்ள மண்டபத்தைக் கம்பர் மண்டபம் என்று அழைக்கிறார்கள். அழகிய சிங்கர் ஹிரண்ய வதைப் படலத்தில் இடிமுழக்கம் போலச் சிரித்துப் பாடல்களை அங்கீகரித்ததாகவும் கூறுகிறார்கள்.

தமிழ் மொழி, வடமொழி, பக்தி, கலைகள் எல்லாவற்றையுமே வாழ வைத்த தலம் ஸ்ரீரங்கம்.

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்!
ஏழையேன் ஏழை யேனே.



20 மோகம் என்பது இதுதானோ?

உஷா சுப்பிரமணியன்

சென்னை வாழ்க்கை இவ்வளவு எளிதாக இருக்கும் என்று ஞானம் கற்பனையில் கூட எண்ணியதில்லை. முன் பின் தெரியாதவர்கள், எழும்பூர் ஸ்டேஷனில் வரவேற்று, "இந்தப் போர்ஷன்தாங்க அண்ணன் உங்களுக்கு ஏற்பாடு செய்திருக்காரு" என்று வசதியான இரண்டு அறை கொண்ட இடத்தைக்காட்டியதிலிருந்து,புவனாவுக்குஸ்காலர்ஷிப் ஏற்பாடுகள் செய்தது வரை ஏதோ ஒரு சக்தி பின்னணியில் இயங்கிக் கொண்டிருப்பது புரிந்தது.

புவனா காலையும், மாலையும் சங்கீத வகுப்புகளுக்குச் சென்று வந்தாள். "சங்கீதக் கல்லூரிப் படிப்பை விட இதுதாங்க நல்லது. சீக்கிரமே பாட்டுக் கத்துக்கிடலாம்னு தலைவர் சொல்றாரு. ஆனாலும் ஸ்காலர்ஷிப் தொகை மாசம் ஐந்நூறு ரூபாய் வந்துடுங்க" என்று தமிழ்ச்செல்வன் வேறு சென்னை வந்திருந்தபோது சொன்னான். எனவே, புவனா மதியம் டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் என்று மற்ற வகுப்புகளுக்கும் செல்லலானாள்.

புவனா சங்கீதக் கல்லூரியில் சேராததனால் ஏற்பட்ட ஒரே பிரச்னை அவளை விடுதியில் சேர்க்க முடியவில்லை என்பதுதான். ஞானம் சென்னையில் அவளுடனேயே இருந்தாக வேண்டும். ஐந்நூறு ரூபாயில் குடித்தனம் செய்தாக வேண்டும். புவனாவின் பல தரப்பட்ட வகுப்புகளுக்கும் பணம் செலுத்தியாக வேண்டும். வீட்டு வாடகை வேறு தர வேண்டும். இது சாத்தியமா?

அவர்களுக்கு உதவ அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த ரவீந்திரனைப் பயத்துடன் அவள் கேட்ட போது அவன் சொன்னான்:

"நீங்க அதெல்லாம் பணத்தைப் பற்றிக் கவலையே படாதீங்க. எப்போ நம்ம தலைவரு ஒங்களைத் தனிப்பட்ட முறையிலே நல்லாக் கவனிச்சுக்கிறதுன்னு முடிவு செய்து விட்டாரோ, பணக்கஷ்டம் எதுவுமில்லாம பாத்துப்பார்"

முதல் மாதம் அவளிடம் யாரும் வீட்டு வாடகை கேட்கவில்லை. சங்கீத ஆசிரியர்களும் சம்பளம் கேட்கவில்லை. தலைவர் அவர்களை நேரிடையாகவே கவனித்துக் கொள்கிறார் என்று புரிந்தது.

ஞானம் இந்தப் புதிய வாழ்க்கையை மிகவும் ரசித்தாள். வசதிகளை அனுபவித்தாள். நினைத்தபோது வீட்டைப் பூட்டிக் கொண்டு அக்கம் பக்கப் பெண்களுடன் சினிமா பார்க்க முடிந்தது. பார்த்த படத்தைப் பற்றியும் பார்த்திராத நடிகர்களைப் பற்றியும் வம்பளக்க முடிந்தது. சட்ட திட்டங்கள், வீட்டுத் தலைவனை கணவனுக்குப் பணிந்து போவது, குடும்பத்தினரிடம் பயம் என்பது போன்ற தடைகள் இல்லாமலிருந்ததால் வாழ்க்கை சுவைத்தது.

ஒருமுறை தமிழ்ச்செல்வன் வந்தபோது, "தம்பி, உங்க தலைவரை நேரே ஒரு முறை பார்த்து நன்றி சொல்லணும்.." என்றாள்.

"நேரங்காலம் வர்றபோது அவரே கூப்பிடுவார். இப்பவும் உங்களைப் பத்தி விசாரிச்சிட்டுத்தான் இருக்கார். அடுத்த வாரம் கூட பாப்பா ஏதோ மீட்டிங்கிலே பாட அச்சாரம் தரச் சொன்னார்" என்று தமிழ்ச்செல்வன் நூறு ரூபாய் பணத்தை எடுத்து நீட்டினான். "அவர் மாப்பிள்ளை எடுக்கிற படத்திலே பாப்பாவைப் பின்னணி பாட வைக்கணுங்கிற ஆசை கூட அவருக்கு இருக்குங்க."

'என்னது சினிமாவில் பின்னணியா?' ஞானம் மலைத்து நின்றுவிட்டாள். அவள் பெற்ற மகளை ஒரு ஜானகியாகவோ, சுசிலாவாகவோ கற்பனை செய்து பார்த்தாள். சில வினாடிகள் இதயத் துடிப்பே நின்று விட்டாற் போலிருந்தது.

மறுவினாடி அவள் பிரமிப்பின் மைய உருவம் புவனாவாக இல்லாமல் அவளாகவே மாறிப் போக,மயிர்க்கால்களில் ஓர் இன்ப அதிர்ச்சி தோன்றியது. சாதாரண மனிதர்கள் கூடப் பிரபலங்களாக முடியுமா...? அவள் மட்டும் ஊருடன் தங்கியிருந்தால் இதெல்லாம் சாத்தியப்பட்டிருக்குமா? ம.ரா. என்ற மாபெரும் தலைவர் பார்வையில் அவள் பட்டதே அவள் அதிர்ஷ்டம்தான். அவருக்கு அவள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறாள்.

"இப்ப நான் வர்றேங்க அண்ணி. அடுத்த வெள்ளிக்கிழமை பாப்பாவைக் கூட்டத்துக்குக் கூட்டிட்டுப் போக வேனுடன் வர்றேன்."

"நானும் கட்சிப் புடவை கட்டிக்கிட்டுத் தயாரா இருக்கேன். கூட்டத்திற்குத் தலைவர் வந்தா ஒரு வார்த்தை நேரடியா நன்றி சொல்லிடணும்."

நேரடியாய் நன்றி சொல்லும் வாய்ப்பு வெகு சீக்கிரமே வந்தது. "அண்ணி, நான் பாப்பாவைக் கூட்டத்திற்குக் கூட்டிட்டுப் போறேன். நீங்க தலைவரைப் பார்க்கணும்னீங்களே, உங்களை ரவீந்தர் காரிலே அழைச்சிட்டுப் போவான்" என்றான் தமிழ்ச்செல்வன், வெள்ளிக்கிழமை மாலை. புவனாவை அவனுடன் அனுப்புவதில் அவளுக்குத்



தயக்கம் எதுவும் இல்லை. அவ்வளவு தூரம் சொந்தக் குடும்பம் போல அவர்கள் பழகி விட்டிருந்தார்கள்...

ஞானம் காரில் ஏறினாள். "தலைவர், ம.ரா. வீட்டுக்கா போகிறோம் நாம... மொதல் தரம் போறோம். ஏதாவது பழம் வாங்கிக்கட்டா?"

ரவீந்தர் அவளை விநோதமாகப் பார்த்தான். "பழம் எல்லாம் அவரே வாங்கி வச்சிருப்பாரு... நாம இப்போ போறது ஒரு கம்பெனி கெஸ்ட் ஹவுஸுக்கு... ஒரு டிஸ்கஷனுக்கு வந்தவர் அங்கேயே தங்கியிருக்காரு..."

"ஓ..ஹோ..." ஞானத்தின் மனத்தை இனம்தெரியாதபலவிதஉணர்ச்சிகள் ஆட்டுவித்தன. பெண்களுக்கே இயல்பான ஏழாவது அறிவு அவளை அடிமனத்தில் பயமுறுத்திக் கொண்டிருந்தது. 'அந்தப் பயவுணர்வையும் மீறிய இறுமாப்பும், துணிவும் என்னதான் நடக்கிறது பார்ப்போமே என்ற ஆவலும் கூடவே எழுந்தன.

"வாம்மா, எப்படியிருக்கே, பாப்பா பாட்டுப் பழகுதா?" மூன்று பேர் அமரும் சோபாவில் நடுநாயகமாய்க் காலை அகட்டி வைத்துக்கொண்டுஉட்கார்ந்திருந்தம.ரா.வே அவளை அழைத்தார்.

"எல்லாம் உங்க தயவுங்க... பெரிய மனுஷாளு உங்களை மாதிரி இருக்கணுங்க..." பேசும்போதே ஞானத்தின் கண்களில் நீர் பெருகத் தொடங்கியது.

"அட.. இதென்ன கண்ணுல தண்ணி... தாய்க்குலம் அழுதா எனக்குப் பிடிக்காது. இந்தா தொடச்சுக்க..." ம. ரா. தோளிலிருந்த துண்டை நீட்டினர்.

"வேண்டாங்க...." ஞானம் அவசரமாகப் புடைவை நுனியால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"பாப்பா இன்னிக்குக் கூட்டத்துல பாடுதா...?"

"ஆமாங்க..."

"நம்ம மாப்பிள்ளை படம் ஒண்ணு இன்னைக்குப் பூஜை போட்டாரு. அதுல ஒரு புதுக்குரலா பாப்பாவைப் போடச் சொல்லியிருக்கேன்... இன்னும் ரெண்டு வருஷத்தில பாரு... உம் பொண்ணு கொடி கட்டிப் பறக்கப் போறு... சந்தோஷந்தானே...?"

"ஆமாங்க..."

ம. ரா. ரவீந்தரை அழைத்தார்... "சாப்பாடு ஏற்பாடாயிடுத்தா...? இங்கியே எடுத்திட்டு வரச் சொல்லு..."

"அப்ப நான் கிளம்பட்டா? உங்களை நேரே பார்த்து நன்றி சொல்லத்தாங்க வந்தேன்."

"சாப்பாடு எனக்கு மட்டுமில்ல. ஒனக்கும் தான்... ஒக்காரு..."

"பரவாயில்லைங்க.."

"அட உக்காருன்னு..."

ஞானம் எதிரே இருந்த சோபா நுனியில் உட்கார்ந்து தலையைக் குனிந்து கொண்டாள்.

ம.ரா.வின் பார்வை அவள் மேல்படர்ந்து, துகிலுரித்தது.

எதிர் மேஜையிலேயே சாப்பாடு வந்தது. "நான் பரிமாறறேன்" என்று ஞானம் சமையற்காரரிடமிருந்து கரண்டியை வாங்கிப் பரிமாறினுள்.

"நீயும் சாப்பிடு..." ம. ரா., தடுக்கவும் கேட்காமல் அவளுக்குப் பரிமாறினர்.

"எல்லாம் சௌகரியமா இருக்கா பட்டணத்திலே?"

"இருக்குங்க."

"எது வேணும்னுலும் ரவீந்தர் கிட்ட ஒரு வார்த்தை சொல்லு. கவனிச்சிப்பான். பாப்பாவைப் பத்தின கவலையை மனசிலேயிருந்து எடுத்துடு. அதை ஆளாக்கி முன்னுக்குக் கொண்டு வர நானுச்சு..."

"ரொம்ப நன்றிங்க. அப்படியே பெரிய பொண்ணு லோகுவுக்கு ஒரு வழி காட்டினீங்கன்னு உங்களை ஆயுசுக்கும் மறக்க மாட்டேன்." அவசரமாக நித்தியானந்தத்தைப் பற்றிக் கூறினுள்.

"அப்படியா? அதெல்லாம் விசாரிச்சுடலாம். அது கஷ்டமில்லை..." தானுகவே, வெளியேறமுடியாதவலையில்வீழ்கிறதுமீன்...

ஞானத்தின் சிந்தனையோ வேறு விதமாயிருந்தது. "எப்படியும் லோகுவுக்கு ஒரு வழி செய்துவிட்டால், சுந்தரம் பட்டணத்திற்கு வரச் சம்மதித்துவிடுவார். அவளுக்கும் பெரிய பிரச்னை தீர்ந்து விடும். அதன் பிறகு புவனவின் முன்னேற்றத்தில் முழுக்கவனமும் செலுத்தலாம்.

ம. ரா. அவளை ரசனையுடன் பார்த்தார். "ஆனலும் உன்னைப் பார்த்தா வயசுக்கு வந்த ரெண்டு பொண்களைப் பெத்தவன்னு யாருமே சொல்ல மாட்டாங்க! இந்த அழகும், உடம்பும் உன்னை எங்கேயோ கொண்டு வச்சிருக்கணும்.,.. அந்தப் பட்டிக்காட்டுல மாட்டிக்கிட்டே... ஆனலும், என்ன... இப்பத் தான் பட்டணத்துக்கு வந்துட்டியே... உன்னைப் போல் இருப்பவங்களுக்குக் குடுத்து வைக்கறதில்லை. எங்க வீட்டுலே பாரு, நாப்பது வயசுக்குக் கிழவியாய் உடம்பு சுருங்கிப் போச்சு... உடம்பா முக்கியம்... மனசில்ல முக்கியம்...? ஆஹ. அதுக்கும் கொடுப்பினை வேணும்... ஊருக்கு ராஜாவானுலும் வீட்டுலே மனசு நிம்மதியில்லையே!"

ஞானம் அவரை இரக்கத்துடன் பார்த்தாள். இவ்வளவு பெரிய மனிதருக்குக் குடும்ப வாழ்வு சுகமில்லையா, என்ன பரிதாபம்!

"நாள் முழுக்க அரசியல், கட்சி வேலையின்னு ஓடறோம். மனசு சோர்கிற போது அக்கடான்னு உட்கார்ந்து பேச வீட்டுக்குப் போகலாம்னு பிடுங்கல்... அதுதான் இப்படி கெஸ்ட் ஹவுஸ், ஹோட்டல்னு வந்து உடம்பைச் சாய்க்க வேண்டியிருக்குது."

உட்கார்ந்து பேச மனுஷங்க இல்லைன்னு கவலை வேண்டாம், என்னைப் போல நன்றியுள்ள மனுஷங்க அதுக்குன்னே காத்திருக்கோம் என்று சொல்ல வேண்டும் போல் தோன்றினுலும், மந்திரிக்கு நிகராகப் பேசுவது சரியா என்று புரியாமல் ஞானம் அவர்முகத்தைப்பார்த்தவாறுஉட்கார்ந்திருந்தாள்.

சமையற்காரர் மேஜையை நகர்த்திச் சென்ற பிறகு ஞானம் அவசரமாக எழுந்தாள். "கூட்டம் முடிஞ்சு பாப்பா வந்திருக்குங்க... தனியாப் பயப்படும்... நான் வரட்டா ஐயா... என்னுல ஆனது எதுவானுலும் சொல்லுங்க... நா உங்களுக்கு ரொம்பவே நன்றிக் கடன்பட்டிருக்கேங்க..."

அவளை வழியனுப்ப வந்த ம.ரா. அவள் முதுகில் நாசூக்காகக் கை போட்டார். மெல்லத் தடவி வயிறுப்பக்கம் கையை நழுவ விட்டு வருடினர். ஒரே ஆணின் ஸ்பரிசத்துக்குஇருபது ஆண்டுகள் பழகியிருந்தஉடம்பு விறைத்தது. அடிமனத்தில் வலியாகச் 'சுரீர்' என எழுந்தது அருவருப்பு உணர்வு. புரிந்து கொண்டு ம. ரா. இன்னும் இதமாகத் தடவினர். கற்பையும் மீறிய உடல் உணர்வு விழித்துக் கொள்ள ஞானம் மெள்ள சுய கட்டுப்பாட்டை இழக்கலானுள். குழம்பிய நிலையில் அவரிடம் ஆட்பட்டாள்.

ம. ரா. பயமும், வெட்கமும், அவமானமும் கலந்த அவள் முகத்தில் மெல்ல உதட்டைப் பதித்தார். "இருபது வருஷத்துக்கு முன்ன உன்னைப் பார்த்திருக்கணும்... உம்... போயிட்டு வாம்மா... உன்னை அருகிலே வச்சிக்கிட்டு என்னுல சும்மா இருக்க முடியாது. ஏக்கமா இருக்குது... கிளம்பு."

காரில் வீடு திரும்பும்போது ஞானத்தின்

•• கண்டுபிடிக்கப்படாத உண்மைகள் தம் முன் சமுத்திரமாகப் பரந்து விரிந்து கிடக்க, தாம் உணர்ந்த உண்மைகள் கரையோரம் காணப்படும் சில கூழாங்கற்களே!

Binatone

3 YEAR QUARTZ GUARANTEE


on Colour Picture Tube

பினடோனின் நவீன குவார்ட்ஸ் நுட்பச் சாதனையின் பலன்

உங்கள் டிவியின் கலர்படக் குழாயை எல்லா நோக்களிலும் பாதுகாக்கும் ஈடிணையற்றதொரு கண்டுபிடிப்பு; லண்டனிலும் ஜப்பானிலும் உள்ள பினடோன் ஆராய்ச்சி & அபிவிருத்திப் பிரிவு விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துள்ளது.

டிவி வாங்குவோர் ஒவ்வொரு நாளும் குவார்ட்ஸ் அமிசை கேட்டுவாங்குவதில் வியப்பில்லை.

புதியதை வாங்குங்கள், சிறந்ததை வாங்குங்கள், இதைவிடச் சிறந்தது வேறில்லை.



Binatone

*Q QUARTZ	C COLOUR	F FILTER	S SYSTEM

நீடித்துழைக்க தயாரிக்கப்பட்டது

மேல்விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் டீலருடன் தொடர்புகொள்க. சிரமம் இருப்பின் அணுகுக :
பினடோன் எலக்ட்ரானிக்ஸ் 23/4788-90 அன்ஸாரி ரோடு, தரியாகஞ்ச், புதுதில்லி-110002.

Arms Communications-416 TAM



டீ.வி. பித்தைப் போக்க.....

நமது குழந்தைகள் சதா சர்வகாலமும் டீ.வி. பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதால் அவர்களுடைய மனம், அறிவு, படிப்பு, விளையாட்டு, எதிர்காலம் முதலிய அனைத்துமே பாதிப்புக்கு உள்ளாவதை உணர்ந்தார் சால் லெவின் என்ற அமெரிக்கப் பொறியியல் வல்லுனர். இதற்கு ஒரு வழி காணக் கருதி உடற்பயிற்சிக்கு உதவும் ஒரு சைக்கிளை மின்ஜெனரேட்டருடன் பொருத்தி, டீ.வி.யை ஜெனரேட்டருடன் இணைத்தார். இப்போது டீ.வி. இயங்கவேண்டுமானால் ஜெனரேட்டர் ஓட வேண்டும். ஜெனரேட்டர் ஓடக் குழந்தைகள் சைக்கிள் பெடலை மிதித்தாக வேண்டும்! தேகப் பயிற்சி பெற்றே ஆகவேண்டும்! இதனால் குழந்தைகள் தேகப்பயிற்சி பெற்றது மட்டுமல்ல: அவர்கள் டீ.வி. பார்த்துப் பொழுதைக் கழிக்கிற நேரமும் கணிசமாகக் குறைந்து போனது! யார்தான் ஒரு ஜெனரேட்டரை இயக்குமளவுக்குச் சிரமப்பட்டு நீண்ட நேரம் சைக்கிள் பெடலை மிதித்துக் கொண்டிருப்பார்கள்?

ஆதாரம்: நியூடைம்ஸ்
தகவல்: வி.எஸ். இராமதாஸ்

மனத்துள் கேள்வி எழுந்தது. திருமணமாகி இரண்டு பெண்களுக்குத் தாயானவள் கணவனல்லாத வேறு ஆணின் ஸ்பரிசத்தை ரசித்தது சரியா? சுந்தரம் அறிந்தால் என்ன செய்வார்? நினைப்பே அடிவயிற்றில் பயமாக எழுந்தது. அவர்கள் குடும்பங்களில் இந்த மாதிரி விஷயங்களை வாய் திறந்து பேசுவதே குற்றமாகக் கருதப்பட்டது. ஆமாம்! அவளும் அப்படிக் குடும்பம், ஜாதி என்று அடங்கி என்னதான் கண்டாள்? கடந்த இரண்டு வருஷங்களாகச் சுந்தரம் அவளை மனத்திலிருந்து மட்டுமல்ல, உடலாலும் அல்லவா ஒதுக்கிவிட்டார். அவள் பெண்மைக்கு எவ்வளவு பெரிய அவமானம் அது... அவள் அருமையை உணர்ந்த ஒரு கணவன் செய்யும் காரியமா அது? மனைவி என்பவள் என்ன மண் உருண்டையா? கணவன் இஷ்டத்திற்கு மட்டும் ஆட... எப்படிப்பட்ட சுயநலமி அவள் கணவன். அவள் தனக்காக இல்லை, தன் மகள் எதிர்காலத்திற்காக எவ்வளவோ செய்யத் தயாரான நிலையில் அவள் கணவன் மட்டும் ஏனிப்படி? இந்தச் சுயநலமிக்காக அவள் எல்லாவற்றையும் இழக்க வேண்டுமா?

யுக, யுகமாக இந்தப் பூமியில் பாதுகாக்கப்பட்டு வந்த பெண்மையின் கற்பு ஒருபுறம் வேலியாகத் தடுக்க, எப்படியாவது தன்னையும், தன் மகளையும் சாதனையாளர்கள் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி மறுபுறம் இழுக்க, ஞானம் வேலி ஓரத்தில் தயங்கி நின்றாள். இனிமேல் தாண்டிக் குதிக்க அதிக நேரமாகாது என்று புரிந்தது.

முன் அறையில் புவனாவுடன், தமிழ்ச் செல்வனும் இவள் வருகைக்குக் காத்திருந்தான்.

"என்ன அண்ணி? எல்லாம் நல்லபடியா ஆச்சா?" தமிழ்ச்செல்வனின் கேள்வியில் ஆயிரம் அர்த்தமிருந்தாற்போலத் தோன்றியது. அவள் அவசரமாக 'உம்' முடன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு என்ன உறவு...? எதை எதிர்பார்த்து அவர்களுக்காக உழைக்கிறான்? நாளைக்கு இவனுக்கு நன்றி காட்ட வேண்டி புவனாவும் அவள் வருடலையும், முத்தத்தையும் பொறுத்துக் கொள்வதுடன், அனுபவிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டி வருமோ? ஞானத்தின் தாய்மை அவளைச் சம்மட்டியால் அடித்தது. கூடவே தமிழ்ச்செல்வன் அப்படியில்லை, புவனாவைச் சொந்தத் தங்கையாக நினைக்கிறான் என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். தமிழ்ச்செல்வன் இல்லையென்றால் வேறொருவன். சே... சே... புவனாவுக்கு அப்படிப்பட்ட அவசியம் நேராது. அவள் வாழ்வில் உயர நான் துணையாக நிற்கிறேனே... என்னைப் போல் அவள் துணையிருந்தும், இல்லாமல் தனியே அலைய வேண்டாமே.

"அம்மா, இன்னிக்குக் கூட்டம் கோவில் சம்பந்தப்பட்ட விழா. அதனாலே வாழ்த்தோட நிற்காம, இன்னும் நாலு பாட்டுப் பாடுன்னாங்க... தேவாரம், பாசுரம் எல்லாம் பாடினேன். அறநிலையத்துறை அமைச்சர் உருகிப் போயிட்டாரு... எனக்கும் பாடறச்சே அப்படியே அப்பா ஞாபகம் வந்திடுச்சு. நெஞ்சை அடைச்சுக்கிட்டு அழுகை வந்திடுச்சு... அப்பா இந்தப் பாட்டை எல்லாம் எப்படிப் பாடுவாரு... அம்மா, அப்பாவைப் பார்த்து எத்தனை மாசமாச்சு...? வாரம் ஒரு கார்டு எழுதறதோட சரி... நாம போய் அப்பாவைப் பார்த்திட்டு வரலாம்மா... எனக்கு அவரைப் பார்க்காம மனசே பிரமை பிடிச்ச மாதிரி இருக்கு... இந்தப் பாட்டிலெல்லாம் மனசே போகல்லே..என்னம்மா, பதிலே பேசலே...? போலாம்மா... பத்துநாள் ஊருக்குப் போய் அப்பாவோட இருந்துட்டு வரலாம்மா..." குழந்தையின் பிடிவாதத்துடன், கண்ணில் நீர் ததும்பப் பேசும் புவனாவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ஞானம் திகைத்தாள்.

மகள் பாடுவாள், பாட்டுக் கற்றுக் கொண்டு முன்னேறுவாள். ஆனால் அவள் ஒவ்வோர் அடியிலும் முழுமனத்துடன் ஈடுபட வேண்டுமென்றால் அப்பா என்னும் மனிதரின் அன்பும், பலமும் தேவை என்று புரிந்தது...

அவரும் மாற மாட்டார்... இந்தப் பெண்ணும் அவள் அப்பா ஆசையிலிருந்து விடுபட மாட்டாள்.

வழிதான் என்ன?

(தொடரும்)

•• நல்லோரின் சேர்க்கை என்பது இறைவனின் கடாட்சத்துக்கு ஒப்பானது.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு—III
ராஜ்மோகன் காந்தி

ஏப்ரல் முதல் தேதி நேருவின் கடிதத்துடன் ஒரு தூதர் வந்தார். ''ஜூன் 22-ம் தேதி வாக்கில் மவுண்ட்பாட்டன் பிரபு பதவியிலிருந்து விலகிக் கொள்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அவரிடத்தில் அமர வேறு ஒருவரை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். எங்கள் கண்கள் உங்கள் திசையில் திரும்புவதில் வியப்பில்லை. நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். தில்லியில் நீங்கள் இருப்பது எங்கள் எல்லோருக்கும் பெருபகாரமாய் இருக்கும்; முக்கியமாக எனக்கு''. 30.3.48 தேதியிட்ட கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தார் நேரு.

இதில் வியக்கும்படியான விஷயம் ஏதுமில்லை. சீக்கிரமே விடை பெற மவுண்ட்பாட்டன் துடியாயிருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. நேரு, பட்டேல், ஸி. ஆர். ஆகியோர்தான் அவரை மேலும் சில காலம் தங்கியிருக்குமாறு வற்புறுத்தி வந்தனர்.



''பாபுவை நெருங்கியிருந்த உள்வட்டத்தினர் ஒன்று பட்டு ஒருமுகமாகச் செயல்பட வேண்டும்....''

அரியாசனத்தை அலங்கரிக்க அழைப்பு

22

ஆனால் அவரோ, பிரிட்டிஷ் கடற்படையில் மீண்டும் சேர்வதற்கு ஆர்வத் துடிப்புடன் இருந்தார். அவருக்குப் பதில் யாரை நியமிப்பது என்று யோசிக்கும் யாருக்கும் ஏற்கெனவே நவம்பரில் மவுண்ட்பாட்டனுக்குப் பதிலாகத்தாற்காலிக கவர்னர்ஜெனரலாகப் பணியாற்றிய ஸி. ஆரின் நினைவு வராமல் போகாது. அவர் பெயர் மட்டுமேதான் மனத்தில் எழும் என்றில்லாவிட்டாலும் ஒரு சிறு பட்டியலில் முதல் பெயராக ஸி. ஆர். இடம் பெறுவார். ராஜேந்திர பிரசாத், சரோஜினி நாயுடு போன்ற ஓரிருவர் அவருக்குஅடுத்தபடியாக இருப்பவர்கள். எனவே ஸி. ஆருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றாலும் அவர் அதிசயப்படவில்லை.

ஏப்ரல் இரண்டாம் தேதி அவர் நேருவுக்கு எழுதினார்: ''நான் தில்லியில் இருப்பது உங்களுக்கெல்லாம் பேருதவியாக இருக்கும் என்பதைக் கேட்க ரம்மியமாகத்தான் உள்ளது. சில காலமாகவே இந்த யோசனை, 'வரப் போகிறேன்', 'வரப் போகிறேன்' என்று பயமுறுத்திக் கொண்டுதான் இருந்தது. ஆனால் ஒன்றைத் தெளிவின்றி, எதிர்பார்ப்பது என்பது வேறு. திட்டவட்டமான ஒரு கோரிக்கை விடுக்கப்படுவது என்பது வேறு. இதுபற்றி யோசிக்கச் சில தினங்கள் அவகாசம் கோருகிறேன்''.

அவர் மேலும் எழுதினார்: "வங்கத்தையும் அதன் மக்களையும் நான் நேசிக்கத் தொடங்கி விட்டேன். நான் இங்கிருந்து புறப்பட நேர்ந்தால் என்னிடத்தில் யார் வருவார்கள்?"

ஸி. ஆர். தொடர்ந்தார்: "எனக்குச் சென்னை திரும்ப வேண்டும் என்ற அவா அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் மீது எனக்குள்ள ஆழ்ந்த காதல் உங்களுக்குத் தெரியும். அங்கே ஒரு சாமானியக் குடிமகனாக இருந்துகொண்டு வயதின் காரணமாகப் பெற்ற அனுபவ அறிவைப் பயன்படுத்திப் பிறருக்கு என்னாலான உதவிகளைச் செய்ய விரும்புகிறேன்."

நேரு வற்புறுத்தினார். முதல் கடிதத்தில் சூசகமாகக் கூறியதை இரண்டாவது கடிதத்தில் உறுதிப்படுத்தினார். ஸி. ஆர் தான் கவர்னர் ஜெனரல் பொறுப்பேற்க வேண்டும் என்பதில் படேலும் தாமும் ஒருமித்த கருத்து உடையவர்களாக இருப்பதைச் சொன்னார். ஏப்ரல் 11-ம் தேதி அவர் எழுதினார்: "உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். எங்களுக்கு ஏமாற்றமளிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் இங்கே இருந்து எங்களுக்குப் பல விதங்களில் உதவவேண்டும் என்று விரும்புகிறோம். எங்களில் சிலர் சுமக்க முடியாத அளவு பாரத்தைச் சுமந்து கொண்டிருக்கிறோம்."

1948, ஏப்ரல் 15-ம் தேதி ஸி. ஆர். பதில் எழுதினார்: "உங்கள் கடிதங்களில் உள்ள சொற்பிரயோகங்கள் நான் மறுப்பதற்கு இடமளிக்காத வகையில் அமைந்திருக்கின்றன. எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவத்துக்கும் என்னிடம் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்கும் நன்றி. உங்களுக்கு உதவியாக இருக்க முடியுமென்றால் மகிழ்ச்சிதான். ஆனால் எந்த அளவுக்கு நான் உபயோகமாக இருக்கப் போகிறேன் என்பதில் எனக்குச் சந்தேகங்கள் உண்டு."

ஸி. ஆரின் சந்தேகங்களுக்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவது அவருடைய அடக்கம். எந்தச் சவாலையும் அவர் ஏற்கத் தயங்காதவர்தான். ஆனால் தேசத்தின் மிகப் பெரிய பதவியைத் தான் வகிக்க வேண்டும் என்று விதிவகுத்திருப்பதாக அவர் என்றைக்குமே நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இரண்டாவதாக, கவர்னர் ஜெனரல் பதவியில் பொறுப்புக்கள் நிறைய உண்டு; ஆனால் அதிகாரங்கள் மிகவும் குறைவு. மூன்றாவதாக நேரு—படேல் இடையே உள்ள கருத்து வேற்றுமைகளுக்கு இடையில் அவர் செயல்பட வேண்டியிருக்கும். இது மிகவும் கஷ்டமானது. மகாத்மாவின் மறைவையொட்டி அவர்கள் ஆலிங்கனம் செய்து கொண்டார்களேயொழிய, கருத்து வேற்றுமைகள் கரைந்து விடவில்லை. இதை விடச் சென்னையில் அமைதியான வாழ்க்கை நடத்துவது மேலல்லவா?

இந்தச் சந்தேகங்களையெல்லாம் விரட்டியடித்த விஷயங்கள் இரண்டு. முதலாவது அளிக்கப்பட்ட பதவியின் பெரும் கௌரவம். இதைவிட முக்கியம், 'உங்கள் உதவி தேவை' என்று நேரு, படேல் ஆகிய இருவருமே மனம் விட்டுக் கூறியது. நேரு எழுதியதை உறுதி செய்து படேலும் எழுதினார்: "தில்லிக்கு நீங்கள் வந்தால், எங்களுக்குப் பேருதவியாக இருக்கும். பாபுவின் மரணத்துக்குப் பிறகு அவரை நெருங்கியிருந்த உள்வட்டத்தினர் ஒன்றுபட்டு ஒருமுகமாகச் செயல்பட வேண்டும். அவர்களில் ஒருவரது அறிவுரை அனைவருக்கும் கிடைக்க வேண்டும். தனி நபர் செல்வாக்கு காங்கிரஸைப் பலவீனப்படுத்திக் கொண்டு வருகிறது. உங்கள் உதவி, நிர்வாகக் காரியங்களில் மட்டுமின்றிக் கூட்டுச் சிந்தனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதில் பெரு மதிப்புடையதாக விளங்கும்." மேல் மட்டத் தலைவர்கள் கூட்டாக ஒருங்கிணைந்து, பிரச்னைகளை விவாதித்து, முடிவெடுக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதாகப் படேலின் கடிதம் அமைந்தது. "உங்களுக்கும் ஜவாஹர்லால்ஜிக்கும் என்னால் சிறிதளவேனும் உதவ முடியுமென்றால் அதற்காகப் புதுதில்லி அரசாங்க மாளிகையின் பொறுமையைச் சோதிக்கும் வாழ்க்கைக்கு என்னை உள்ளாக்கிக் கொள்ள, நான் தயாராக இருக்கிறேன்" என்று ஸி. ஆர். பதிலெழுதினார்.

ஆறாவது ஜார்ஜ் மன்னர் சம்பிரதாயப்படி இந்தத் தேர்வை அங்கீகரித்ததும், அகில உலகிலும் பத்திரிகைகள், 'சரியான முடிவு' என்று வாழ்த்தி எழுதின. ஜின்னா முதல் ஸி. ஆரின் பள்ளித் தோழர் வரை பலர் பாராட்டுத் தெரிவித்தனர். தென்னாட்டிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் உற்சாகம் கரை புரண்டது. மலையாகக் குவிந்த கடிதங்களுக்குப் பொறுமையாகப் பதில் எழுதினார் ஸி. ஆர்.

வங்கம் அவருக்குப் பிரியா விடை அளித்தது. 'ராஜாஜி திரும்பிப் போ' என்ற கோஷம், அவர் அங்கு காலடி எடுத்து வைத்த முதல் நாள் ஒலித்ததோடு சரி; பிறகு கேட்கப்படவேயில்லை. சரத்போஸ் உள்பட வங்க மக்கள் அனைவரது இதயத்தையும் தொடுவதில் வெற்றி கண்டிருந்தார் ஸி. ஆர். "நமது ராஜாஜி" என்று தலைப்பிட்டு அமிர்த பஜார் பத்திரிகை தலையங்கம் எழுதியது.

இவையெல்லாம் ஸி. ஆர். மனத்தை நெகிழச் செய்தன. இதயபூர்வமான உணர்வுகளுடன் அவர் பேசி விடை பெற்றார்: "எனது குழந்தைப் பருவம் நீங்கலாகப் பார்த்தால் எனது வாழ்நாளிலேயே எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்த காலகட்டம் வங்க மக்களிடையே நான் வாழ்ந்த இந்தப் பத்து மாதங்கள்தாம். இங்கு எனக்குக் கிடைத்த அன்பும் என் இதயத்தில் இங்குள்ள மக்கள் பால் பெருகிய அன்புமாகச் சேர்ந்து, கடந்த பல ஆண்டுகளில் நான் அனுபவித்த கஷ்டங்களையும் சோதனைகளையும் மறந்து போகச் செய்தன."

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

** 'வாய்ப்பு இல்லை; அதனால் முன்னுக்கு வர முடியவில்லை' என்று முணுமுணுப்பது முட்டாள்தனம். முன்னுக்கு வருகிறவர்கள் வாய்ப்புக்கள் தங்களை நாடி வரக் காத்திருப்பவர் அல்லர்; அதனைத் தேடிச் செல்பவர்களே. தேடி அகப்படாவிட்டால் வாய்ப்பை அவர்களே உருவாக்கிக் கொள்வார்கள்!

சின்னச் சின்ன கனவுகள்

மாயகிருஷ்ணன் ரிசீவரை மெல்ல அதன் இடத்தில் பொருத்தினார். நெற்றியில் பொங்கிய வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டார்.

'முத்து செஞ்ச வேலையா இருக்கும்' என்று உரக்கவே சொன்னார். 'ரத்தினம் ஊரில இல்லாத நேரம் பார்த்தா இது நடக்கணும்!'

வருத்தமெல்லாம் இரண்டே நொடிகள் தான். அபாயங்களும், பிரச்னைகளும் சூழும் போது, அவருடைய புத்தி வழக்கத்தைவிட வேகமாகவே செயல்படுவதை வியப்போடு ரசித்தார். மனத்திற்குள் பகடைக் காய்களை எப்படி நகர்த்த வேண்டும் என்று கணக்குகள் போட்டார். பரபரப்பாகக் கிளம்பினார்.

ஃபாக்டரி கேட் காரின் வேகத்தைப் பார்த்து அகலமாகத் திறந்தது. காரை விட்டு இறங்கி, கதவை அறைந்து சாத்தியதில் அவருடைய அவசரம் தெரிந்தது. தொழிற்கூடத்திற்குள் நுழையாமல், அதைச் சுற்றிக் கொண்டு போன பாதையில் விரைவாக நடந்தார்.

"டேய் நில்லுடா" என்று, எதிரே கையில் ட்ரே நிறையத் தீப்பெட்டிகளை எடுத்துக் கொண்டு கடந்தவனை நிறுத்தினார். "போய் முத்துவை உடனே என் ரூமுக்கு வரச் சொல்லு.... ஓடு...." கோபத்தையோ, எரிச்சலையோ காட்டாத குரல்.

ரூமுக்குள் நுழைந்து, இருக்கையில் உட்காராமல், வகுப்பு எடுக்கும் ஆசிரியர் போல நடந்தார்.

"கூப்பிட்டீங்களாமே மொதலாளி?" முத்து கதவைத் திறந்து நின்றான். "அங்கெல்லாம் ஓர்க்கரை ஏன் அனுப்பறீங்க? எதையாச்சும் பாத்துட்டு மொட்டைக் கடுதாசி எழுதிட்டா என்ன ஆவறது?" என்றான், உரிமையுடன்.

'மொட்டைக் கடுதாசி' என்ற வார்த்தை அவன் நெஞ்சிலேயே ததும்பிக் கொண்டிருந்திருக்க வேண்டும், வெளியே குதித்துவிட்டது. மாயகிருஷ்ணன் குறித்துக் கொண்டார்.

"முத்து, உன்கிட்ட நான் கொஞ்சம் எக்குத் தப்பா பேசிட்டேன், நேத்திக்கு. மனசில எதையும் வச்சுக்கலேயே?"

முத்து சற்று தடுமாறுவதை ரசித்தார்.

"என்ன மொதலாளி அதையெல்லாம் பெரிசுபடுத்திக்கிட்டு...." அழுக்குப் படிந்த பற்களைக் காட்டினான்.

"வீடு பிரிச்சுக் கட்டணும், பத்தாயிரம் வேணும்னு சொன்னே இல்ல?"

மாயகிருஷ்ணன் மேஜை டிராயரைத் திறந்தார். ஒரு நூறு ரூபாய்க் கட்டை எடுத்து மேஜை மேல் போட்டார்.

எலும்புத் துண்டத்தைப் பார்த்த நாய் போல் முத்து விறைப்பானான்.

"இது உனக்குத்தான் முத்து..."

முத்து கையை நீட்டி அந்தக் கரன்ஸிக் கட்டைப் பற்றப் போக, மாயகிருஷ்ணன் தன் கையை, அதன் மேல் வைத்தார்.

"பணம் வேணும்னா நீ ஒரு வேலை செய்யணுமே முத்து" என்றார்.

பாண்டியன் ஃபாக்டரியில் நுழைந்ததும் முதலாளியின் காரைப் பார்த்தான். வழக்கமாக நிறுத்தும் மர நிழலுக்குப் போகாமல், கார் அவசரமாய் நிறுத்தப்பட்டதைக் கவனித்தான்.

"வாங்கண்ணே.... கலெக்டரைப் பார்க்க வந்தீங்களா?"

குரல் கேட்டுச் சட்டென்று திரும்பினான்.

"தங்கராஜ்! நீ எப்பலேர்ந்து வேலைக்கு வரே?"

"எத்தனை நாளைக்குத்தான் வீட்டோட மொடங்கிக் கிடக்க முடியும்ணே? நந்துவைக் கூப்பிடவா?"

"இருக்கட்டும், தங்கராஜ். மொதலாளி இட்ட ஒரு காரியம் ஆவணும். முடிஞ்சதும் வரேன். கார் நிறுத்தியிருக்கறதைப் பார்த்தா, உடனே புறப்பட்டுடுவாரு போல இருக்கு... நீ இங்கதானே இருப்பே?"

இல்லண்ணே.... கேரளாலேர்ந்து லாரி வந்திருக்காம். அல்பீசியா மரம்... குச்சி பண்ற எடத்தில லோடு இறக்கறப்ப, கூட இருந்து கவனிக்கச் சொல்லியிருக்காங்க. நந்துகிட்ட சொல்லிட்டுப் போறேன்...."

முத்துவின் முகத்தில் ஏமாற்றம் வண்டலாகப் படிந்தது.

"என்ன செய்யணும் மொதலாளி?" பணத்தைப்பார்த்துக்கொண்டே கேட்டான்.

"எவனோ அப்பன் பேர் தெரியாத பய போலீஸுக்குத் தகவல் கொடுத்திட்டான்

சுபா

முத்து... செக்கிங் வராங்களாம்...''

''வெடிகுண்டு ரூமைப் பத்தியா மொதலாளி?'' முத்துவின் குரலில் அதிர்ச்சி இருந்தது.

''ஆமாம், முத்து.... நம்ம ஆளுங்கள்லாம் வந்தாச்சா?''

''மாசிலாமணியும் ராமலிங்கமும் ஒன்பது மணிக்கு வந்துடுவாங்க. சிதம்பரம் பத்து மணிக்கு மேலேதான் வருவான்.''

''இப்ப் அந்த ரூம் வெடிச்சதுன்னு வெவி... ஃபாக்டரிக்கு ஏதாவது ஆபத்து உண்டா?''

''என்ன மொதலாளி சொல்றீங்க?''

''பதிலைச் சொல்லுடா மொதல்ல...''

''அந்த ரூமுக்கும் ஃபாக்டரிக்கும் ரொம்ப தூரமிருக்கே மொர்தலாளி.''

''வெடிச்சா, அந்த ரூம் மட்டும்தானே சாம்பலாப் போவும்?''

''ஆமா, ஏன் மொதலாளி....?''

''ஆமா ஆவன்னால்லாம் வேண்டாம். நான் சொல்றதைக் கேளு...''

''**பா**ண்டி அண்ணன் வந்திருக்காரு, கலெக்டரு....'' தங்கராஜ் நந்தகுமாரிடம் கிசுகிசுப்பாகச் சொன்னான்.

''எங்கண்ணே?''

நந்தகுமார் மருந்துக் கலவையின் பிரௌன் பதத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான்,

''பின்னால மொதலாளி ரூமுக்குப் போயிருக்காரு. வர்றப்ப பார்க்கறேன்னாரு. சாயங்காலம் நம்ம வீட்டுக்கு வரச் சொல்லு. எக்குத் தப்பாப் பேசி அண்ணன் மனசை நோகடிக்காதே...''

நந்தகுமாரின் மனத்தில், அம்மாவைப் பார்த்துவிட்டு வந்ததிலிருந்து குருக்ஷேத்திரம் தொடங்கி இருந்தது. அம்மாவை மறுபடி பார்க்க வேண்டும் போலத் துடிப்பாயிருந்தது. அவளுடைய மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு காலமெல்லாம் கண்ணீரைப் பொழிந்து 'மன்னித்து விடும்மா' என்று கதற வேண்டும் போல ஆசையாயிருந்தது.

பாண்டியன் மேல் இருந்த கோபம், சூரியன் எழ எழ அரூபமாகும் பனியைப் போல் காணாமல் போய்க் கொண்டிருந்தது. 'இந்த ஆள் எவ்வளவு செய்ஞ்சிருக்காரு, நாம ஏன் இவ்வளவு கேவலமாக நடத்துகிட்டோம்?'

பாண்டியனைத் தேடிப் போய் வலிய இரண்டொரு வார்த்தை சுமுகமாகப் பேச வேண்டும் என்று தீர்மானித்தான்.

''**நீ** என்ன செய்யறே, அந்த ரூமுக்குள்ள போறே... நைட்ரோ கிளிஸரினு, அம்மோனியம் நைட்ரேட்டு, ஸோடியம் நைட்ரேட்டு எல்லாத்தையும் பாதாளக் கிடங்குல போட்டுட்டு வெளியே வரே....''

''வந்திட்டு?''

''நீ ஓடிப் போயிடு. அந்த ரூமுக்கு நெருப்பு வைக்கற வேலையை நான் பார்த்துக்கறேன்.''

''பயமாயிருக்கே மொதலாளி....''

''பயப்படறவனுக்குப் பணம் கெடைக்காதுடா, அறிவு கெட்டவனே....''

பாண்டியன் சுவரோடு தேய்ந்து நின்றான்.

முதலாளியின் அறையை நெருங்கிய சமயத்தில், உள்ளே கொஞ்சம் காரசாரமான குரல் கேட்டபோது, வழக்கமான சச்சரவு ஏதோ என்றுதான் தயங்கினான். ஆனால் அந்தச் சம்பாஷணையின் போக்கு, அதில் இடர்ப்பட்ட அபாய வார்த்தைகள் அவனை நிமிர்த்தின.

முத்து பரபரப்பாய் வெளியேறும் கணத்தில், சரேலென்று கால்களை அகட்டி குறுக்கில் மறித்து நின்றான்.

''எங்க போறே முத்து?''

மாயகிருஷ்ணன் திடுக்கிட்டு நிமிர்ந்தார். முத்து கலவரத்தோடு அவரைத் திரும்பிப் பார்த்தான்.

மாயகிருஷ்ணன் டவலை எடுத்து முகத்



தைத் துடைத்துக் கொண்டார்.

''வா பாண்டியா. ஏதோ காம்பன்சேஷன் பத்திப் பேசணும்னு சொன்னே இல்ல?''

''முத்து எங்க போறான் மொதலாளி?''

''அவன் எங்கேயோ போறான், விடு... வா. உக்காரு. நம்ம விஷயம் பேசுவோம். தீக்காயம் பட்ட பையனுக்கு எவ்வளவு காம்பன்சேஷன் வேணும்கறே? பத்தாயிரம் போதுமா, இந்தா. நீ போ முத்து.''

''முத்து நீ அசையக் கூடாது'' என்றான் பாண்டியன், குரலைத் தீவிரமாக்கிக் கொண்டு. ''மொதலாளி, சட்டத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்ய எப்படி மனசு வந்தது, உங்களுக்கு?''

''சட்டத்தைப் பத்திப் பேசாதே, பாண்டியா. நீ கட்டியிருக்கியே அறுத்தவ, அவ புள்ளைக்குக் கூட நம்ம ஃபாக்டரில வேலை கொடுத்திருக்கோம். சட்டத்தைப் பாத்தா அந்த வயசுப் பையனுக்கு வேலை கொடுக்க முடியுமா? முத்துவுக்கு வழியை விடு.''



''வயத்துக்கில்லாதவங்களுக்கு வேலை கொடுக்கறதும், வெடி குண்டு தயாரிக்கறதும் ஒண்ணு மொதலாளி?''

''வெடிகுண்டா, என்ன உளர்றே, பாண்டியா?''

''பாசாங்குல்லாம் வேண்டாம், மொதலாளி. நான் நீங்க பேசறதையெல்லாம் கேட்டுட்டேன்.''

''பாண்டியா!'' மாயகிருஷ்ணன் மூலைக்குத் தள்ளப்பட்ட எலி போல் உணர்ந்தார்.

''போலீஸ் வர்ற வரைக்கும் நீங்களோ, முத்துவோ இந்த ரூமை விட்டு நகரவிடமாட்டேன் முதலாளி...'' பாண்டியன் கதவைச் சாத்தினான்.

''பாண்டியா... எவ்வளவு பேருக்கு, வேலை கொடுத்துச் சோறு போடறேன். எவ்வளவு குடும்பம் என்னால சாப்பிடுது, தெரியுமில்ல? அதையெல்லாம் கெடுக்காதே. நான் உள்ள போனாக்கூட இதைப் போல இன்னும் நாலு ரூபாய் கட்டை வீசியெறிஞ்சா எனக்கு விடுதலை கெடைச்சிடும். ஆனா ஃபாக்டரியை மூடிட்டாங்கன்னா, எத்தனை பேர் வயிறு பட்டினி கெடக்கும், யோசிச்சுப் பாரு...

மாயகிருஷ்ணனின் வாய் பேசிக் கொண்டிருந்ததே தவிர, புத்தி சில அவசரக் கணக்குகளைப் போட்டுப் பார்த்தது.

எந்நேரமும் போலீஸ் வந்துவிடக் கூடும். அதற்குள் அந்த வெடிகுண்டு ரூமையும், அதோடு முத்துவையும் சேர்த்து புஸ்வாணம் விட வேண்டும். சமயம் தெரியாமல் குறுக்கில் இவன் வேறு வந்துவிட்டான்.

நல்லவேளையாக அவருடைய இந்த ரூம், வெடிகுண்டு ரூமைப் போலவே, ஃபாக்டரியின் சந்தடிகளிலிருந்து ஒதுங்கி இருந்தது. ஃபாக்டரி தொழிலாளர்கள் யாருக்கும் இந்த ஆக்ரோஷக் கூச்சல்கள் கேட்டிருக்காது.

மாயகிருஷ்ணன் மேஜை மீது இருந்த ரூலர் கழியை சுவாரஸ்யமாகக் கவனித்தார். ஒரே பாய்ச்சலில் அதை எடுத்து, பாண்டியன் மீது வீசினார்.

கழி, பாண்டியனின் முகத்திலும், நெஞ்சிலுமாகப் பாய்ந்து, நெற்றியில் உடன் புடைத்தது. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் முத்து, பாண்டியனின் அகட்டிய கால்களுக்குள் தன் காலை நுழைத்து இடறி விட, பாண்டியன் நிலை தடுமாறிக் கீழே சரிந்தான்.

''முத்து நீ போடா, நான் பார்த்துக்கறேன்...'' மாயகிருஷ்ணனின் கண்களில் வெறி ததும்பியது. ''நீன்னா வந்து மாட்டிக்கிட்டியே பாண்டியா. முதலை உன்னைக் குதறும விடாது...''

பாண்டியனின் முதுகில் காலை வைத்து உதைத்தார். பாண்டியன் திடீரெனப் புரள, வெள்ளத்தில் அகப்பட்ட படகு போலத் தடுமாறி விழுந்தார். கையில் ரூலர் கழி மறுபடியும் கிடைக்க, அதைக் காற்றில் சாட்டை போல் வீசினார். இந்த முறை பாண்டியனின் கழுத்து இலக்கானது. பாண்டியன் துள்ளி விழ, சரேலென்று எழுந்தார். ஒரே எட்டில் அறைக்கு வெளியே பாய்ந்து, கதவை வெளியே தாழிட்

டார். தோட்டத்துப் பக்கம் ஓட ஆரம்பித் தார்.

பாண்டியன் சுதாரித்து எழுந்து, மூடிய கதவை தொம் தொம் என்று மோதினன். இருபதாவது மோதலில் கதவு, தாள் திறந்தது. தாளைத் திறந்துவிட்டு நந்தகுமார் வெளியே நின்றிருந்தான்.

''நந்து... ஓடு... ஆளுங்களைக் கூட்டி வா. பின்னலே வெடிகுண்டு ரூமுக்கு...''

பாண்டியன் கழுத்தை முற்றிலும் நிமிர்த்த முடியாமல் தந்தி பாஷையில் பேசிவிட்டு மாயகிருஷ்ணனைத் தேடி ஓட ஆரம்பித்தான்.

நந்தகுமாருக்கு எதுவுமே மனத்தில் உறைக்கவில்லை. பாண்டியனிடம் மனம் விட்டுப் பேசலாம் என்று வந்தால், அவனை அறையில் அடைத்து வைத்தது யார்? எங்கே ஓடுகிறன்? தன்னிச்சையாக நந்தகுமாரின் கால்கள் பாண்டியன் ஓடிய திசையில் ஓட ஆரம்பித்தன.

''**மூ**த்தூ....'' என்று கூப்பிட்டார் மாய கிருஷ்ணன். உலைக் கூடம் போல மூச்சிரைத் தது.

''மொதலாளி...'' வெடிகுண்டு ரூமுக் குள்ளிலிருந்து அவனுடைய அவசரக் குரல் வந்தது.

''உள்ளேதானே இருக்கே? இரு.'' மாய கிருஷ்ணன் அந்த ரூமின் கதவை வெளி யிலிருந்து தாளிட்டு மூடினர். முகத்தில் குரூரமான புன்னகை விரிந்தது.

டவலை எடுத்து, குறுக்கில் கிழித்தார். ஃபாக்டரியில் தயாரான தீப்பெட்டியை எடுத்து ஒற்றைக் குச்சியைக் கிழித்தார். துணி குப்பென்று பற்றிக் கொண்டு, வீசும் காற்றில் பெருகத் தொடங்கியது.

கதவைச் சட்டென்று திறந்து, நெருப்பை உள்ளே வீசிவிட்டுத் தாளிட்டார்.

தடதடவென்ற பாதங்களின் ஒலி கேட்டுத் திரும்பினர்.

பாண்டியன் ஆவேசமாக ஓடி வந்து கொண்டிருந்தான்.

''மொதலாளி.... மொதலாளி... என்னை வெளியே விட்டுடுங்க...'' முத்து கிலி பெருகிய குரலோடு கதவை மோத ஆரம் பிக்க, பாண்டியன் கதவை நோக்கி ஓடி னன். ஓடும் வழியில் மாயகிருஷ்ணனையும் பிடித்து இழுத்தான். மாயகிருஷ்ணன் இடுப் பிலிருந்த பெல்ட்டை அரைநொடியில் கழற்றினர்.

விஷ்க் — பாண்டியனின் முகத்தில் அணில் முதுகு போல சிவப்புக் கோடுகள்.

ரூமுக்குள்ளிருந்து ஜன்னல் இடைவெளி வழியே புகைய ஆரம்பிக்க, மாயகிருஷ்ணன் நேரத்தின் நெருக்கத்தை பயம் தோய்ந்த மனத்தில் உணர்ந்தார்.

பாண்டியன் ரூமின் கதவைத் திறந்து, முத்துவை வெளியேற்ற நினைத்து, தாழ்ப் பாளில் கையை வைக்க,.மாயகிருஷ்ணனின் செருப்புக் கால் அவனுடைய நடுமுதுகில் உதைத்தது. அந்த நொடியில் பாண்டியன் தாழ்ப்பாளை நீக்கியிருக்க, மாயகிருஷ்ண னின் உதை அவனைத் திறந்த கதவு வழியே ராக்கெட்போல் செலுத்தியது.

முத்துவை மோதிக் கொண்டு, அவன் கீழே விழ, கதவு அவசரமாகச் சாத்திக் கொண்டது. வெளியே மறுபடியும் தாளிடப் பட்டது.

உள்ளே அறை மூலையில் பகாசுரன் போல நெருப்புப் பரவி மேலே எழுந்தது. வாரி இறைத்த தண்ணீர் போலப் பரபரவென்று அறையெங்கும் நழுவி வந்தது. சூழ்ந்து கொண்டது. பாண்டியனுக்குச் சுவாசம் திணறியது.

ஒரு ராட்சஸப் பட்டாசுச் சத்தத்துடன் முதலில் ஜன்னல் வெடித்தது. அப்போது தான் அந்தக் குரல் அவனை அழைத்தது.

''அப்பா....''

மஞ்சள் நெருப்பும், கறுப்புப் புகையும் தழுவிய அந்த கொடூர கணத்தில், பாண்டி யன் தனது கடைசி நினைவுகளை பெரு முயற்சி யுடன் தக்க வைத்து மறுபடியும் அந்தக் குரலைக் கேட்டான்.

''அப்பா ஆ..ஆ..ஆ...''

நந்தகுமார் தன்னையே நெருப்புச் சூழ்ந்து விட்டது போல் அலறினன். தவித்தான். துடித்தான். துள்ளினன். வெகுண்டான்.

மாயகிருஷ்ணன் சிறுத்தை போல் நந்த குமாரின் மீது பாய்ந்து அவனைப் பூமியோடு சேர்த்துத் தன் பாரத்தால் அழுத்தினர்.

(தொடரும்)

** மனிதனுக்கு ஆண்மையும் அறிவும் ஊக்கமும் உறுதியும் அளித்த இறைவன், இவ்வளவும் பயன்படாமல் போக ராகு காலத்தையும் வார சூலையையும் வைத்திருப்பான் என்று என்னல் நம்ப முடியவில்லை.




''என் ஸ்கூட்டரை இப்ப விற்ருல் என்ன விலைக்குப் போகும்?''

''நிச்சயமா எட்டு ரூபாய் கிடைக்கும்!''

''என்ன ஸார் இது அநியாயம்?''

''நியாய விலைதான் ஸார்; ஒரு லிட்டர் பெட்ரோல் இப்பத் தான் போட்டுக்கிட்டு வந்ததாகச் சொன்னீங்களே!''

— கே. பாலாஜி



பதினோராவது நிலையில் வேலைகளைப் பார்வை யிடுகிறார் ஜீயர் சுவாமிகள்.

"அடியார்களைக் கருவியாக்கி அரங்கன் நிகழ்த்திய சாதனை!"

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றபடி, ஸ்ரீரங்கம் இராஜகோபுரத்தை சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய்ச் செலவில் கட்டி முடித்துச் சாதனை செய்திருக்கிறார் ஸ்ரீ அஹோபில மடத்து 44–வது பட்டத்து ஸ்ரீமத் ஜீயர் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கர். தொண்ணூற்று மூன்று வயதை ஒருபொருட்டாக மதிக்காமல், இறைப் பணியில் ஓர் இளைஞரைப் போல் ஈடுபட்டு தினந்தோறும் கோபுரத்திற்கு வந்து, 'விஞ்ச்' மூலம் பல நிலைகளுக்கும் சென்று, ஆங்காங்கே நடைபெறும் வேலைகளை மேற்பார்வை செய்த ஜீயர் ஸ்வாமிகளின் மனோதிடம் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துவது. ஸ்வாமிகளைச் சந்தித்தபோது.....

கேள்வி: இந்தப் பணியில் ஈடுபட வேண்டும் என்று உங்கள் மனத்துக்கு எப்படித் தோன்றியது?

பதில்: அரங்கன் என் கனவில் தோன்றினார். "ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் பதின்மூன்று நிலைகள் எழுப்பிப் பூரண கோபுரமாகச் செய்ய, உன்னைத்தான் இவ்வளவு நாள் கழித்துத் தேடிப் பிடித்திருக்கிறேன். நீ அஹோபிலத்தில் கோபுரத்தைப் பூர்த்தியாகக் கட்டினாய் அல்லவா? அதைப் போல் இந்தக் கோபுரத்தையும் கட்டி முடிக்க வேண்டும். செலவிற்கு நீ கவலைப்பட வேண்டியதில்லை!" என்றார். இதைப் பக்தர்களுக்குத் தெரிவித்தேன். பலர் இப்பணிக்குத் தாமாகவே முன்வந்து உதவத் தொடங்கினார்கள். இப்படித்தான் இப்பணி தொடங்கியது.

கேள்வி: யுனெஸ்கோ உதவி கிடைத்திருக்கிறதா?


பதில்: கோபுரத்திற்கு யுனெஸ்கோ உதவி எதுவும் இல்லை. ஐ நா சபையின் ஒரு பிரிவான அந்தக் கல்வி–கலாசார அமைப்பு, புராதனக் கோயில்கள் மேலும் அழியாமல் தடுக்க, சில பொருள்களைக் கொடுத்து உதவும். புதியதாக நிர்மாணிக்கப்படும் கோபுரத்திற்கு எந்த உதவியும் செய்வதில்லை.

கேள்வி: திருப்பணிக்கு நன்கொடை கொடுத்தவர்களில் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்வதென்றால் யாரைக் குறிப்பிடுவீர்கள்?

பதில்: பொதுமக்களைத்தான் கூற வேண்டும். பல மாநில அரசுகளும் மத்திய அரசும் உதவியிருப்பதால் இது மக்கள் அரங்கனுக்குச் செய்த திருப்பணியே. ஓர் இசை நிகழ்ச்சி

அடுத்த இதழ்

சேலம் மாவட்டத்தில் கல்கி – I



ஒரு கிராமமே அழியப் போகிறது!

— கவர் ஸ்டோரி

68 குடும்பங்களை அம்போவாக்கிய அரசு!

— ஸ்பெஷல் ரிப்போர்ட்

மகாத்மாவின் வாரிசுகள்...

— செட்டிபட்டிக்கு ஒரு பயணம்



வின் மூலம் பணம் வசூலாயிற்று என்றால் டிக்கெட் வாங்கிய அனைவரும் திருப்பணியில் பங்கு பெற்றிருப்பதாகத்தான் அர்த்தம். என்றாலும், குறிப்பிட்டுச் சொல்வதென்றால் இப்படிக் கூறலாம்:

முதல் நிலை	— அஹோபில மடம்
2–ஆம் நிலை	— ஆண்டவன் ஸ்வாமிகள்
3–ஆம் நிலை	— காஞ்சி காமகோடி பீடம்
4–ஆம் நிலை	— ஆந்திர அரசு
5–ஆம் நிலை	— கர்நாடக அரசு
6–ஆம் நிலை	— இசையமைப்பாளர் இளையராஜா
7–ஆம் நிலை	— ஸ்ரீரங்கம், திருச்சிவாழ் மக்கள்
8–ஆம் நிலை	— துணை ஜனாதிபதியின் உதவி
9–ஆம் நிலை	— அஹோபில மடத்து சிஷ்யர்
10–ஆம் நிலை	— காஞ்சி காமகோடி பீடத்து சிஷ்யர்
11–ஆம் நிலை	— மகாலட்சுமி டிரஸ்ட், சென்னை
12–ஆம் நிலை	— அஹோபில மடத்து ஜீயர்
13–ஆம் நிலை (மாடி மட்டும்)	— தமிழக அரசு
கலசங்கள்	— கும்பகோணம் எஸ்.ஆர்.ஜி. ரங்கநாதன் செட்டியார்

இவர்கள் தவிர எம்.எஸ். சுப்புலக்ஷ்மி—சதாசிவம் தம்பதி, ஒரிசா அரசு, என்.ஆர். ஸ்ரீநிவாசன், ஆர். மாதவ நரசிம்மன் போன்றவர்களையும் குறிப்பிடலாம். இந்தியாவில் மட்டுமின்றி, அயல்நாடுகளிலிருந்தும் பலப்பலர் 'செக்' அனுப்பி உதவியிருக்கிறார்கள்.

கேள்வி: திருப்பணியில் இடையில் ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டதுண்டா?

பதில்: உண்டு. சிமெண்ட் தட்டுப்பாடு ஒருமுறை ஏற்பட்டுவிட்டது. அப்போது தமிழக அரசு தலையிட்டு உதவியது. ஆனால் நிதிப் பற்றாக்குறை ஒரு பிரச்னையாகப் பெரிய அளவில் உருவெடுக்கவில்லை. மாற்றி மாற்றி யாராவது ஒரு பக்தர் உள்ளத்தில் திருப்பணிக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீரெங்கநாதர் அருளால் தோன்றிக்கொண்டே இருந்தது. பொறியியல் வல்லுனர்கள், ஸ்தபதி, சிற்பக் கலைஞர்கள் தொழிலாளர்கள் எல்லோரும் நன்றாக ஒத்துழைத்துப் பணியாற்றினார்கள். எங்களையெல்லாம் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு தன் காரியத்தை ஸ்ரீரெங்கநாதப் பெருமாள் தானே நிறைவேற்றிக் கொண்டார் என்பதுதான் உண்மை!

''கோபுரம் கட்டி முடிந்ததும் இலங்கை அழிந்துவிடும்'' என்று பேசப்படுவது குறித்துக் கேட்டபோது ஜீயர் ஸ்வாமி சற்று வேகத்துடன் ஆங்கிலச் சொற்றொடரையே பிரயோகித்தார்:

''இதை யாரும் நம்ப வேண்டாம். வீண் புரளி. Cock and bull story'' என்றார்!

— வி. சௌரிராஜன்

8



வாழ்க்கை வளம் பெற...



அவனை பாரசூட்டிலிருந்து குதிக்கச் சொன்னார்கள். அவனுக்கோ தயக்கம், பயம். குதிப்பது எப்படி என்று பலரையும் கேட்டான். அது பற்றி விவரமாகப் படித்துக் கொண்டிருந்தான். அங்கு வந்த ஆசிரியர் சொன்னார்: "தம்பி! தரையில் இருந்தபடியே விமானத்திலிருந்து குதிப்பதைப் பற்றி ஓரளவுதான் தெரிந்து கொள்ள முடியும்!"

'தரையில் இருந்து கொண்டு நீந்தக் கற்றுக் கொள்ள முடியாது' என்பது வசனம். தொழிலில் இறங்காமல், அதன் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ளாமல் தொழிலில் வெற்றியடைய முடியாது.

புதிய எல்லைகளை வகுப்போம்

ஆபத்து என்று தெரிந்தும், விபத்துக்கள் இருக்கும் என்று பிறர் விளக்கியும், நஷ்டம் ஏற்படலாம் என்று அறிந்தும், ஒரு மனிதன் துணிந்து இறங்குகிறானே அந்தத் தைரியத்தைத்தான் ஆங்கிலத்தில் 'ரிஸ்க்' (**Risk**) எடுத்தல் என்று கூறுகிறார்கள். "துணிந்தவனுக்கு துக்கமில்லை!" என்பது பழமொழி.

துணிந்து இறங்கும்போது நாம் நமது எல்லைகளை மீறுகிறோம். நமது திறமைகளைச் சோதிக்கிறோம். புது எல்லைகளை வகுக்கிறோம். தெரியாத உலகில் காலடி எடுத்து வைக்கிறோம். இருக்கும் நிலையில் நமக்கு ஏற்படும் அதிருப்தியின் விளைவாக இன்றுள்ள நிலையைவிட உயர வேண்டும் என்ற உந்துதலின் விளைவாக எழும் செயல் அது. நிறைவை நோக்கிய பயணத்தில் புதிய ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொண்டு முன்னேறுவதில், ஆபத்துக்களை எதிர் கொள்வதில் ஒரு 'திரில்' இருக்கிறது. வீர உள்ளம் படைத்தவர்கள் அந்தத் திரில்லை அனுபவிக்கவே விரும்புவார்கள்.

துணிந்து இறங்குவது என்பது குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு கொஞ்சங்கொஞ்சமாக இறங்கி கரைக்கருகே குளித்துவிட்டு வருவதைப் போன்றது அல்ல. மரக் கிளையிலே இருந்து நடுக் குளத்தில் துணிந்து குதிப்பதைப் போன்றது. பொங்கும் அலைகளைச் சமாளித்து, கடலில் இறங்கிக் குளித்துவிட்டு வருவதைப் போன்றது.

திட்டமிடாமல் எதிர்காலத்துக்குள் புகுவது அசட்டுத்தனம். எந்தப் புதிய முயற்சியிலும் யோசித்தல், திட்டமிடல், வெற்றிக்கான வழிகளை ஆராய்தல், படிப்படியான முன்னேற்றத்தை நிர்ணயித்தல் முதலியன உண்டு. ஆயினும் துணிந்து இறங்குவதில், லாபமா நஷ்டமா, பலன் விளையுமா விளையாதா, என்பதைத் தெளிவாகக் கடைசி வரை, காரண காரியங்காட்டி விளக்கிவிட முடியாது. அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. நாம் எடுக்கும் விஷயத்தின் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று முன்கூட்டியே நாம் நூறு சதவிகிதம் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

துணிந்து காரியத்தில் இறங்குபவர்கள், நஷ்டம் ஏற்படலாம் என்று தெரிந்தும் இறங்குகிறார்கள். ஆபத்து — ரிஸ்க் — உண்டு என்று அறிந்தும் செய்கிறார்கள். ஓய்வு நேரத்தை இழப்பது, குடும்பத்தைச் சில காலம் மறப்பது போன்ற சில தியாகங்களைச் செய்ய முன் வருகிறார்கள். தாங்கள் இன்று இருக்கிற நிலையையே பணயம் வைக்கிறார்கள். சுய கௌரவத்தையே அந்தப் போட்டியில் பணயம் வைக்கிறார்கள். கிடைக்கும் பலன் இதை எல்லாம் ஈடுகட்டும் என்ற நம்பிக்கை தான் காரணம்.

எனது நண்பர் ஓர் இளைஞர், இருபத்தி

எட்டு வயது இருக்கும். பி.ஏ. படித்தவர். 'சப்—ரிஜிஸ்டிரார்' அலுவலகத்தில் ஏழு வருடங்களாகக் குமாஸ்தாவாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். முன்னேற்றத்திற்கு அதிகம் வழியில்லாத இடம் அது. தெரிந்தும் இருந்தார். ஆனால் தினமும், அது பற்றிக் குறைபட்டுக் கொண்டிருந்தார். "சனியன்! இதை விட்டு விலகினால்தான் விமோசனமுண்டு!" என்று கூறுவாரே தவிர, துணிந்து வேறு ஒன்றில் இறங்கத் தைரியம்இல்லை.யாரோஒருவர்இவருக்காகப் பாடுபட்டு முயற்சி எடுத்து இவரை வேறு ஒரு நல்ல வேலையில் உட்கார வைப்பார் என்று நம்பிக் கொண்டு இவர் காலத்தை ஓட்டுவது போல் தோன்றும். அவ்வளவு தான். முணுமுணுத்தபடியே காலத்தை ஓட்டி ரிடயரும் ஆகிவிட்டார். மாட்டிக் கொண்ட வேலை அவர் வாழ்வை நிர்ணயித்தது.

நமது எதிர்காலத்தை நாம்தான் உருவாக்குகிறோம். நாம் துணிந்து ஒரு முடிவு எடுத்து இறங்கினால்தான் விஷயங்கள் நாம் விரும்புகிற மாதிரி போகும். நாம் விரும்புகிற மாதிரி இன்று போகாவிட்டாலும், நமது வாழ்வை நிர்மாணிக்கும் ஒரு முயற்சி, ஒரு சக்தி, நம்முடையதாக இருக்கும். தவறுகளை யோசித்துத் திருத்திக் கொண்டு மீண்டும் முயன்றால் நல்ல பலன் ஒரு நாள் விளையும்.

உலகில் பலர், எதிர்பாராத சந்தர்ப்பங்கள் நமது மடியில் மந்திரத்தில் மாம்பழங்கள் உதிர்வதுபோல் உதிரும் என்று எண்ணிக் கொண்டு வாழ்நாளைக் கடத்துகின்றனர். காதல் மணம்தான் நல்லது என்று நம்பினால் போதாது. உலகில் இருக்கும் பல பெண்களுக்கும் அது தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் தாங்களாகவே நம்மை வந்து காதலிக்கத் துவங்க மாட்டார்கள். நாம் தான், துணிந்து, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அணுக வேண்டும். இந்தப் பெண், நமது பெற்றோர் தேடித் தரும் வாழ்க்கைத் துணையைவிட நல்ல பெண்ணாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம் என்று விளைவுகளை அறிந்து நெருங்க வேண்டும். அந்த நெருக்கம் வளரலாம் அல்லது குறையலாம். மணம் உடையலாம். ரிஸ்க் எடுக்கத்தான் வேண்டும்.

'மெனக்கெட்டால் என்னால் முடியும்!' என்று சிலர் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். இவர்களை யார் 'மெனக்கெட' வேண்டாம் என்று சொன்னார்கள்? தங்களது துணிவின்மைக்கு — கையாலாகத்தனத்திற்கு மனிதர்கள் கட்டும் சப்பைக்கட்டு இருக்கிறதே, — ஏராளம்! சப்பைக்கட்டும், சமாதானமும், நமது துணிவின் மண்டையிலடிக்கிறது; நமது உழைப்பை முடக்குகிறது.

மூட நம்பிக்கைகள் நாம் துணிவுடன் இறங்குவதை — 'ரிஸ்க்' எடுப்பதைத் தடை செய்கின்றன. பெரிய பதவி வந்தபோதும் அதைக் கண்டு ஒரு மனிதன் அஞ்சுகிறான்; அந்தப் பதவி தன் குறைகளை எங்கே காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயப்படுகிறான்!

இதைச் செய்தால் அப்பாவுக்குப் பிடிக்காதோ? அவருடைய அன்பை இழந்து விடுவோமோ என்று அஞ்சும் குழந்தை, சுதந்திர உணர்வு அதிகம் இல்லாத குழந்தையாகத் தான் வளரும். தமிழ்ச் சமுதாயம் ஒரு சார்ந்து நிற்கும் சமுதாயமாக இன்று இருக்கிற காரணத்தால்தான் அது முன்னேறவில்லை. மாநில அரசு எதற்கும் தில்லியை எதிர் பார்க்கும் மனோபாவம். அமைச்சர்கள் எதற்கும் முதல்வரை எதிர்பார்க்கும் மனோபாவம். இருக்கிற நிதி வசதிகளை வைத்துக் கொண்டு துணிந்து நாமே காரியங்களைச் செய்யவில்லையானால், இருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி நமக்குட்பட்ட முடிவுகளை நாமே எடுக்கவில்லையானால் எங்கே நாடு முன்னேறும்?

"தேங்கிக் கிடந்த குட்டை நாற்றமெடுத்து விடும்!" என்றான் ஓர் அரேபிய அறிஞன்.


— டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

"என்ன சார் சொல்றீங்க, வீட்டுக்கு ஆஸ்தி வாரம் போட்டதோட வேலை நிக்குதுங்களா?"

"ஆமாம் சார். இருந்த ஆஸ்தி எல்லாம் அஸ்தி வாரத்தோட முடிஞ்சுட்டது!"

— ஊழை. அ. கதிர்வேல்.






டாக்டர் ஜான்ஸன் ஆங்கில அகராதியைத் தொகுத்தவர். மிகவும் மண்டைக்கனம் பிடித்தவர் என்று அவருக்குப் பெயர் உண்டு.

இங்கிலாந்தைச் சார்ந்த அவருக்கு ஸ்காட்லாந்துக்காரர்களைக் கண்டால் பிடிக்காது. அந்த வெறுப்பைக் கூட அவர் எழுதிய அகராதியில் காட்டி இருக்கிறார்:

'ஓட்ஸ் என்பது ஒருவகை தானியம்' என்று தமது அகராதியில் அவர் பொருள் கூறிவிட்டு, அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் 'இந்தத் தானியத்தை இங்கிலாந்தில் குதிரைகளும், ஸ்காட்லாந்தில் மனிதர்களும் சாப்பிடுவார்கள்' என்று குறிப்பிட்டார்!

— எஸ். முகம்மது யூசுப்



தரத்திலும், திறத்திலும் தனித்து நிற்கும்
UMS
UNI TV ANTENNAS
புயல் காற்றுக்கும், பலத்த
மழைக்கும் ஈடு கொடுக்க,
சிறப்பான டைகாஸ்ட்
கிளாம்புகளைக் கொண்டு,
உயர்ந்த தொழில் நுணுக்
கத்துடன் தயாரிக்கப்பட்டது.
UMS
RADIO FACTORY (P) LTD.
Avanashi Road, Coimbatore - 641 018
Branches : ● 102, Residency Road, Bangalore - 560 025 Phone : 578329 ● 7/229, Coimbatore Road, Palghat - 678 001, Phone : 5362 ● 165, Greams Lane, Greams Road P.O. Madras - 600 006 Phone : 473339
SASI/UMS/A/2/87

* கா. அப்துல் மஜீத், திருமயம்

? பக்தவத்சலம் காலத்திய ஆட்சி முறையைத் திரும்பக் கொணர வேண்டும் என்று கல்கி தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதே; அப்போது உணவுப் பற்றாக்குறை இருந்தது; மண்ணெண்ணெய் கியூ நீண்டது; மொழிப் பிரச்னை தீரவில்லை; தெற்கு தேய்ந்தது — இதையெல்லாம் சிந்திக்காமல் எழுதியது சரிதானா?

இலவச காலனித் திட்டம் நிரூபிப்பது என்ன?

! பக்தவத்சலம் காலத்திய ஆட்சி முறையைத்தான் திரும்பக் கொணரச் சொன்னோமே தவிர, அவர் காலத்திய பிரச்னைகளைத் திரும்பக் கொண்டுவரச் சொல்லவில்லை. இரண்டையும் குழப்பிக் கொள்ளாதீர்கள். பிரச்னைகள் எக்காலத்திலும் இருக்கும். அவற்றின் தன்மைதான் மாறுபடும். ஆனால் ஜனநாயகத்தின் ஆட்சி முறையும் சிறந்த மரபுகளும் காப்பாற்றப்பட வேண்டியவை. ஆட்சிக்கு வருகிறவர்கள் அவற்றை மாற்றிவிடக் கூடாது.

* கிருஷ்ண குருராஜ், விருத்தாசலம்

? இந்திய மக்களின் உழைப்புக்கும் ஜப்பானிய மக்களின் உழைப்புக்கும் என்ன வித்தியாசம்?

! இருவருமே உழைப்புக்கு அஞ்சாதவர்கள் தான். அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிற முறையில்தான் வித்தியாசம். செய்யும் தொழிலே தெய்வம் என்ற பக்தியும், நாட்டுப் பற்றும், இந்த இரு உணர்வுகளால் விளையும் பெருமிதமும் அங்கே மிகுதி. இவை குழந்தைப் பருவத்திலேயே அங்கு விதைக்கப்பட்டு வாழ்நாள் முழுதும் வளர்க்கப்படுகின்றன.

* ஷாலினிபிரியன், குமராட்சி

? தலைவர்களுக்கு வாள் எதற்காகத் தருகிறார்கள்?

! மனசாட்சியைத் தீர்த்துக் கட்டுவதற்காக இருக்கலாம்.

* வி. அருண், கீரமங்கலம்

? 'எனக்குப் பதவி ஆசை கிடையாது; மக்களுக்குப் பணியாற்றவே காங்கிரஸில் சேர்ந்திருக்கிறேன்' என்று பிரேம் நசீர் கூறியிருக்கிறாரே?

! அப்பன் குதிருக்குள் இல்லை, இல்லவே இல்லை!

* இரா. வேலமணி, சின்னசேலம்

? 'எம்.ஜி. ஆரின் நண்பராக இருந்தால் மட்டுமே ராஜீவ் காந்திக்கு வலிமை' என்று குழந்தைவேலு குறிப்பிட்டிருக்கிறாரே?

! கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறது என்று நம்புகிறவர்கள் இதையும் ஏற்பார்கள்.

* வீரத் திருமகன், வேதாரண்யம்

? இலவச காலனித் திட்டம் அறிவித்ததன் மூலம் தாம் ஓர் ஏழைப் பங்காளன் என்பதை எம்.ஜி. ஆர். நிரூபித்துவிட்டார் என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

! சுய கௌரவம் இழந்து மக்கள் எல்லாத்



* 'இல்லவே இல்லை'



* சந்தித்த பிரச்னைகள்

தேவைகளுக்கும் அரசிடம் கையேந்தி நிற்கிற நிலையைப் படிப்படியாக உருவாக்குவது சரியில்லை. அவர்கள் உழைத்துச் சம்பாதித்து தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே வாங்கிக் கொள்ளும் பொருளாதார மேம்பாட்டினை அடையச் செய்ய வேண்டும். எனவே, வேலை வாய்ப்புப் பெருகுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும், அதற்குண்டான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமே அரசின் தலையாய கடமை. அடுத்து, அனைவருக்கும் கல்வி, குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்றவை. அரசு, நிரந்தரப் பலன் தரும் அம்சங்களுக்கு முக்கியத்துவம் தராமல் வரிப் பணத்தைத் திசை திருப்பி விடுவது வோட்டுக்களைக் கருதித்தான். விஷய ஞானமில்லாத மக்கள் ஏமாந்து போகிறார்கள். ஒரு ஜதை செருப்பு ஒரு மாதம் உழைக்கும்; ஒரு வேலை கிடைத்தால் வாழ்நாளெல்லாம் உதவும்.

* ஏ. ஹரிதாஸ், அச்சம்பாளையம்

? 1984 நவம்பரில் தில்லி கலவரங்களின்

போது போலீஸ் சரியான நேரத்தில் நட வடிக்கை எடுக்கவில்லை என்று மிஸ்ரா அறிக்கை கூறுகிறதே?

! அதை மட்டும் கூறி, சில இ. காங்கிரஸ் தலைவர்கள் செய்த தவறுகளைப் பூசி மழுப்பு வதால்தான் அந்த அறிக்கை, கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் கரங்களால் தீக் கிரையாகியுள்ளது.

* பி.எம். பிரபாகரன், திருமருகல்

? அரசியல் அராஜகத்தின் ஆரம்பக் கட்டம்....?

! சுதந்திர இந்தியாவில் அது சுதந்திரம் பெற்ற மறுகணமே ஆரம்பமாகிவிட்டது. இல்லையென்றால் காங்கிரஸைக் கலைக்கு மாறு காந்திஜி சொல்லியிருப்பாரா?

* மு.வே. மலர்மகள், திருமயம்

? ஜாதி ஒழிய தராசு தரும் பதில்?

! அனைவருக்கும் கல்வி அறிவு; பொருளா தார மேம்பாடு. நிமிர்ந்து நிற்கக் கற்றவனை யாரும் குட்ட முடியாது. சமத்துவம் தன்னால் ஏற்பட்டுப் போகும். ஆனால் ஜாதி வேற்று மைகளை வளர்ப்பதிலும் மக்களைப் படிப்

• 'காங்கிரஸைக் கலை!'



• 'கோபுரப் பொம்மை'

பறிவற்றவர்களாகவும் ஏழைகளாகவும் வைத்திருப்பதிலும் தேர்தல் நோக்கில் ஆட்சி யாளருக்கு ஆதாயம் இருக்கிறதே!

* பாசு, உத்தரமேரூர்

? ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆன் வைத் துள்ளார்; ஒவ்வொரு கிறிஸ்துவரும் பைபிள் வைத்திருக்கிறார். ஒவ்வொரு இந்துவும்....

! கீதை, இராமாயணம் அல்லது பாரதம் வைத்திருக்க வேண்டும். ராஜாஜியும் வேறு சிலரும் பல்வேறு மொழிகளில் தெளி வாகவும், சுருக்கமாகவும் எழுதியுள்ள இந்த நூல்களை, வாங்கும் வசதியற்றவர்களுக்கு இலவசமாக விநியோகிக்க இந்து மதத் தலைவர்கள் ஓர் இயக்கமே நடத்த வேண்டும்.

* வே. ஜெகநாதன், புதுக்கோட்டை

? 1.2.87 இதழில் போனஸ் என்பது இலா பத்துடன் சம்பந்தப்பட்டது என்று கூறியிருக் கிறீர்கள். போனஸ் என்பது இலாபத்தில் பங்கு என்பதல்ல; தள்ளி வைக்கப்பட்ட ஊதியமே. அதாவது அன்றாடம் ஊதியம் தராமல் மாதக் கடைசியில் தருவதால் ஏற் படும் இழப்பை ஈடு செய்வதேயாகும். இவ் வாறு உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது தெரியாதா?

! ஒரு தொழிலகத்தில் உற்பத்தியாகும் பொருள் உடனே விற்பனையாகி லாபத்தை ஈட்டித் தந்துவிடுவதில்லை. மொத்த வியா பாரி, சில்லறை வியாபாரி என்று கைமாறி விற்கப்பட்டு, அந்தப் பணம் மீண்டும் கை மாறி உற்பத்தியாளரிடம் வந்து சேர ஒரு மாதமென்ன, பல மாதங்கள்கூட ஆகலாம். இப்படி தள்ளி வைக்கப்படும்போது அதற்கான பாங்கு வட்டி வேறு செலுத்துகிறார் உற்பத்தியாளர். அவ்வாறிருக்க, தள்ளி வைக்கப்பட்ட ஊதியம் கோருவது எவ்வகை யில் நியாயம் என்ற கேள்வி பொருளாதார அடிப்படையில் எழக் கூடும். அதுஒருபுற மிருக்க, தங்கள் கருத்துப்படியே பார்த்தா லும், போனஸ் என்பதன் அர்த்தத்தை அரசு மாற்றி அமைத்துள்ளது உண்மைதானே? போனஸ் என்பதற்கு அகராதி தரும் அர்த்தம் தள்ளி வைக்கப்பட்ட ஊதியம் என்பதல்லவே? விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஊதிய உயர்வு கோருவதில் தவறில்லை என் பதை நானும் 1.2.87 இதழில் முதல் வரியி லேயே வற்புறுத்தினேன். அதே நேரத்தில் பணவீக்கத்தையும் அதன் விளைவாக மேலும் விலைவாசி உயர்வதையும் தவிர்க்கப் பொரு ளாதார ரீதியில் ஒரு யோசனையும் சொன் னேன். மனிதாபிமானத்தையும் பொருளா தாரத்தையும் புத்திசாலித்தனமாக இணைக் கும்போதுதான் நாடு உருப்படும். ஒன்றை மறந்து மற்றொன்றுக்கு மட்டும் முக்கியத் துவம் தந்தால் அரோகராதான்!

ரூ 10 பரிசு பெறுபவர்:
ஆர்.எம். ரகுநாதன்.
(வீரத் திருமகன்)
டி.டி.பி. ரோடு,
வேதாரண்யம்—614 810.



பூ மழை பொழியுது

சிங்கப்பூர்வாசியான ராஜீவ் தன் தங்கை நதியாவிற்குப் பெரிய இடத்து மாப்பிள்ளையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார் ஒரு பக்கம். அந்த நதியாவைச் சிங்கப்பூரின் வேலையில்லாப் பட்டதாரி சுரேஷ் காதல் பண்ணுகிறார் ஒரு பக்கம் (ஒருதலைக் காதல்.) இங்கே தமிழ்நாட்டுக் கிராமத்தவராகிய விஜயகாந்த், சிங்கப்பூர் பெண்ணாக இருந்தாலும் முறைப் பெண் நதியாவைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சபதம் போடுகிறார் ஒரு பக்கம்.

என்ன ஆகிறது?

கதாநாயகன் விஜயகாந்த் கட்டின வேட்டியுடன், கூட்டிக் கொண்ட துணையான செந்திலுடன் சிங்கப்பூர் வந்து சேர்கிறார்.

நதியாவும் விஜயகாந்தும் காதலிக்கிறார்களா, சுரேஷும் நதியாவும் கல்யாணம் செய்து கொள்கிறார்களா என்பதெல்லாம் வெள்ளித் திரை விளக்கும் மீதிக் கதை.

கதை முழுக்க முழுக்கச் சிங்கப்பூரிலேயே நிகழ்கிறது.

முறைப் பெண் நதியாவைக் காதலிக்க, விஜயகாந்த் கைக்கொள்ளும் அணுகுமுறைகள் எல்லாமே சவசவ. வித்தியாசமாக எதையாவது செய்திருக்கலாம்.

நதியாவிற்குப் பொய் என்றாலே பிடிக்காது என்பதை முன்னால் சொல்லி அழுத்துவதைப் பார்க்கும்போது பின்னால் ஏதோ பெரிய விஷயம் வைத்திருக்கிறார்கள் போல என்று எதிர்பார்த்தால், எதிர்பார்த்த சமாசாரம் பூகம்பமாக இல்லாமல் புஸ்வாணமாகப் போய்விட்டதில் ஒரு சின்ன ஏமாற்றம் தான்.

சுரேஷ் சரியான கனவு மன்னர். நதியாவை ஹிந்து முறைப்படி ஒரு தடவை கல்யாணம் செய்து கொள்கிறார். கிறிஸ்துவ முறைப்படி மோதிரம் மாற்றுகிறார்: டைரக்டருடைய சாமர்த்தியம் தெரியும் இடங்களில் இது ஒன்று.

சம்பிரதாயம் மாறாமல் இரண்டு மூன்று சண்டைக் காட்சிகள். புத்தர் கோவில் சண்டை பரவாயில்லை. விஜயகாந்த் அலட்டிக் கொள்ளாமல் நடித்துவிட்டு(?)ப் போயிருக்கிறார்.

ராஜீவ் முகத்தில் நல்ல இளமை. நடிப்பில் நல்ல ஸ்டைல். இருந்தும் அவர் ஓஹோ என்று ஆக முடியவில்லையென்றால் அதற்கு ஒரே காரணம்தான் இருக்க முடியும். அதிர்ஷ்டமின்மை.

பாடல்களில் ஹிந்தி வாடை அதிகம். ஆர்.டி. பர்மன் ம்யூஸிக். அவருடைய பழைய சங்கீதத்தை இன்னொரு முறை கேட்கிறார்போல் இருக்கிறது. வாலியின் வைத்தியப் பாட்டு இனிமை. உட்கார்ந்து சிந்தித்து, ரசிக்க வேண்டிய வரிகள்.

கிளைமாக்ஸை நெருங்கும்போதுதான் டைரக்டர் கதையில் விறுவிறுப்பு மசாலாவை அதிகமாகச் சேர்த்திருக்கிறார். இவர் துப்பாக்கியைப் பிடிப்பதும், அவர் மாலையும் கழுத்துமாய் நிற்பதும் என்று பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறார்.

உங்களுக்கு அவகாசம் இருந்தால், ஒரு முறை போய்ப் பார்ப்பதில் தப்பில்லை.

— ஜெயமன்மதன்

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏ வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 450/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)



நளினி... விழித்தெழும்
போதே புன்னகை. பாம்பே
டையிங் டவலும், ஷீட்டும்
அணைத்த சுகம் அவ்வளவும்.


பாம்பே டையிங்
அனுபவத்தில்
திளைத்தெழுங்கள்.
நாளெல்லாம்.
இரவிலும்தான்.



பிற்பகல்... கரண்
ரியா ஜோடி
பொருத்தம் பற்றிய
சிந்தனை—
பாம்பே டையிங்
ஷர்ட்டிங் அணிவரி
சைகளிலிருந்து.



வித்யாவும் ஆலியாவும்.
பொன்மாலைப் பொழுதிலே
புதுக்கவிதைகள் போல
ஹைக்கூ சேலைகள் அணியும்
அழகிகள்.



கரண். ஸெஸரி சூட்
அணிவரிசையிலிருந்து சூ
அணிந்து இரவினை எதிர்
கொள்கிறார்.

பாம்பே டையிங் கடைகளில் கிடைக்கும்.

சூட்டிங், ஷர்ட்டிங், சேலைகள், உடுப்புத் துணிகள், டவல்கள், ஷீட்டுகள் மற்றும் அலங்காரத் துணிகள்.

பாம்பே டையிங்


PHILIPS
பிலிப்ஸ்
அரை பல்பு.
இதை வாங்குவானேன்?
நம்பி வாங்குங்கள்
பிலிப்ஸ்.
பார்த்தால் எல்லா பல்பும் ஒரே மாதிரி தான். நாட்பட மோசமான தரம் வெளிப்படும்: குறைந்த வெளிச்சம், அதிக மின்செலவு, பல்பு செயலற்றுப்போதல் என்றிவ்வாறு. எனவே தான். கேட்டு வாங்குங்கள் பிலிப்ஸ். ஒவ்வொரு பல்பையும் 100 % தரச்சோதனை செய்யும் நிறுவனம். உங்கள் பணத்திற்கு 100 % மதிப்பு தருவது.
100 % நம்புங்கள்.
வாங்குங்கள் பிலிப்ஸ்.
PHILIPS
PHILIPS
தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்.
ஆனல் பிலிப்ஸ் என்றுலே நம்பிக்கைக்கு உறுதி.
பிலிப்ஸ்–ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்